கல்கி



KALKI பிப்ரவரி 17, 1952

4 அணா



நாளுக்கு நாள்
அதிக ஆரோக்கியமான
தெளிவுள்ள சருமம்
ரெக்ஸோனாவிலிருக்கும் 'கேடில்'
உங்கள் சருமத்தை அதிக தெளி
வுடையதாகவும், அழகுடையதாக
வும் செய்யும். தினமும் இருமுறை
இச்சோப்பினால் கழுவுங்கள்.
Rexona
Rexona
BLENDED WITH CADYL
ரெக்ஸோனா
'கேடில்'* கலந்த சோப்
இது ஒன்றே
* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்
கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.
RP. 86-60 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

கல்கி பொருளடக்கம்


மலர் 11
இதழ் 29

1952 பிப்ரவரி 17


கர ௵
மாசி 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

“டெல்லியில் நாங்கள்!”



இந்திய பார்லிமெண்ட் தேர்தலில் காங்கிரஸ் பெருமித வெற்றி அடைந்திருக்கிறது.



சென்னையில் பராமரிப்பு மந்திரி சபையின் ஆட்சி நடந்து வருகிறது.

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 29

மந்திரிகள் ராஜிநாமா

சென்னை மந்திரிகளில் தேர்தலில் தோற்றவர்கள் அனைவரும் ராஜிநாமா செய்தார்கள். சென்னைக் கவர்னர் முதன் மந்திரியின் ராஜிநாமாவைத் தவிர மற்ற ராஜிநாமாக்களை ஒப்புக் கொண்டார். கனம் குமாரசாமி ராஜாவையும் மற்ற மந்திரிகளையும் கொண்ட 'பராமரிப்பு' மந்திரி சபையைத் தற்காலிகமாகக் கடனாற்றும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார். அதன்படி பராமரிப்பு மந்திரி சபையின் ஆட்சி இன்று சென்னை மாகாணத்தில் நடந்து வருகிறது.

இத்தகைய பராமரிப்பு மந்திரி சபைக்கு அவசியம் என்னவென்று தெரியவில்லை. கவர்னரே இரண்டு மாதத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி யிருக்கலாம். அதனால் நிர்வாக இயந்திரம் ஸ்தம்பித்துப் போய் விடாது.

ஆனால், காங்கிரஸ் மேலிடத்தின் விருப்பத்தின்படி மேற்படி ஏற்பாடு நடந்திருப்பதாக அறிகிறோம். மேலிடத்தின் கருத்தின்படி நடக்கக் காங்கிரஸ் மந்திரிகள் முன் வந்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். இம்மாதிரி கட்டுக் கடங்கும் தன்மையைப் பேச்சிலும் செயலிலும் ஆரம்பத்திலிருந்து கைக் கொண்டிருந்தால் இம் மாகாணம் இன்று இந்த நிலைக்கு வந்திராது.

"காங்கிரஸ் மேலிடம் சொன்னாலும் நாங்கள் கேட்க மாட்டோம்!" "நேரு என்ன எங்களுக்குச் சொல்வது? நாங்கள் எதற்காகக் கேட்பது?" என்பவை போன்ற பேச்சுக்கள் எவ்வளவு அனர்த்தமாக முடியும் என்பதைப் பார்த்தாகி விட்டதல்லவா?

தேர்தலில் வெற்றி பெற்ற காரணத்தினால் இன்று 'பராமரிப்பு' மந்திரி சபையில் இருப்பவர்களில் ஸ்ரீ ரோச் விக்டோரியாவும் ஸ்ரீ ஏ. பி. ஷெட்டியும் உளர். இம் மாகாணத்தில் உணவுப் பிரச்னையினால்தான் காங்கிரஸ் தோல்வியடைந்தது என்று சிலர் சொல்லி வந்தார்கள். இது எவ்வளவு தவறான காரணம் என்பதை மேற்படி இரு மந்திரிகளும் நிரூபிக்கிறார்கள். ஸ்ரீ ரோச் விக்டோரியா உணவு இலாகா மந்திரி; ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி விவசாய இலாகா மந்திரி. காங்கிரஸ் அடைந்த விபத்துக்கு உணவுப் பிரச்னை அதாவது ஆறு அவுன்ஸ் அரிசி காரணமாக இருந்திருக்குமானால் இந்த இரண்டு மந்திரிகளும் அல்லவா தோற்றிருக்க வேண்டும்? அவர்கள் தேர்தலில் ஜயித்து வந்து இன்று பராமரிப்பு மந்திரி சபையிலும் இருக்கிறார்கள். பாவம், சாதுக்கள்! அவர்களால் நல்லது மில்லை; கெடுதலும் இல்லை. காங்கிரஸ் அடைந்த விபத்துக்கு ஆறு அவுன்ஸ் அரிசி காரணமும் இல்லை.

தோல்வியுற்று ராஜிநாமா செய்த மந்திரிகள் எல்லாரும் தங்கள் சொந்தக் குற்றங்களினால் தோல்வியுற்றார்கள் என்று கருதுவது முற்றும் தவறான கொள்கை. சென்ற ஐந்து வருஷத்திய காங்கிரஸ் சர்க்கார் நிர்வாகம், காங்கிரஸ் ஸ்தாபன நிர்வாகம், காங்கிரஸின் உட்பூசல்கள் இவற்றுக்கு அவர்கள் பலியானார்கள்.

ராஜிநாமா செய்த மந்திரிகளில் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் சென்னை மாகாணத்தின் மராமத்து இலாகா மந்திரியாக இருந்து மிகச் சிறந்த பணியாற்றி யிருக்கிறார். எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடனும் நிர்வாகத் திறமையுடனும் இந்த மாகாணத்தின் நிரந்தரமான நன்மைக்குரிய நீர்ப்பாசனத் திட்டங்களை அவர் வகுத்துக் காரியத்திலும் நடத்தி வைத்திருக்கிறார் என்பதை இன்று வேறுவிதக் கோபங்களினால் மக்கள் அறிந்து கொள்ளத் தவறி யிருக்கலாம். ஆனால் வருங்காலத்தில் அவருடைய ஐந்து வருஷத் தொண்டுகளை இம்மாகாண மக்கள் வியந்து பாராட்டுவார்கள் என்பது நிச்சயம்.

அவ்வாறே ஸ்ரீ மாதவமேனன் கல்வி இலாகா மந்திரி பதவியைச் சிறந்த முறையில் வகித்து வந்தார். அந்த இலாகாவில் ஏற்பட்டிருந்த பழைய குளறல்களைப்

பெரிதும் நிவர்த்தி செய்தார். கல்வி இலாகாவின் அர்த்தமற்ற சிவப்பு நாடாத் தடங்கல்களைப் புறக்கணித்து அநேக புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதற்கு உதவி செய்தார். ஆசிரியர்கள், பெற்றோர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

ஸ்ரீ மாதவ மேனன் சட்ட இலாகா, சிறை இலாகா மந்திரியாகவும் இருந்தார். அவருடைய காலத்தில் சேலம் சிறையில் துயரகரமான நிகழ்ச்சி ஏற்பட்டது. அதற்கு அவர் நேர் பொறுப்பாளி அல்ல; எனினும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்பாமல் ஏற்றுக் கொண்டார்.

அவர் சட்ட மந்திரியாயிருந்தபோது, நெடுங்காலமாகக் காங்கிரஸ் மகாசபையின் நோக்கங்களில் ஒன்றாயிருந்து வந்த நீதி—நிர்வாகப் பிரிவினைத் திட்டத்தை நிறைவேற்றி வைத்தார்.

தேர்தலில் தோற்றுப் போன காரணத்தினால், மேற்கூறிய இரு மாஜி மந்திரிகளும் தங்கள் ஆட்சியில் செய்து முடித்த நல்ல காரியங்களை நாம் மறந்துவிடக் கூடாது.

அரசியல் துறையில் ஏற்றத் தாழ்வுகள் இயல்பு. இன்று ஜயித்தவர்கள் நாளை தோற்பார்கள்; இன்று தோற்றவர்கள் நாளை வெற்றி மாலை சூடுவார்கள்.

பொது மக்களுக்கு உண்மையாகத் தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களுக்கு எத்தனையோ துறைகள் இருக்கின்றன. மந்திரி உத்தியோகம் பார்த்தால்தான் தொண்டு செய்யலாம் என்பதுமில்லை.

ராஜினாமா செய்த மந்திரிகளுக்குப் பொது நலத் தொண்டு செய்யும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் வருங்காலத்தில் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

யாரை நிராகரித்தார்கள்?

இப்போது நடந்த பொதுத் தேர்தலில் சென்னை மாகாண மக்கள் யாரை நிராகரித்தார்கள்! எந்தக் கட்சியை நிராகரித்தார்கள்!

சென்னை மக்கள் காங்கிரஸை அடியோடு நிராகரித்து விட்டதாகக் காங்கிரஸ் எதிரிகள் கொக்கரிக்கிறார்கள். ஆகையால் புதிய சட்ட சபையில் காங்கிரஸ் மந்திரிசபை அமைக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அதுமட்டு மல்ல; காங்கிரஸல்லாத மற்றக் கட்சிகள் கூட்டு முன்னணியாகச் சேர்ந்து புதிய மந்திரி சபை அமைக்கப் போவதாகவும் பறை சாற்றுகிறார்கள். அதற்காகப் பெரும் பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள்.

"சென்னையில் காங்கிரஸ் தோல்வி" என்று நாமும் சில சமயம் குறிப்பிடுகிறோம். முன் இரண்டு தடவைகளில்போலக் காங்கிரஸ் பெருமித வெற்றி அடையாதபடியாலும், சட்ட சபையில் முழு மெஜாரிட்டி பெறாதபடியாலும் "காங்கிரஸின் தோல்வி" என்று சொல்கிறோம்.

ஆனால் இதிலிருந்து சென்னை மாகாண மக்கள் காங்கிரஸை அடியோடு நிராகரித்து விட்டார்கள் என்று ஏற்படுகிறதா! அல்லது மற்றக் கட்சிகளை அங்கீகரிக்கிறார்கள் என்றுதான் ஏற்படுகிறதா!

இதைத் தெரிந்து கொள்ளுவதற்குச் சில தேர்தல் புள்ளி விவரங்களைப் பார்க்க வேண்டும். அதாவது இந்தப் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற ஸ்தானங்கள் எத்தனை, ஒவ்வொரு கட்சியும் பெற்ற வோட்டுக்கள் எவ்வளவு என்று பார்க்க வேண்டும்.

கட்சி	கைப்பற்றிய ஸ்தானங்கள்	தேர்தலில் பெற்ற	மொத்தம் வோட்டுக்கள்
காங்கிரஸ் கட்சி	152	70	லட்சம்
கம்யூனிஸ்டு கட்சி	61	24	,,
பிரஜா கட்சி	35	17	,,
கிரிஷிகர் கட்சி	15	6	,,
சோஷலிஸ்ட் கட்சி	13	12	,,
உழைப்பாளர் கட்சி	19	6½	,,
காமன்வீல் கட்சி	6	2	,,
சுயேச்சையாளர் *	63	50	,,

(* சுமார் 650 சுயேச்சையாளர் தேர்தலுக்கு நின்று 50 லட்சம் வோட்டுக்களைப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் சராசரியில் அவர்கள் ஒவ்வொருவரும் பெற்ற வோட்டுக்கள் மிகச் சொற்பமாகவே இருக்க வேண்டும்.)

மேற்கூறிய புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது என்ன தெரிகிறது!

சென்னை மாகாண மக்கள் காங்கிரஸை அடியோடு புறக்கணித்து விட்டார்கள் என்று சொல்ல இடம் இருக்கிறதா!

சென்னை மக்கள் காங்கிரஸை நிராகரித்திருக்கும் பட்சத்தில், கம்யூனிஸ்டுகளை இன்னும் அதிகமாக நிராகரித்திருக்கிறார்கள்; பிரஜா கட்சியை மிக மிக நிராகரித்திருக்கிறார்கள்; மற்றக் கட்சிகளைத் தலை குப்புற விழும்படியாக நிராகரித்துத் தள்ளியிருக்கிறார்கள்.

காங்கிரஸைத் தவிர்த்த மற்றக் கட்சிகள், சுயேச்சையாளர் எல்லாருடைய வோட்டுக்களையும் சேர்த்துக் கணக்கிட்டுக் "காங்கிரஸை மக்கள் நிராகரித்து விட்டார்கள்" என்று காங்கிரஸ் எதிரிகள் கூக்குரலிடுகிறார்கள்.

அதேமாதிரி கம்யூனிஸ்டுக் கட்சியைத் தவிர்த்த மற்ற எல்லாக் கட்சிகளின் வோட்டுக்களையும், பிரஜா கட்சியைத் தவிர்த்த மற்ற எல்லாரும் பெற்ற வோட்டுக்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், கம்யூனிஸ்டுகளையும் பிரஜா கட்சியையும் மக்கள் எவ்வளவு கடுமையாக நிராகரித்திருக்கிறார்கள் என்று தெரிய வரும்!

* * *

மந்திரி சபை அமைப்பது சம்பந்தமான விவாதங்களையும் இந்தப் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு கவனிக்க வேண்டும்.

தற்சமயம் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி முழு மெஜாரிட்டி பெற்றிருக்கவில்லை யாதலால் காங்கிரஸ் மந்திரிசபை அமைப்பது அவ்வளவு உசிதமில்லையென்று சிலர் கருதுகிறார்கள். காங்கிரஸ் ஸ்தாபனத்தின் வருங்கால நலத்தை முன்னிட்டே இவ்விதம் சொல்லுகிறார்கள்.

ஆனால் இந்த நிலைமையிலும் மந்திரிசபை அமைக்க உரிமை பெற்றுள்ள கட்சி ஒன்று உண்டு என்றால், அது காங்கிரஸ் கட்சியேயாகும்.

அறுபத்தொன்று ஸ்தானமும் முப்பத்தைந்து ஸ்தானமும் பெற்றிருக்கும் கட்சிகள் மற்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து மந்திரிசபை அமைக்கலாம் என்றால், நூற்றைம்பத்திரண்டு ஸ்தானங்கள் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு அந்த உரிமை எப்படி இல்லாமற் போகும்!

இருபத்துநாலு லட்சமும் பதினேழு லட்சமும் வோட்டுப் பெற்றவர்கள் இம் மாகாணத்தில்

மந்திரிசபை அமைக்கக் கூடும் என்றால், எழுபது லட்சம் வோட்டுக்களைப் பெற்றவர்கள் ஏன் மந்திரி சபை அமைக்கக் கூடாது!

முழு மெஜாரிட்டி பெற்ற அதாவது பாதிக்கு மேற்பட்ட ஸ்தானங்களைப் பெற்ற கட்சிதான் மந்திரிசபை அமைக்கலாம் என்று வைத்துக் கொண்டால், சென்னையில் இப்போது மந்திரி சபை ஏற்பட முடியாதுதான்.

கூட்டுச் சேர்ந்து மந்திரி சபை அமைக்கலாம் என்று வைத்துக் கொண்டால், அதற்கு மற்றவர்களைவிட உரிமையும் வசதியும் அதிகம் பெற்றுள்ள கட்சி காங்கிரஸ் கட்சியே யாகும்.

சென்னை மக்கள் காங்கிரஸை அடியோடு நிராகரித்து விட்டார்கள் என்று சொல்லுவது பெரும் பிசகு; காங்கிரஸை நிராகரித்ததைக் காட்டிலும் மற்றக் கட்சிகளை இன்னும் வலுவாக நிராகரித்திருக்கிறார்கள் என்பதை வோட்டுக்கள் நிரூபிக்கின்றன.

ஜனநாயகத்தில் இரண்டு அல்லது மூன்று கட்சிகள் போட்டியிட்டால் ஏதேனும் ஒரு கட்சிக்கு முழு மெஜாரிட்டி கிடைப்பது சாத்தியம். பல கட்சிகளும் சுயேச்சையாளர்களும் தலைக்குத் தலை போட்டியிட்டால் வோட்டுக்கள் பிரிந்து தான் போகும். எந்தக் கட்சிக்கு மற்றக் கட்சிகளைவிடக் கணிசமான அதிக வோட்டுக்கள் கிடைத்திருக்கின்றனவோ, அந்தக் கட்சிதான் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது என்று கருதப்பட வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 190 ஸ்தானங்களில் 96 காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகையால் தமிழ் மக்கள் மொத்தத்தில் காங்கிரஸைத்தான் ஆதரித்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

கம்யூனிஸ்டுக் கட்சியின் வெற்றியை நாம் குறைவுபடுத்திக் கூற விரும்ப வில்லை. அக் கட்சியார் எவ்வளவோ எதிரிடையான சந்தர்ப்பங்களின் கீழ் தங்களுடைய அபாரமான பிரசார முயற்சிகளைக் கையாண்டு நல்ல வெற்றியை அடைந்துதா னிருக்கிறார்கள்.

ஆனால் இம் மாகாண மக்களின் நம்பிக்கையை அவர்கள் காங்கிரஸைவிட அதிகம் பெற்றுவிட்டார்கள் என்று தற்சமயம் சொல்ல முடியாது.

''ஹிந்து'' பத்திரிகையின் யோசனை

புதிய சென்னைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ்வாதிகள் கொள்கையில் அதிக மாறுபாடில்லாத மற்றக் கட்சிகளுடனும் சுயேச்சையாளர்களுடனும் சேர்ந்து மந்திரி சபை அமைக்கவேண்டும் என்று ''ஹிந்து'' பத்திரிகை யோசனை சொல்லி யிருக்கிறது.

நிதானத்துக்கும் தீர்க்காலோசனைக்கும் பெயர் போன ''ஹிந்து''வின் யோசனைக்கு இம்மாகாணத்துக் காங்கிரஸ்வாதிகள் மதிப்புக் கொடுத்துச் சிந்திக்க வேண்டியது அவசியம்.

புதிய சென்னைச் சட்ட சபையில் கட்சிகள் வந்திருக்கும் இலட்சணத்தைப் பார்க்கும் போது 'ஸ்திரமான சர்க்கார்' ஏற்படுவது கஷ்டமாயிருக்கும் என்று நாம் கருதினோம். அடிக்கடி மந்திரி சபைகள் மாறுவதினால் நாட்டில் அமைதி குலைந்து குழப்பம் உண்டாவது நிச்சயம். ஆகையால், தற்காலிகமாக இந்திய சர்க்காரின் நேரான மேற்பார்வையில் கவர்னர் ஆட்சி ஏற்படுவதே மேல் என்று கூறியிருந்தோம்.

அத்தகைய கவர்னர் ஆட்சி நெடுங்காலம் நீடித்திருக்க முடியாது. கூடிய சீக்கிரத்தில் மறுபடியும் பொதுத் தேர்தல் நடத்தியே தீரவேண்டும்.

அதற்கெல்லாம் அவசிய மில்லாமல், இப்போதுள்ள நிலைமையிலேயே ஸ்திரமான சர்க்கார் ஏற்படுவது சாத்தியமானால், அதை யார்தான் வரவேற்காமல் இருக்க முடியும்!

பிரஜா கட்சிக்காரர்களும், கிருஷிகர் கட்சிக்காரர்களும் சமீப காலம் வரையில் காங்கிரஸிலிருந்தவர்கள். தேர்தலுக்குச் சில நாள் முன்னால் பிரிந்து சென்றவர்கள். காங்கிரஸ் இலட்சியத்துக்கும் மேற்படி கட்சிகளின் இலட்சியத்துக்கும் அதிக வித்தியாசம் கிடையாது.

ஆகையால், காங்கிரஸ் கட்சியார் மேற்படி இரு கட்சிகளின் கூட்டுறவை ஏன் தேடக் கூடாது என்று ''ஹிந்து'' பத்திரிகை கேட்கிறது.

ஆந்திர கேசரி பிரகாசமும் தென்னேட்டி விசுவநாதனும் கோபப்பதும் காங்கிரஸுடன் சேரவோ ஒத்துழைக்கவோ மறுக்கலாம். ஆனால் பிரஜா கட்சி அங்கத்தினரில் பாதிப் பேருக்கு மேல் தற்போதைய நிலையில் திரும்பக் காங்கிரஸுடன் சேரவே விரும்புவார்கள்.

அம்மாதிரியே சுயேச்சையாக வெற்றி பெற்றவர்களில் பாதிப் பேருக்கு மேல் காங்கிரஸுடன் சேரப் பிரியப்படுவார்கள்.

ஆனால் அவர்களில் யாரும் தன் மரியாதையை இழந்துவிடச் சம்மதிக்க மாட்டார்கள். அவர்களைக் காங்கிரஸ்வாதிகள் நல்ல முறையில் அழைக்க வேண்டும். காங்கிரஸில் திரும்பச் சேர்ந்தால் அவர்கள் மரியாதையுடன் நடத்தப்படுவார்கள் என்ற உறுதி ஏற்படும் முறையில் அழைக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியார் அரசாங்கத்தை அமைத்தாலும் அமைக்காவிட்டாலும், தங்கள் பலத்தை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

காங்கிரஸுடன் சேரக் கூடியவர்களை அவமதித்துப் புறக்கணித்துக் காங்கிரஸ் எதிரிகளுடன் சேரும்படி பண்ணுவது சரியான அரசியல் முறையாகாது; காங்கிரஸுக்கோ தேசத்துக்கோ நல்லது செய்வது மாகாது.

ஆகையால் மாகாண காங்கிரஸ் தலைவர்கள் ''நாங்கள் யாரிடமும் போய்த் தொங்கத் தயாராயில்லை'' ''சேருபவர்கள் சேரட்டும்; சேராதவர்கள் போகட்டும்'' என்றெல்லாம் பேசுவதை உடனே நிறுத்தி விடவேண்டும்.

வெளியேற்று விழா நடத்துவதின் பலன்களைத் தான் பார்த்தாகி விட்டதே! இனிமேல், அந்தப் படலத்தை நிறுத்தி, வரவேற்பு விழாப் படலத்தை ஆரம்பிக்க வேண்டும்.

''காங்கிரஸ் கதவு திறந்திருக்கிறது. எல்லாரும் வாருங்கள்; ஒத்துழையுங்கள்'' என்று வேண்டிக் கொள்வதில் யாதொரு தவறுமில்லை; கௌரவக் குறைவும் இல்லை.

வோட்டர்களிடம் வோட்டுக்காக வேண்டிக் கொள்வதிலே குற்றமில்லையென்றால், வோட்டுப்

நல்ல சிநேகம்!



கம்யூனிஸ்ட் கட்சியுடன் சிநேகம் பிடித்து உறவு கொண்டாடப் பிரஜாகட்சித் தலைவர் ஸ்ரீ டி. பிரகாசம் பிரயத்தனப்பட்டு வருகிருர்.

பெற்றவர்களிடம் ஒத்துழைக்கும்படி வேண்டிக் கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்!

இதற்கு ஒரு சரியான உதாரணம் வேண்டுமானல், நானப் கித்வாய் விஷயத்தில் நேருஜி கையாண்ட சகிப்பு முறையைப் பார்த்துக் கொள்ளலாம்.

கித்வாய் "இதோ காங்கிரஸை விட்டுப் போகப் போகிறேன்" என்ருர். பிறகு "போகிறேனு இல்லையா என்பது நேருவைப் பொறுத்திருக்கிறது" என்ருர். பின்னர், "இதோ போயே போய் விட்டேன்" என்ருர். அப்புறம் "இதோ திரும்பி வந்து விட்டேன்" என்ருர். கித்வாயின் இவ்வளவு திருவிளையாடல்களையும் நேரு பொறுத்துக் கொண்டிருந்தார். அதன் பலனை உத்தரப் பிரதேசத்தில் பாருங்கள்! காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி அடைந்திருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகளும் ஆந்திர காங்கிரஸ் நிர்வாகிகளும் அதே முறையைக் கடைப் பிடித்துப் பார்ப்பது தற்சமயம் மிகவும் அவசியமாகும். அற்பக் காரணங்களினல் பிரிந்து போன வர்களைத் திரும்ப வரவேற்பதற்குத் தயார் என்பதை அவர்கள் தெளிவாக்க வேண்டும்.

ஆந்திர மாகாணத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸும் பிரஜா கட்சியும் கிருஷிகர் கட்சியும் ஒன்று சேர்ந்தா லொழிய அம்மாகாணத்துக்கு விமோசனமே கிடையாது.

தமிழ் நாட்டிலும் அத்தகைய ஒற்றுமை முயற்சியைக் கையாண்டு பார்ப்பதினல் கெடுதல் ஒன்றும் விளைந்து விடாது.

"ஹிந்து"வின் யோசனையை அனுசரித்துக் காங்கிரஸ் தலைவர்கள் தீவிரப் பிரயத்தனம் செய்து பார்ப்பது மிக மிக அவசியமாகும்.

முகம் எடுத்துப் பார்த்தார்களா?

அகில உலக ஸினிமாத் திருவிழா பம்பாயில் ஆரம்பமாகிச் சென்ற வாரத்தில் சென்னைக்கு வந்து சேர்ந்தது.

இந்த விழாவை யொட்டி இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா, சீனு, செக்கோஸ்லோவகியா, இத்தாலி, ஹங்கேரி முதலிய நாடுகளிலிருந்து பிரசித்தி பெற்ற ஸினிமாத் தொழில் நிபுணர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிருர்கள்.

நம் இந்திய நாட்டு ஸினிமா முதலாளிகளும் நிபுணர்களும் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களை முகமெடுத்துப் பார்த்தார்களா? அப்படிப் பார்த்திருந்தால் அச்சமயம் 'குளோஸ்—அப்' எடுக்கப் பட்டதா என்று அறிய விரும்புகிறோம்.

தன்மான உணர்ச்சி உள்ள நம்மவர்கள் அப்படிப் பார்த்திருக்க முடியாதுதான்; கொஞ்சம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுதான் அயல் நாட்டு ஸினிமாத் தொழில் பிரதிநிதிகளுடன் வார்த்தையாட விரும்பார்கள்.

"இந்தியாவின் ஸினிமாத் தொழில் உலகத்திலேயே இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது" என்று சொல்லிக் கொள்கிருர்கள்.

“இந்தியாவில் எடுத்த …… இன்ன படம் உலகிலேயே மூன்றாவது அதிக பண வருமானத்தை அளித்த படமாகும்” என்று தடபுடலாக விளம்பரப் படுத்துகிறார்கள்.

ஆனால் இந்தியாவில் எடுக்கும் படங்கள் உலகப் படங்களுடன் ஒப்பிடும் போது எத்தனாவது தரப் படங்களாகின்றன என்று யாரும் சொல்வதில்லை.

ஒவ்வொரு வருஷமும் அயல் நாட்டு ஸினிமாப் படங்கள் சுமார் 700-க்கு மேல் இந்தியாவுக்கு வருகின்றன; இங்குள்ள தியேட்டர்களில் வெற்றிகரமாகக் காட்டப்படுகின்றன.

ஆனால் இதுவரையில் இந்தியப் படம் ஒன்றாவது அயல் நாடுகளுக்குப் போய் வெற்றியுடன் திரையிடப்பட்டதாக நாம் அறியவில்லை.

இதைத் தென்னிந்திய பிலிம் சேம்பர் அக்கிராசனரான ஸ்ரீ ராமையா மேற்படி அயல்நாட்டு நிபுணர்களுக்கு அளித்த விருந்தின்போது ஒப்புக் கொண்டு பேசினார்.

அன்னிய நாடுகளுக்கு நம்முடைய படங்களை அனுப்பா விட்டால் போகட்டும்; இங்கே வந்திருப்பவர்களுக்கு இந்தியப் படம் எதையாவது காட்டி அவர்களிடம் ‘சபாஷ்’ வாங்கினார்களா என்றால், அதுவும் இல்லை.

காரணம், இந்நாட்டு ஸினிமா ரஸிகர்கள் அனைவரும் அறிந்திருக்கக் கூடியதுதான்.

நமது நாட்டுப் படங்களில் ‘மகத்தான’ வெற்றி பெற்ற படங்கள் அமெரிக்கப் படத்தையோ, வேறு அயல் நாட்டுப் படத்தையோ காப்பி அடித்துத் தயாரித்தவை.

நேர்முகமான ‘காப்பி’ யாக இல்லாவிட்டால், சுற்றி வளைத்து வந்த ‘காப்பி’யாக இருக்கும். அமெரிக்கப் படத்தைப் பார்த்து ஹிந்தியில் எடுத்திருப்பார்கள். அதைப் பார்த்துத் தெலுங்கில் எடுத்திருப்பார்கள். தெலுங்கிலிருந்து தமிழுக்கு வந்திருக்கும். தமிழிலிருந்து மறுபடி ஹிந்தி பாஷைக்கு மாற்றி யிருப்பார்கள்!

இப்படிப்பட்ட படங்களை அமெரிக்க ருஷிய நிபுணர்களுக்கு எப்படிக் காட்ட முடியும்!

இந்தியர்கள் என்ஜினியரிங் எனப்படும் நுட்ப சாஸ்திரத் துறை எல்லாவற்றிலும் அதி விரைவில் மேன்மையடையக் கூடியவர்கள். ஆகையால் இந்திய ஸினிமாத் தொழிலிலும் நுட்ப சாஸ்திரத் தேர்ச்சியுள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். ஒளிப் பதிவு, ஒலிப் பதிவுக் கருவிகளை அற்புதமாய்க் கையாளக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுடைய சுய புத்தியையோ கற்பனைத்திறனையோ காட்டுவதற்கு இந்திய ஸினிமாத் தொழிலில் இடம் கிடைப்பதில்லை.

“சொந்தக் கற்பனையா! குப்பையிலே போடு! இந்த அமெரிக்கப் படத்தைக் காட்சி காட்சியாக, ஷாட் ஷாட்டாக, அப்படியே காப்பி அடித்து எடு! மாதம் பிறந்ததும் சம்பளம் வாங்கிக் கொள்!” என்று இந்திய ஸினிமா முதலாளிகள் சொல்லி [விடுகிறார்கள்.

முழுப் படத்தையும் காப்பி யடிக்கா விட்டால் இங்கொரு காட்சியும் அங்கொரு காட்சியுமாகக் ‘காப்பி’ அடிக்கிறார்கள்.

இந்தியாவின் புராதன நாகரிகத்தையோ, தற்கால வாழ்க்கையையோ காட்டக்கூடிய உயர்தரப் படம் எதுவும் இன்று வரை இந்தியாவில் வெற்றிகரமாக எடுக்கப்படவில்லை.

நமது நாட்டில் நடைபெறும் அகில உலக ஸினிமாத் திருவிழாவுக்குக்கூடப் “பாதாள பயங்கரி” “வேதாள சுந்தரி” போன்ற படங்களையே பொறுக்க வேண்டி யிருக்கிறது!

ஆகவே அயல் நாட்டிலிருந்து வரும் ஸினிமாக் கலை நிபுணர்களுடன் நம்மவர்கள் தலை நிமிர்ந்து பார்த்துப் பேசுவது முடியாத காரியந்தான்.

நம் இந்திய சுதந்திர சர்க்கார் ஸினிமாத் தொழிலுக்கு அநியாய வரி போடும் அக்கிரமத்தைப் பற்றியும் கடுமையாக ஸென்ஸார் செய்யும் அட்டூழியத்தைப் பற்றியும் வந்த விருந்தாளிகளிடம் முறையிட்டு ஒரு குரல் அழுதுவிட்டு அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டியதுதான்!

அட்டைப்பட விளக்கம்

அவளுக்கு இப்பொழுதெல்லாம் ஒன்றுமே பிடிப்பதில்லை. தாயைக் கண்டால் பிடிப்பதில்லை; சகிமாரைக் கண்டாலும் பிடிப்பதில்லை. அவர்கள் பேச்சையும் நோயைப் போல் அஞ்சலானாள்.

இப்படி எந்த நேரமும் ஏதோ சிந்தித்த வண்ணம், பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தால் அவள் உடல் என்னத்திற்கு ஆகும் என்று கருதித் தட்டில் உணவு வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள் ஒரு தோழி. அதைப் பார்த்ததும் அவள் சொல்லுகிறாள்:

உணவு செல்லவில்லை—சகியே
உறக்கங் கொள்ளவில்லை

மணம் விரும்பவில்லை—சகியே
மலர் பிடிக்கவில்லை

குணம் உறுதியில்லை—எதிலும்
குழப்பம் வந்ததடீ

கனவும் உள்ளத்திலே—சுகமே
காணக் கிடைத்ததில்லை!

— பாரதியார்.

கண்ணன்மீது காதல் கொண்ட காரிகையின் மன நிலையை மகா கவி பாரதியார் அப்படியே சொற் சித்திரமாக வடித்துத் தந்திருக்கிறார். அதை வண்ணச் சித்திரமாகப் பெயர்த்து எழுதி யிருக்கிறார் நமது சித்திரக்காரர்.

வருந்துகிறோம்: வாழ்த்துகிறோம்

இரண்டாவது உலக மகா யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது, இங்கிலாந்தில் ஜெர்மன் விமானங்களின் வெடி குண்டு வீச்சு மிகவும் உக்ரமாக இருந்தது. அதனால் லண்டன் மாநகரில் உள்ள பல பகுதிகள் அழிந்தன. பக்கிங்காம் அரண்மனையும் ஆலயங்களும்கூட மேற்படி வெடிகுண்டு வீச்சுக்கு இலக்காகி இடிந்தன.

எனவே இங்கிலாந்து மன்னர் ஆறும் ஜார்ஜும் அவரது குடும்பத்தினரும் இங்கிலாந்தில் இருப்பது ஆபத்தாக முடியும் என்று பிரிட்டிஷ் மந்திரி சபை கருதியது; அவர்களைக் கனடாவுக்குப் பத்திரமாக அனுப்புவது என்றும் முடிவு செய்தது.

அந்த முடிவை ஜார்ஜ் மன்னரிடம் தெரிவித்தபோது, அவர் அதற்கு இசைய மறுத்து விட்டார். "எவ்வளவு பெரிய ஆபத்து நேருவதாக இருப்பினும், என் மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்குதான் நான் இருப்பேன்" என்று மன்னர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். பின்னர் மகாராணியையும் இளவரசிகளையுமாவது கனடாவுக்கு அனுப்பிவிடத் தீர்மானித்தார்கள். அவ்விஷயத்தை அவர்களிடம் தெரிவித்தபோது, "மன்னர் எங்கு இருக்கிறாரோ அங்குதான் நான் இருக்க வேண்டியது கடமை" என்று மகாராணி கூறி விட்டார். "மன்னரும் மகாராணியும் எங்கு இருக்கிறார்களோ அங்குதான் நாங்கள் இருப்போம்" என்று எலிஸபெத், மார்கரெட் இளவரசிகள் சொல்லி விட்டார்கள்!

போரின் கொடுமையைச் சகிக்க முடியாமல் பல ஐரோப்பிய மன்னர்களும் அவர்களின் குடும்பங்களும் வெளி நாடுகளில் வந்து அடைக்கலம் புகுந்த அக்காலத்தில், பிரிட்டிஷ் மன்னர் குடும்பத்தினர் உயிரைத் துச்சமாக மதித்து, போர்க்களமாக விளங்கிய இங்கிலாந்திலேயே இருக்கத் தீர்மானித்ததின் மூலம் தங்களுக்கு மகத்தான பெருமையைத் தேடிக் கொண்டார்கள்.

அத்தகைய பிரிட்டிஷ் மன்னர் ஆறும் ஜார்ஜ் காலமானதைக் குறித்து உலக நாடுகள் எல்லாம் துக்கத்தைத் தெரிவித்திருக்கின்றன.

ஜவாஹர்லால்ஜி இந்தியாவின் சார்பில் அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில், இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்டுள்ள நட்புக்கும் நெருங்கிய தொடர்புக்கும் காலஞ்சென்ற மன்னர் எவ்வளவு தூரம் காரணமாக இருந்தார் என்பதை விளக்கியுள்ளார். உலகத்தின் அமைதிக்கும் மானிட வர்க்கத்தின் க்ஷேமத்துக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த் தொண்டு புரியும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மூத்த புதல்வர் எட்டாம் எட்வர்ட் தம்முடைய காதலுக்காகப் பிரிட்டிஷ் சிம்மாசனத்தைத் துறந்தார். ஆனால் ஆறும் ஜார்ஜ் மன்னரோ பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் நற்பெயருக்காகப் பிரம்மாண்டமான இந்திய சாம்ராஜ்யத்தையும் சக்கரவர்த்தி பதவியையும் துறந்து விட்டார்!

அவ்வாறு தம்முடைய ஆட்சிக் காலத்தில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு இசைந்த ஜார்ஜ் மன்னர் காலமானதைக் குறித்து வருந்துகிறோம்.

புதிய ராணியாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள காலஞ்சென்ற மன்னரின் மூத்த புதல்வி எலிஸபெத் பிரிட்டிஷ் அரச பரம்பரையின் பெருமையை அனுசரித்து நீடித்த காலம் ஆட்சி புரிய வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

அமோக வெற்றி

சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை சென்னை மாநகரம் முழுதும் ஒரே கோலாகலமாக இருந்தது. சேப்பாக்கம் பந்தாட்டத் திடலில் கூடியிருந்த பதினாயிரக் கணக்கான ஜனங்களின் கரகோஷமும் குதூகல ஆரவாரமும் எட்டுத் திசைகளையும் அதிர வைத்தன. கோஷ்டி கோஷ்டியாக நின்று பேசிக் கொண்டிருந்த இளைஞர்கள், சிறுவர்களின் முகங்களில் மகிழ்ச்சி பொங்கியது. பஸ்களிலும், டிராம்களிலும் தெருக்களிலும் அந்தக் கோலாகலத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டு ஆனந்தம் கொண்ட சூரிய பகவான்கூட தங்கக் கிரணங்களை அள்ளி வீசிக்கொண்டே மறைந்ததாக ஒரு பிரபல பத்திரிகை வர்ணிக்கிறதென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

சென்ற இருபது வருஷங்களாக ஜெயிக்க முடியாத பிரிட்டிஷ் சிங்கத்தை,—சமீப காலமாக டில்லி, பம்பாய், கல்கத்தா, கான்பூர் முதலிய நகரங்களில் ஜெயிக்க முடியாத பிரிட்டிஷ் சிங்கத்தைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னையில் ஜெயித்து விட்டார்கள். அதாவது இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியா கிரிக்கெட் கோஷ்டிக்கும் நடந்த கடைசிப் பந்தய ஆட்டத்தில் இந்தியா கோஷ்டியினர் அமோக வெற்றி பெற்றனர். மேற்படி வெற்றியைக் குறித்து இந்தியா ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாதும், பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜியும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். இதிலிருந்து அந்த வெற்றி எவ்வளவு மகத்தானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

கிரிக்கெட் ஆட்டம் பிரிட்டனில் பிறந்தது. எனவே அதில் பிரிட்டிஷார் சூரர்களாக இருப்பது இயல்பே. அப்படிப்பட்டவர்களை அந்த ஆட்டத்தில் திக்குமுக்காடச் செய்து வெற்றி பெறுவதென்றால் அது எளிதான காரியமா!

அப்படியிருந்தும் இந்தியா கோஷ்டியினர் அவர்களைத் தோல்வியுறும்படி செய்திருப்பதிலிருந்து, எந்தத் துறையிலும் இணையற்று விளங்கும் ஆற்றல் இந்தியர்களுக்கு உண்டு என்பது வெளியாகிறது அல்லவா? ஏற்கெனவே ஹாக்கி பந்தயங்களில் இந்தியா கோஷ்டியினர் உலகம் எங்கும் இந்தியாவின் கீர்த்தியை நிலைநாட்டினர். அது போலவே கிரிக்கெட் பந்தயங்களிலும் இந்தியா கோஷ்டியினர் வெளி நாடுகளிலும் குறிப்பாக இங்கிலாந்திலும் இந்தியாவின் கீர்த்தியை நிலைநாட்டுவதற்கு இந்த மாபெரும் வெற்றி அங்குரார்ப்பணமாய் அமையுமாக!

பொன்னியின் செல்வன்

ஏழாம் அத்தியாயம்

காட்டில் எழுந்த கீதம்

பூங்குழலி கோபத்துடன் ஓடுவதை நிறுத்தித் திரும்பி நின்ற அதே சமயத்தில், இருள் சூழ்ந்த அக்காட்டகத்தே, ஓர் இனிய கீதம் எழுந்தது.

"பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே!"

அந்தக் குரல் சேந்தன் அமுதனுடைய குரல் என்பதைப் பூங்குழலி உடனே அறிந்து கொண்டாள். கல கல வென்று சிரித்தாள். காலடிச் சத்தம் வந்த திசை வேறு என்பதைக்கூட அச்சமயம் அவள் மறந்து போனாள்.

"அத்தான்! நீதானா?"

"ஆமாம்! பூங்குழலி!"

"எங்கே இருக்கிறாய்? இப்படி வா!"

"இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டு சேந்தன் அமுதன் அவள் முன்னால் வந்தான்.

"நன்றாய் என்னைப் பயமுறுத்தி விட்டாய்! எதற்காக இப்படி என்னைத் தொடர்ந்து வந்தாய்?"

"பூங்குழலி! உன்னைப் பார்ப்பதற்காகவும் உன் இனிய கானத்தைக் கேட்பதற்காகவும் தஞ்சையிலிருந்து பல நாள் பிரயாணம் செய்து வந்தேன். இங்கே வந்த பிறகும் உன்னைக் காணாமல் இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தேன்! தற்செயலாக உன்னைப் பார்த்து விட்டுத் தொடர்ந்து ஓடி வந்தேன். ஏன் அப்படி ஓடினாய்? எங்கே, ஒரு கீதம் பாடு கேட்கலாம்!"

"பாடுவதற்கு நல்ல இடம்; அதைவிட நல்ல சந்தர்ப்பம்!"

"நீ பாடா விட்டால் நானே இன்னொரு பாட்டுப் பாடுகிறேன். இந்தக் காட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் மிருகங்களை யெல்லாம் விழித்தெழுந்து ஓடச் செய்கிறேன், பார்!

பித்தா! பிறைசூடி
பெருமானே! அருளாளா!"

"போதும், அத்தான்! கொஞ்சம் பாட்டை நிறுத்து!"

"அப்படியானால் நீ பாடுகிறாயா?"— இவ்விதம் இரைந்து கேட்டு விட்டுச் சேந்தன் அமுதன் உடனே மெல்லிய குரலில், "பூங்குழலி! உன்னைத் தொடர்ந்து இன்னொருவன் வந்து கொண்டிருந்தான். உனக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே சத்தம் போட்டுப் பாடினேன். அவனுக்கும் உன் அண்ணன் மனைவிக்கும் இன்று சாயங்காலம் ஏதோ இரகசிய சம்பாஷணை நடந்தது. அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்றான்.

பிறகு மீண்டும், உரத்த குரலில், "என்ன சொல்கிறாய்? நீ பாடுகிறாயா? நான் பாடட்டுமா? சிவபெருமான் சுடுகாட்டில் ஆடினார்; நீ வெறுங் காட்டில் பாடக் கூடாதா?" என்று இரைந்தான்.

"இதோ பாடுகிறேன்; கோபித்துக் கொள்ளாதே!"

கல்கி

என்று சொல்லி விட்டுப் பூங்குழலி பின்வருமாறு பாடினாள்:

"பறக்கும் எம் கிள்ளைகாள்! பாடும் எம்பூவைகாள்!
அறக்கண் எனத்தகும் அடிகள் ஆரூரை
மறக்ககில்லாமையும் வளைகள் நில்லாமையும்
உறக்கமில்லாமையும் உணர்த்த வல்லீர்களே!"

இவ்விதம் பாடிவிட்டு, மெல்லிய குரலில், "அமுதா! நான் வந்தது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"பூங்குழலி! கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து படகு வருவதைப் பார்த்தேன். நீயாக இருக்கலாம் என்று உத்தேசமாக எண்ணி இங்கே உன்னைத் தேடி வந்தேன். அதே சமயத்தில் பழுவூர் ஆட்கள் சிலரும் இந்தப் பக்கம் வந்தார்கள். படகில் உன்னைக் காணவில்லை. ஆனால் என் நண்பன் வல்லவரையனையும் இளவரசரையும் பார்த்தேன். வல்லவரையனிடம் பழுவூர் ஆட்கள் வருவது பற்றிக் கூறினேன். பிறகு இளவரசரை நாங்கள் இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம்..."

"ஐயோ! என்ன தவறு செய்து விட்டீர்கள்? படகு என்ன ஆயிற்று?"

"படகை யாராவது பார்த்தால் சந்தேகம் ஏற்படும் என்று ஓடை நீரில் கவிழ்த்து விட்டோம்! — ஏன்! பூங்குழலி! பாட்டை ஏன் நிறுத்தி விட்டாய்! மிச்சத்தையும் பாடு!" என்று பிற்பகுதியை உரத்த குரலில் கூறினான் சேந்தன் அமுதன்.

"மறந்து விட்டது, அமுதா! இந்தக் கோடிக் கரைக் குழகரைப் பற்றி ஒரு பாடல் உண்டே! உனக்கு அது நினைவிருக்கிறதா? — நினைவிருந்தால் பாடு!"

"ஓ! நினைவிருக்கிறது!" என்று சேந்தன் அமுதன் இரைந்து சொல்லி விட்டுப் பாடினான்:—

"கடிதாய்க் காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதானயலே இருந்தால் குற்றமாமோ?
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே!"

பாட்டு முடிந்தவுடனே பூங்குழலி "அத்தான்! என்னைத் தொடர்ந்து வந்தவன் போய்விட்டானா? பக்கத்தில் மறைந்து நின்று கொண்டிருக்கிறானா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"நாம் இங்கே நின்ற பிறகு காலடிச் சத்தம் கேட்கவில்லை; அவன் இங்கேதான் பக்கத்தில் எங்கேயோ மறைந்து நிற்க வேண்டும். அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?"

பூங்குழலி இரைந்து "தெரியாமல் என்ன? நன்றாய்த் தெரியும். கோடிக் கரை ஆந்தைகளைப் பற்றிச் சுந்தரர் பாடியிருப்பதுதானே? இதோ கேள்!

காடேல் மிகவால் இது காரிகை யஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற
வேடித் தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்
கோடிக் குழகா விடங்கோயில் கொண்டாயே!

பார்த்தாயா! அமுதா! சுந்தர மூர்த்தியின் காலத்தில் ஆந்தைகளும் கூகைகளும் இன்று போலவே இக்காட்டில் கத்தியிருக்கின்றன. ஆனால் இப்போது இக்காட்டில் மனிதர்கள் கூட ஆந்தைபோலச் சத்த மிடுகிறார்கள். சற்று முன் அத்தகைய குரல் ஒன்று கேட்டேன். அந்தத் தீய சழக்கர் யாராயிருக்கும் என்று உனக்கு ஏதாவது தெரியுமா?"—இப்படி உரத்த குரலிலேயே பூங்குழலி கேட்டாள். கேட்டுவிட்டு, "எனக்கு அம்மாதிரி கத்த வருகிறதா என்று பார்க்கிறேன். ஆந்தைக் குரல் மாதிரி இருக்கிறதா கேட்டுச் சொல்லு!" என்றாள்.

பின்னர், ஆந்தை மாதிரியே மூன்று தடவை குரல் கொடுத்தாள்.

"அப்படியே ஆந்தைக் குரல் மாதிரியே இருக்கிறது! தேனினும் இனிய குரலில் தெய்வீக கீதங்களைப் பாடுவாயே! இதை எங்கே கற்றுக் கொண்டாய்?" என்று அமுதன் கேட்டான்.

"மந்திரவாதி ஒருவனிடம் கற்றுக் கொண்டேன். மந்திரம் பலிப்பதற்கு இப்படி ஆந்தைபோலக் கத்தத் தெரிந்திருக்க வேண்டுமாம்!"

"உனக்கு மந்திர வித்தை கூடத் தெரியுமா, என்ன?"

"ஏதோ கொஞ்சம் தெரியும். என்னுடைய மந்திர சக்தியைப் பரீட்சித்துப் பார்க்கிறாயா?"

"எப்படிப் பரீட்சிக்கிறது?"

"இப்போது நாம் பேசுவதையெல்லாம் நமக்குப் பக்கத்தில் ஒருவன் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். நீ வேணுமானால் தேடிப் பார்!"

இவ்விதம் பூங்குழலி கூறி வாய் மூடுவதற்குள்ளே காட்டில் சலசலப்புச் சத்தம் கேட்டது. மந்திரவாதி ரவிதாஸன் மறைவிலிருந்து வெளியே வந்தான். "ஹா ஹா ஹா!" என்று சிரித்துக் கொண்டே வந்தான்.

"பெண்ணே! அப்படியா சமாசாரம்? உனக்குத் தந்திரம்தான் தெரியும் என்று

நினைத்தேன்; மந்திரம்கூடத் தெரியுமா?" என்று கேட்டான்.

"அட பாதகா! நீதானா?"

"பெண்ணே! நான் யார் என்று உனக்குத் தெரியுமா?"

"இலங்கையில் இளவரசரைக் கொல்லப் பார்த்தவன் நீ! அது உன்னால் முடியவில்லை. ஆகையால் நடுக்கடலில் மந்திரம் போட்டுச் சுழற் காற்றை வரவழைத்து இளவரசரையும் அவருடைய சிநேகிதனையும் மூழ்க அடித்து விட்டாய்!"

"அவர்கள் மூழ்கியது உனக்கு எப்படி நிச்சயமாய்த் தெரியும்? நீ பார்த்தாயா?"

"இரண்டு பேருடைய உடல்களும் கரையில் வந்து ஒதுங்கின. பூதத் தீவிலே குழிதோண்டி அவர்களைப் புதைத்து விட்டு வந்தேன். துரோகி! உன் மந்திரத்தில் இடி விழ!"

"பெண்ணே! என்னை ஏமாற்றப் பார்க்காதே! என்னுடைய மந்திரத்துக்குப் பதில் மந்திரம் போட்டு நீ அவர்களை உயிர் பிழைக்கச் செய்யவில்லையா?"

"ஐயோ! அது எப்படி உனக்குத் தெரிந்தது?"

"இந்த ரவிதாஸனுக்குப் புறக் கண்ணைத் தவிர அகக் கண்ணும் உண்டு. நூறு காத தூரத்தில் நடப்பதையும் என்னுடைய மந்திர சக்தியினால் தெரிந்து கொள்வேன்."

"அப்படியானால் என்னை எதற்காகக் கேட்கிறாய்?"

"உன்னைப் பரிசோதிப்பதற்காகக் கேட்கிறேன். அவர்களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லி விடு! இல்லாவிட்டால் உங்கள் இருவரையும் இங்கேயே எரித்துச் சாம்பராக்கி விடுவேன்!" என்றான் ரவிதாஸன்.

அவனுடைய புறக்கண்கள் அச்சமயம் நெருப்புத் தணல்களைப் போல் அனல் வீசி ஜொலித்தன.

"என்ன? உண்மையைச் சொல்லுகிறாயா, மாட்டாயா? ஓம் ஹ்ரீம் ஹ்ராம் வஷட்!—இதோ என் மந்திரத்தின் சக்தியைக் காட்டப் போகிறேன்."

பூங்குழலி பயத்தினால் நடுநடுங்கிச் சேந்தன் அமுதனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவனிடம் மெல்லிய குரலில் "நான் இப்போது ஓடப் போகிறேன். நீ அவனைத் தடுத்து நிறுத்தப் பார்!" என்றாள்.

மந்திரவாதியைப் பார்த்து உரத்த குரலில், "என்னை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்கள் இருக்கும் இடத்தைக் காட்டி விடுகிறேன்!" என்று கூறினாள்.

"என்னுடன் வா! காட்டுகிறேன்!" என்று சொல்லி விட்டுப் பாழடைந்த மண்டபத்துக்கு நேர்மாறான திசையை நோக்கி நடந்தாள்.

மந்திரவாதி அவளைப் பின் தொடரப் பார்த்தான்.

சேந்தன் அமுதன் பின்னாலிருந்து அவனைப் பிடித்து நிறுத்த முயன்றான்.

பூங்குழலி ஓடத் தொடங்கினாள்.

மந்திரவாதி சேந்தன் அமுதனை ஒரே தள்ளாகத் தலைகுப்புறத் தள்ளிவிட்டுப் பூங்குழலியைத் தொடர்ந்து ஓடினான்.

பூங்குழலி மானைப் போல் விரைந்து பாய்ந்து ஓடினாள்.

மந்திரவாதி மானைத் துரத்தும் வேடனைப் போல் அவளைப் பிடிக்க ஓடினான். ஆனால் அவளைப் பிடிப்பது எளிதில் முடிகிற காரியமாயில்லை.

மந்திரவாதி அவளைத் துரத்துவதை விட்டு நின்று விடலாமா என்று எண்ணிய போது பூங்குழலியும் களைத்துப் போனவளைப் போல் நின்றாள். மந்திரவாதி மறுபடியும் அவளைத் துரத்தினான்.

இருவருக்கும் பின்னாலே சேந்தன் அமுதனும் தட்டுத் தடுமாறி விழுந்தடித்து ஓடிவந்து கொண்டிருந்தான். ஓடும்போது, மறைந்த மண்டபத்துக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்யலாமா என்று அவன் அடிக்கடி நினைத்தான். அதே சமயத்தில் பூங்குழலியை மந்திரவாதியிடம் தனியாக விட்டு விட்டுப் போகவும் அவனுக்கு மனம் வரவில்லை.

பூங்குழலி ஒரு மேட்டின் மீது ஏறி நின்றாள். அங்கே சற்றுக் காத்திருந்ததோடு அல்லாமல், திரும்பிப் பார்த்து மந்திரவாதியைக் கைதட்டி அழைத்தாள். மந்திரவாதி மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க அவள் அருகில் போய் நின்றான். அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவள் கன்னத்தில் நாலு அறை கொடுக்க வேண்டும் என்று அவன் எண்ணிய சமயத்தில் பூங்குழலி "அதோ பார் என் காதலர்களை!" என்றாள்.

அவள் சுட்டிக் காட்டிய திசையை மந்திரவாதி பார்த்தான்.

முன்னொரு தடவை வந்தியத்தேவன் கண்ட காட்சியை அவனும் கண்டான்.

சதுப்பு நிலத்தில் ஆங்காங்கு தீப் பிழம்புகள் குப் குப் என்று தோன்று

வதும் கப் கப் என்று மறைவதுமாயிருந்தன. ரவிதாஸனுக்கு அந்தப் பயங்கரத் தோற்றத்தின் காரணம் என்னவென்று தெரியும் என்றாலும், அச்சமயம் அவனுக்கு ரோமம் சிலிர்த்தது.



"மந்திரவாதி! உனக்கு மந்திரம் தெரியும் என்றால், இந்தக் கொள்ளி வாய்ப் பிசாசுகளை ஓட்டுவதற்கு ஒரு மந்திரம் போடு. பார்க்கலாம்! அவை என்னைப் பாடாய்ப் படுத்தி வைக்கின்றன!" என்றாள்.

ரவிதாஸனுக்கு அளவில்லாக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"பெண்ணே! என்னை ஏமாற்றலாம் என்று பார்க்கிறாயா?" என்று கர்ஜித்தான்.

"உன்னை எதற்காக நான் ஏமாற்ற வேண்டும்?"

"இளவரசரும் வல்லவரையனும் இருக்கு மிடத்தைக் காட்டுகிறேன் என்று சொல்லி நீ என்னை இழுத்து அடிக்க வில்லையா?"

"அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நான் சொன்னதை நீ நம்பவில்லை. வேறு என்ன செய்யட்டும்?"

"இளவரசர் இறந்தது உண்மைதானா? ஆணையிட்டுச் சொல்வாயா?"

"ஆணை எதற்கு? அதோ ஆகாசத்தைப் பார்!"

ரவிதாஸன் வானத்தை நோக்கினான். வால் நட்சத்திரம் தெரிந்தது.

"வால் நட்சத்திரம் தோன்றினால் அரசகுலத்தில் மரணம் என்று உனக்குத் தெரியாதா? அப்படியே நடந்து விட்டது!" என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! அப்படியானால் உன் கையில் உள்ள கெண்டியை இப்படிக் கொடு! அதில் ஏதாவது மிச்சம் இருக்கிறதா? உன்னோடு ஓடி வந்ததில் எனக்குத் தாகம் எடுத்து விட்டது!......"

பூங்குழலி திடீரென்று மறுபடி ஓட்டம் பிடித்தாள். மேட்டிலிருந்து தாவிக் குதித்து இறங்கிக் கொள்ளி



வாய்ப் பிசாசுகள் தோன்றி மறைந்த சதுப்பு நிலப் பரப்பை நோக்கி ஓடினாள்.

ரவிதாஸன் ஆத்திரத்தினால் அறிவை இழந்தான். பூங்குழலியைப் பிடித்து அவ ளுடைய கழுத்தை நெறித்துக் கொன்று விட வேண்டும் என்ற வெறியை அடைந் தான். தலைகால் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து ஓடினான்.

சிறிது தூரம் ஓடிய பிறகு பூங்குழலி சட்டென்று கொஞ்சம் குனிந்து நாலைந் தடி ஒரு புறமாக நகர்ந்து கொண்டாள்.

அதிவேகமாக அவளைத் துரத்தி வந்த ரவிதாஸனால் அவள் நின்ற இடத்தில் நிற்க முடியவில்லை. அவளுக்கு அப்பால் சில அடி தூரம் வரையில் சென்று நின்றான். திரும்பி அவளைப் பிடிப்பதற் காகப் பாயப் பார்த்தான். ஆனால் முடிய வில்லை. கால்களுக்குத் திடீரென்று என்ன நேர்ந்து விட்டது? அவை ஏன் இப்பொழுது நகரவில்லை? அவை ஏன் நின்றுவிட்டிருக்கின்றன?

இது என்ன? உள்ளங்காலிலிருந்து சில்லிப்பு மேலே மேலே வந்து கொண் டிருக்கிறதே? இல்லை, இல்லை! கால்கள் அல்லவா கீழே கீழே போய்க் கொண் டிருக்கின்றன!

ரவிதாஸன் குனிந்து பார்த்தான். ஆம், அவனுடைய கால்கள் கீழே புதை சேற் றில் அமிழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஒவ்வொரு அணுவாக, ஒவ் வொரு அங்குலமாக, அவன் கால்கள் கீழே சேற்றில் மெதுவாகப் புதைந்து கொண்டிருந்தன.

ரவிதாஸன் தன்னுடைய அபா யத்தை உணர்ந்தான். சேற்றிலிருந்து வெளிவர முயன்றான். கால்களை உதறி எடுக்கப் பிரயத்தனம் செய்தான். அவ னுடைய பிரயத்தனம் பலன் தரவில்லை.

கீழே சேற்றுக்கடியில் ஏதோ ஒரு பெரும் பூதம் இருந்து அவனைப் பற்றி இழுப்பது போலத் தோன்றியது.





பூங்குழலி கல கலவென்று சிரித்தாள்.

"மந்திரவாதி! என்ன விழிக்கிறாய்? பூதத்தின் வாயில் அகப்பட்டுக் கொண்டாயா? மந்திரம் போட்டுப் பார்ப்பது தானே?" என்றாள்.

மந்திரவாதி ஒரு பக்கம் பீதியினாலும் ஒரு பக்கம் கோபத்தினாலும் நடு நடுங்கினான்.

"அடி பாவி! உன் வேலையா இது?" என்று கையை நெறித்தான்.

"என் கழுத்தைப் பிடித்து நெறிக்க வேண்டும் என்று நீ ஆசைப்பட்டாயல்லவா? அதற்குப் பதிலாகக் கையை நெறித்துக் கொள்!" என்றாள்.

ரவிதாஸன் கோபத்தை அடக்கிக் கொண்டு "பெண்ணே! சத்தியமாய்ச் சொல்கிறேன். உன்னை நான் ஒன்றும் செய்யவில்லை. சற்றுக் கை கொடுத்து என்னைக் கரையிலே தூக்கி விடு!" என்றான்.

பூங்குழலி ஹா ஹா ஹா என்று சிரித்தாள். "உன்னைக் கரையேற்றிவிட என்றால் ஆகாது! உன் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட பேய் பிசாசுகளையெல்லாம் கூப்பிடு!" என்றாள்.

ரவிதாஸன் இதற்குள் தொடை வரையில் சேற்றில் புதைந்து போயிருந்தான்.

அவன் முகத்தைப் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. அவனுடைய கண்கள் கொள்ளிக் கட்டைகள் போலச் சிவப்புத் தணல் ஒளியை வீசின.

கைகளை நீட்டிப் புதை சேற்றுக்கு அப்பால் இருந்த கரையைப் பற்றினான். அங்கே நீண்டு வளர்ந்திருந்த கோரைப் புல்களின் அடிப்பகுதியைப் பிடித்துக் கொண்டான். மறுபடியும் சேற்றிலிருந்து வெளிவரப் பிரயத்தனம் செய்தான். ஆனால் புதைந்திருந்த கால்களை அசைக்கவும் முடியவில்லை.

"பெண்ணே! உனக்குப் புண்ணியம் உண்டு! என்னைக் காப்பாற்று!" என்று ஓலமிட்டான்.

இதற்குள்ளே அங்கே சேந்தன் அமுதன் வந்து சேர்ந்தான். ரவிதாஸனுடைய நிலைமை இன்னதென்பதை அவன் ஒரு நொடியில் அறிந்து கொண்டான். அவனுடைய கண்களில் இரக்கத்தின் அறிகுறி புலப்பட்டது.

பூங்குழலி அவனைப் பார்த்து "வா, போகலாம்!" என்றாள்.

"ஐயோ! இவனை இப்படியே விட்டு விட்டா போகிறது!"

"ஏன்? சேற்றில் இவன் முழுதும் புதைகிற வரையில் இருந்து பார்க்க வேண்டுமென்கிறாயா?"

"இல்லை, இல்லை! இவனை இப்படியே விட்டு விட்டுப் போனால் வாழ்நாளெல்லாம் கனவு காணுவேன். இவனைக் கரையேற்றி விட்டுப் போகலாம்."

"அத்தான்! இவன் என்னைக் கழுத்தை நெறித்துக் கொல்ல நினைத்தான்."

"அவனுடைய பாவத்துக்குக் கடவுள் அவனைத் தண்டிப்பார். நாம் காப்பாற்றி விட்டுப் போகலாம்."

"அப்படியானால் உனது மேல் துண்டைக் கொடு!" என்றாள் பூங்குழலி.

அமுதன் தன் மேல் துண்டைக் கொடுத்தான். அதன் ஒரு முனையைப் புதை சேற்றுக் குழிக்கு அருகில் இருந்த ஒரு புதரின் அடிப்பகுதியில் பூங்குழலி கட்டினாள். இன்னொரு முனையை ரவிதாஸனிடம் கொடுத்தாள்.

"மந்திரவாதி! இதோ பார்! இந்தத் துண்டின் முனையைப் பிடித்துக் கொண்டிரு! அதிக பலங்கொண்டு இழுத்தால் புதர் வேரோடு வந்துவிடும். ஆகையால் மெள்ளப் பிடித்துக் கொண்டிரு. நீயாகக் கரையேற முயலாதே! பொழுது விடிந்ததும் யாராவது இந்தப் பக்கம் வருவார்கள். அவர்கள் உன்னைக் கரையேற்றுவார்கள்!" என்றாள்.

"ஐயோ! இரவெல்லாம் இப்படியே கழிக்க வேண்டுமா? என்னால் முடியாது. அதைக் காட்டிலும் என்னைக் கொன்று விட்டுப் போய்விடு!"

பூங்குழலி அவன் கூக்குரலைப் பொருட்படுத்தவில்லை. சேந்தன் அமுதனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கினாள். அவர்கள் மேட்டின் மேல் ஏறி அப்பால் காட்டில் இறங்கும் வரையில் மந்திரவாதியின் ஓலக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் குரல் மறைந்த பிறகு, "அத்தான்! நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தாய்! நீ எப்படி இங்கு வந்தாய்? எதற்காக?" என்று பூங்குழலி கேட்டாள்.

"பாதாளச் சிறை அநுபவத்துக்குப் பிறகு தஞ்சாவூரில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. அடிக்கடி பழுவூர் வீரர்களும் ஒற்றர்களும் வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் பழையாறைக்குப் போனேன். குந்தவை தேவி என்னை இவ்விடம்

அனுப்பினர். இளவரசருக்கு அபாயம் அதிகமாகி யிருப்பதாகவும், ஆகையால் அவரை நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு சேர்த்து விட்டு வரும்படியும் வந்தியத்தேவனிடம் சொல்லும்படி கூறினர். எனக்கும் உன்னைப் பார்த்து உன் பாட்டைக் கேட்க வேண்டும் என்று ஆசையாயிருந்தது......''

''பாட்டுக் கேட்பதற்கு நல்ல சமயம் பார்த்தாய்! இளைய பிராட்டி கூறியது உண்மைதான். இளவரசருக்கு ஏற்பட்டிருக்கும் கண்டங்கள் இப்படி அப்படியல்ல. பகைவர்களின் சூழ்ச்சிகளோடு குளிர் காய்ச்சல் வேறு வந்துவிட்டது...''

''ஆமாம்; நானுந்தான் பார்த்தேன். நாங்கள் இரண்டு பேருமாக அவரைத் தூக்கிக் கொண்டுபோய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம். அதற்கு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனோம். பூங்குழலி! நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துப் புத்தபிக்ஷுக்கள் வைத்திய சாஸ்திரம் நன்கு அறிந்தவர்கள். இளவரசரைக் குணப்படுத்தி விடுவார்கள்.''

''நாகைப் பட்டினத்துக்கு எப்படிக் கொண்டு போய்ச் சேர்ப்பது?''

''கால்வாய் வழியாகத்தான்!''

''கால்வாய் வழியாக எப்படிப் போவது? படகைத் தொலைத்து விட்டீர்களே?''

''படகு தண்ணீரில் முழுகித்தானே இருக்கிறது? திரும்ப எடுத்து விட்டால் போகிறது!''

''அப்படியானால், இன்று இராத்திரியே கிளம்பி விடவேண்டியதுதான். அந்தச் சிறிய படகில் நாம் எல்லாரும் போக முடியாதே!''

''வேண்டியதில்லை, பூங்குழலி! அதெல்லாம் நாங்கள் பேசி முடிவு செய்து விட்டோம். வல்லவரையன் இங்கிருந்து நேரே பழையாறைக்குப் போவான். நானும் நீயும் இளவரசரைப் படகில் ஏற்றி நாகைப்பட்டினம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது.''

பூங்குழலிக்குப் புல்லரித்தது. மீண்டும் இளவரசருடன் பிரயாணம்! கால்வாயில், படகில், நாகைப்பட்டினம் வரையில், வழியிலே அபாயம் ஒன்றும் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

இருவரும் மறைந்த மண்டபத்தை அடைந்தார்கள். மண்டபத்தை நெருங்

கியதும் சேந்தன் அமுதன் பலமாகக் கையைத் தட்டினான்.

"யார் அங்கே?" என்று வந்தியத் தேவனுடைய கடுமையான குரல் கேட்டது.

"நான்தான்; சேந்தன்!"

"இன்னும் யார்!"

"என் மாமன் மகள்!"

வந்தியத்தேவன் மண்டபத்தின் வாசலில் வந்து எட்டிப் பார்த்தான்.

"வேறு யாரும் இல்லையே?"

"இல்லை! ஏன் சந்தேகம்?"

"மெள்ளப் பேசுங்கள்; இளவரசர் தூங்குகிறார். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இங்கே யாரோ ஒருவன் வந்தான். நீதானாக்கும் என்று நினைத்து வெளியில் வந்தேன். நீ இல்லை. மந்திரவாதியைப்போல் தோன்றியது."

"அப்புறம்?"

"அச்சமயம் உன் பாட்டின் குரல் கிளம்பியது. பாடுவதற்கு நல்ல நேரம் பார்த்தாய் என்று எண்ணிக் கொண்டேன். நல்லவேளையாக அதை மந்திரவாதியும் கேட்டுவிட்டுத் திரும்பிப் போனான். அவனை நீங்கள் பார்த்தீர்களா!"

"பார்த்தோம்."

"அவனை என்ன செய்தீர்கள்?"

"நான் ஒன்றும் செய்யவில்லை! இவள்தான் அவனைப் புதை சேற்றுக் குழியில் இடுப்பு வரையில் இறக்கி நிறுத்திவிட்டு வந்திருக்கிறாள்!"

"இவளுடைய குரல்கூடக் கொஞ்சம் கேட்டதே!"

"ஆம்; பூங்குழலியும் ஒரு பாட்டுப் பாடினாள்."

"அதைக் கேட்டதும் இளவரசருக்குச் சுய உணர்வு வந்தது போலத் தோன்றியது. 'யார் பாடுகிறது?' என்று கேட்டார். 'ஓடக்காரப் பெண்!' என்றேன். பாட்டைக் கேட்டுக் கொண்டே தூங்கி விட்டார்."

பூங்குழலிக்கு மீண்டும் மெய் சிலிர்த்தது.

"இவள் பாட்டு மட்டுந்தானா பாடினாள்? ஆந்தை போலவும் கத்தினாளே?"

"அதுவும் என் காதில் விழுந்தது. காட்டில் ஏதோ அதிசயம் நடைபெறுகிறதென்று நினைத்துக் கொண்டேன். நீங்கள், — அத்தானும் மாமன் மகளும், வசந்தோத்ஸவம் கொண்டாடுகிறீர்களோ என்று நினைத்தேன்......"

"இது என்ன வீண் பேச்சு?" என்றாள் பூங்குழலி.

"வேறு என்ன செய்வது? இரவை எப்படியேனும் கழித்தாக வேண்டுமே?" என்றான் வந்தியத்தேவன்.

"இல்லை; பொழுது விடிந்து இங்கே இருந்தால் தப்பிப் பிழைக்க முடியாது. இராத்திரியே புறப்பட்டாக வேண்டும்."

அச்சமயம் எங்கேயோ வெகு தூரத்தில் நரிகள் ஊளையிடத் தொடங்கின. அந்த ஊளைச் சத்தத்துக்கு இடையில் ஆந்தைக் குரல் ஒன்றும் கேட்டது.

சேந்தன் அமுதன் நடுங்கினான். அவன் மனக் கண்ணின் முன்னால் மந்திரவாதி சேற்றில் புதைந்திருப்பதும், அவனைச் சுற்றி நரிகள் ஊளையிட்டுக் கொண்டு நெருங்கி நெருங்கி வருவதும், மந்திரவாதி ஆந்தையைப் போல் கத்தி நரிகளை விரட்டப் பார்ப்பதும் தென்பட்டன.

* * *

வந்தியத்தேவனும் சேந்தன் அமுதனும் இளவரசரின் தூக்கம் கலையாமல் தூக்கிக் கொண்டார்கள். பூங்குழலி பின் தொடர்ந்து சென்றாள்.

கால்வாயின் கரையை அவர்கள் அடைந்தபோது சந்திரன் உதயமாகியிருந்தது.

கரையில் இளவரசரை ஒரு மரத்தின் பேரில் சாய்ந்து படுக்க வைத்தார்கள். பூங்குழலியை அவர் பக்கத்தில் இருக்கச் செய்துவிட்டு வந்தியத்தேவனும் சேந்தன் அமுதனும் தண்ணீரில் இறங்கினார்கள். முழுகிப் போயிருந்த படகை மிகப் பிரயாசையுடன் மேலே எடுத்துக் கரையோரமாகக் கொண்டு வந்தார்கள்.

இளவரசர் கண் விழித்தார். மிக மெல்லிய குரலில், "தாகமாயிருக்கிறது!" என்றார்.

பக்கத்தில் இருந்து அவரைப் பார்த்துக் கொண்டிருந்த பூங்குழலி செண்டியிலிருந்த பாலை அவருடைய வாயில் ஊற்றினாள்.

சிறிதளவு பால் அருந்திய பிறகு இளவரசர் "பூங்குழலி! நீதானா? சொர்க்க லோகத்தில் யாரோ ஒரு தேவ கன்னிகை என் வாயில் அமுதத்தை ஊற்றுவது போலத் தோன்றியது" என்றார்.

பஜ கோவிந்தம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

24

யாரைக் கோபிக்கிறாய்? ஏன் உள்ளத்தில் வீணே விரோதம் கற்பித்துக் கொண்டு துயரப்படுகிறாய்? உயிர்களெல்லாம் நம் கோவிந்தன் கோயில் அன்றோ? உன் உயிரும் நீ சண்டையிடும் தம்பியின் உயிரும் ஒன்றே யன்றோ?

என்மேல் ஏன் உன்கோபம் அண்ணே?
தன்னையே தான் வெறுத்தல் விவேகமோ?
என்னுயிருக்கும் உயிராவான் கோவிந்தன்
உன்னுயிருக்கும் அவனே உயிரன்றோ?

யாதுமோர் உயிர் எதிராமோருயிர்
எதுயிரும் கோவிந்தன் கோவிலே அன்றோ?
யாது பொருளுமில்லை உன்வெறுப்பில் அண்ணே
பேத எண்ணம் நீத்தெங்கும் ஒருயிரைக் காண்.

* * *

த்வயி மயிஸர்வத்ர ஏகோவிஷ்ணு:
வியர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு:
ஸர்வஸ்மின்னபி பச்யாத்மானம்:
ஸர்வத் ரோத்ஸ்ருஜ பேதாஜ்ஞானம்.

25

பகையென்றும் நட்பென்றும் பாராதே
மகனென்றும் உறவென்றும் மயங்காதே
நினைப்படி சேரவேண்டின் சீக்கிரமே
எவனின்றுகல்வதும் வேண்டாம்
சேர்வதும் வேண்டாம் நட்பென்று
யார் மாட்டும் நிற்பாய் ஒன்றுபோலே.

சத்ரௌ மித்ரே புத்ரே பந்தௌ
மாகுருயத்னம் விக்ரஹ ஸந்தௌ
பவஸமசித்தஸ் ஸர்வத்ர த்வம்
வாஞ்சஸ் யசிராத்யதி விஷ்ணுத்வம்.

நட்பும் பகையும் பற்றுக்களை நீட்டிக் கொண்டே போகும். பற்றினின்று துக்கமும் மயலும் பெருகிக் கொண்டே போகும். ஆகையால் சம சித்தத்தைப் பயில வேண்டும். யார் மாட்டும் உள்ளத்தை நடுநிலையில் நிறுத்தி எங்கும் பரவி நிற்கும் கடவுளைக் காண வேண்டும். அந்தப் பயிற்சியானது "விஷ்ணுத்வம்" என்று சங்கரர் சொல்லும் முக்தி நிலையைத் தரும்.

இது முடியுமா? நட்பும் பகையும் கொள்ளாமலிருக்க முடியுமா? சந்நியாசிகளுக்கு ஒருவேளை முடியும். உலக வாழ்க்கையிலிருக்கும் நமக்கு இது சாத்தியமா? கோபத்துக்கு எவ்வளவு காரணங்கள் இருக்கின்றன? அவற்றையெல்லாம் மறக்க முடியுமா? இது உண்மை. கோபம் உள்ளே இருக்க இல்லையென்று வேஷம் போடுவதில் பயனில்லை. மறப்பது கஷ்டமே. ஆனால் இதற்கு மருந்தும் சங்கரர் சொல்லுகிறார். கோவிந்தனே எல்லா உயிரிலுமிருக்கிறான் என்பதை அடிக்கடி மனத்தில் நினைப்பூட்டிக் கொள்ள வேண்டும். அவ்வாறு அடிக்கடி தியானித்து, "நான் என்னவெல்லாம் தவறுகள் செய்திருக்கிறேன், பிறருக்குத் தெரியாத எத்தனை குற்றங்கள் நான் என் உள்ளத்தில் செய்து மறைத்திருக்கிறேன்? கோவிந்தனுடைய விளையாட்டு பலவாறு நடக்கும், அதற்கு நான் கோபித்து என்ன பயன், வருத்தப்பட்டு என்ன பயன்?" என்றிவ்வாறு மனத்துக்குச் சொல்லிக் கொண்டு கோபத்தையும் வெறுப்பையும் அடக்கியாள வேண்டும். ஒன்றை மறக்க வேண்டுமானால் வேறொரு நல்ல விஷயத்தை மனத்தில் புகுத்தி உள்ளத்தை நிரப்ப வேண்டும். அதற்குத்தான் கோவிந்தனைப் பஜிக்கவேண்டும் என்பது.

"என்னுடைய குற்றங்களும் பாவங்களும் எவ்வளவோ இருக்க, அதற்காகக்

त्वयि मयि सर्वत्रैको विष्णुः ।
व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः ।
सर्वस्मिन्नपि पश्यात्मानम्
सर्वत्रोत्सृज भेदाज्ञानम् ॥

शत्रौ मित्रे पुत्रे बन्धौ
मा कुरु यत्नं विग्रहसन्धौ ।
भव समचित्तः सर्वत्र त्वम्
वाञ्छस्यचिराद्यदि विष्णुत्वम् ॥

கோவிந்தனை வழிபட்டு நற்கதி அடைய வேண்டியிருக்க, மற்றவர்களுடைய குற்றங்களையா நான் யோசித்துக் கொண்டிருப்பது? அதனால் சுகமும் இல்லை, துயரமே அனுபவிக்கிறேன். காலமும் கழிந்து போகிறது. சீக்கிரம் என் உள்ளத்தை நான் துப்புரவாக்க வேண்டும். கோவிந்தனைச் சரணடைந்தாலன்றோ அது முடியும்" என்று இரவும் பகலும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்த பின், அவகாசமிருக்கும் போதெல்லாம், ஒழிந்த நேரமெல்லாம் கோவிந்தனைத் தியானிப்பாய் என்பது சங்கரருடைய உபதேசத்தின் கருத்து.

காரணம் தெரிகிறதா?

அன்றைக்கொருநாள் விசேஷமாக செய்வதற்கு வேலை யொன்று மிருக்கவில்லை. சாய்மான நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு படுத்தேன். புஸ்தகம் எடுத்து வைத்துக் கொண்டு படிக்கலாம் என்று பார்த்தேன். அதிலும் மனசு பற்றவில்லை. கண்களை மூடிய வண்ணம் படுத்துக் கிடந்தேன். மனசு சும்மா இருக்கிறதா? அது தன் போக்கில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டது.

முதலில் மனசு, சமீபத்தில் கல்கத்தா அருகில் நிகழ்ந்த விமான விபத்தைப் பற்றிச் சிந்தித்தது. பாவம், எத்தனை பேர் இறந்து விட்டார்கள்! சே, சே, இந்த விமானப் பிரயாணமே ஆபத்துத்தான் போதும்—என்றெல்லாம் எண்ணினேன். பொழுது விடிந்தால் விமானப் பிரயாணம் செய்யக் கூடிய பொருளாதார நிலையில் என்னை வைக்காததற்குக் கடவுளுக்கு என் மனப்பூர்வமான நன்றி கூடச் செலுத்தினேன்.

ஆனால் ரயில் பிரயாணம் செய்யக் கூடிய பொருளாதார நிலையில் இருக்கிறோமே! ரயில் பிரயாணம் கூட இப்பொழுதெல்லாம் அவ்வளவு சௌகரியமுள்ளதாக நினைப்பதற்கில்லையே என்று நினைத்து வருந்தினேன்!

சரி, பஸ்ஸில் போவது கூட இப்பொழுது ஆபத்தாகப் போய்விட்டது. பத்திரிகையைப் புரட்டினால் பஸ்ஸை நிறுத்தி வழிப் பறி செய்ததாக அடிக்கடி செய்தி வரத் தொடங்கி விட்டது!

இப்படி வாழ்க்கையில் எந்தப் பிரயாணமும் ஆபத்து சூழ்ந்ததாக இருக்கின்றது. என்ன கஷ்டம்!

இவ்வாறு நான் பல பல எண்ணி மனம் சோர்ந்து போனேன்.

அடுத்தாற்போல் என் மனத்தைத் தேற்றிக் கொள்ள ஒரு கதை நினைவுக்கு வந்தது.

ஒருவர் ஒரு சமயம் படகில் பிரயாணம் செய்தார். அவருக்குப் பயமாக இருந்தது. அதனால் அவர் படகோட்டிய சிறுவனைப் பார்த்து, "அப்பா, தம்பி! உன் தந்தை எப்படியப்பா இறந்தார்?" என்று கேட்டார்.

"படகோட்டிக் கொண்டிருக்கையில் படகிலேயே செத்துப் போனார்" என்று கூறினான்.

"அப்படியிருந்தும், நீ இப்படகைக் கண்டு பயப்படவில்லையா?" என்றார் பெரியவர்.

சிறுவன் ஒரு கணம் யோசித்தான். "ஐயா, பெரியவரே! உங்கள் தந்தை எப்படி யிறந்தார்?" என்று கேட்டான்.

"கட்டிலில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த போது இறந்து விட்டார்" என்றார்.

"அப்படியானால் நீங்கள் கட்டிலில் படுத்துத் தூங்குவதற்குப் பயப்படுவதில்லையா?" என்று கேட்டான்.

இந்தக் கதை நினைவுக்குவந்ததும் மற்றொரு கதையும் எனக்கு நினைவுக்கு வந்தது! அதன் நினைவு சும்மா இருக்கவிட வில்லை என்னை!

பரபரப்புடன் பேனா எடுக்கச் செய்தது; துரு துருப்புடன் காகிதம் எடுக்கச் செய்தது; விடு விடு என்று என் மனசில் தோன்றிய எண்ணங்களை யெல்லாம் எழுதவும் சொல்லிற்று.

அப்படி என்னை வேலையில் ஈடு படுத்திய கதை என்ன வென்று கேட்கிறீர்களா?

ஒரு தளபதி இறந்து போனார். அந்தச் சமாசாரத்தைப்பற்றி இருவர் பேசிக் கொண்டனர். அது வருமாறு:

முதல்வர்: அந்தப் பிரபல தளபதி பட்டாளத்திலிருந்து ஓய்வு பெற்றார் அல்லவா பிறகு அவர் செய்வதற்கு வேலை ஒன்று மில்லாததாலேயே இறந்து விட்டாராம்!

மற்றவர்: ஒருவர் இறப்பதற்கு இந்தக் காரணத்தை விட வேறு வேண்டுமா என்ன

இப்பொழுது புரிகிறதா என் சோம்பலைக் களைந்து, சாய்மான நாற்காலியை விட்டு எழுந்து உங்களைத் தொந்தரவு படுத்துவதின் காரணம்?

—"வேங்கு



அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் – நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பள
வென்று ஜொலிக்கும்
புதுமைக்கு காஷ்மீர் புக்கே
டால்கம் பவுடரை உங்கள்
மேல் தாராளமாகத் தூவுங்கள்.
அது அதிகக் கசிவை உறிஞ்சுகிறது...எரிச்சலையும்
அரிப்பையும் அடங்கச் செய்கிறது... உங்களைக்
குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள்
முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மானிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806 லிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்கும் பெயர்போனது.


Firestone
பயர்ஸ்டோன்
கம்-டிப்பிடு டயர் இது ஒன்றே
LAS. (B)

கண்ணீர் சொன்ன கதை



எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்; ரெயிலிலும் காரிலும் மிதிபட்டு வந்த அலுப்பு. அதே அலுப்பு எனக்குந்தான் இருந்தது. இருந்தாலும் என் கண்கள் மூட மறுத்தன.

வெளியே பம்பாய்ப் பனி மழையாகப் பெய்து கொண்டிருந்தது. பெட்டகம் போன்ற வீட்டில், கதவுகளையெல்லாம் அடைத்து விட்டு, ஒன்றுக்கு இரண்டாகக் கம்பளிகளை மூடிக் கொண்டு உறங்கும்போதே, குளிர் உள்ளே புகுந்து என்னைச் சரியாகத் தூங்க விடாது. ஆனால், இங்கோ, திறந்த வெளிக்கு ஒப்பான ஓட்டை வீடு: எங்கு பார்த்தாலும் நட்சத்திர பங்களாவாகச் சந்து பொந்துகள்; அடைத்திருந்த ஜன்னல், வாயில் கதவுகளுக்கிடையே மனிதன் தாராளமாகப் போய் வரலாம்; அதோடு மூடிக்கொள்ளப் போர்வையும் கிடையாது; தூக்கம் எப்படி வரும் எனக்கு?

அந்தப் பிரயாணத்தை எதிர்பார்த்திருந்தால் அதற்கான 'முஸ்தீப்பு'க்களுடன் வந்திருப்பேன். அன்று மாலையில் மாதுங்காவுக்குச் சென்றிருந்தபோது, நண்பர் ஒருவர் "வஜ்ரேசுவரிக்குப் போகிறோம்; வருகிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆகா; தயார்" என்றேன்.

"சரி; கிளம்புங்கள்" என்றார் அவர்.

"இப்பொழுதேயா?"

"ஆமாம்; இன்னும் அரை மணி நேரத்தில் நாலு மணி ரெயிலைப் பிடித்து 'பேஸின் ரோடு'க்குப் போனால்தான், அங்கிருந்து புறப்படும் கடைசி பஸ்ஸில் ஏறி ராத்திரி வஜ்ரேசுவரி போய்ச் சேர முடியும்."

பம்பாயில் குடியேறிப் பல வருஷங்களாகியும் சமீபத்தில் இருந்த வஜ்ரேசுவரிக்குப் போகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது தெய்வச் செயலாக அந்தச் 'சான்ஸ்' முன்வந்து நின்றது. இதையும் நழுவவிட மனமில்லை. எனவே வீட்டுக்குச் செய்தி சொல்லி அனுப்பிவிட்டு உடுத்திய துணியுடன் கிளம்பி விட்டேன். கிளம்பிய போது இரவு அங்கே தங்கவேண்டும் என்பதை உணராமல் இல்லை. ஆனால் பம்பாய்க்குச் சுமார் நாற்பது மைல்களுக்கப்பால் போய் விடுவதால் குளிர் அவ்வளவாக இருக்காது என்று எண்ணினேன். அதோடு, 'வெந்நீர் ஊற்று உள்ள பூமி உஷ்ண பூமியாகத்தானே இருக்க வேண்டும்?' என்ற பொய்த்தோற்றம் ஒன்றும் என்னுள் இருந்தது. ஒரு இரவுதானே, தள்ளி விடலாம் என்ற தைரியத்தில் புறப்பட்டு விட்டேன். ஆனால், இங்கே என்னை நடுக்கிய குளிர் — அப்பப்பா! தாங்கவே முடியவில்லை.

* * *

இப்பொழுது 'வெஸ்டேர்ன் ரெயில்வே' ஆகியிருக்கும் பி. பி. அண்டு ஸி. ஐ. ரெயில் பாதையில், மின்சார வண்டியிலேறி, மாதுங்காவிலிருந்து சுமார் 25 மைல்கள் பிரயாணம் செய்தால் 'பேஸின் ரோடு' ஸ்டேஷனை வந்தடையலாம். அந்த ஸ்டேஷனிலிருந்து பதினெட்டு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது வஜ்ரேசுவரி. அடிக்கடி 'ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு' பஸ்கள் போய் வருகின்றன. விடுமுறை தினங்களில் இந்த பஸ்களில் கூட்டம் சொல்லி முடியாது. அதனால்தான் என் நண்பர்கள், முன்னாள் இரவே வஜ்ரேசுவரி போய்ச் சேர்ந்து விடுவதென்று திட்டமிட்டுக் கிளம்பியிருந்தனர்.

வஜ்ரேசுவரி ஒரு குக்கிராமம். அங்கே கோயில் கொண்டிருக்கும் அம்மனின் பெயரைத் தாங்கி நிற்கிறது அவ்வூர். ஆயினும் ஊருக்குச் சிறப்பைத் தருவது அந்தப் புராதன க்ஷேத்திரமல்ல. 'ஸல்பர் ஸ்பிரிங்ஸ்' என்று சொல்லப்படும் வெந்நீர் ஊற்றுக்களே அங்கே பிரதானம்.

வஜ்ரேசுவரியிலும் அதைச் சுற்றியும், பல வெந்நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. இயல்பாக மெல்ல மெல்ல ஊறிவரும் அந்த ஊற்றுக்களைச் சுற்றிச் சுவர் எழுப்பித் தொட்டிபோல ஆக்கிக் குளிக்க வசதி செய்திருக்கிறார்கள். மிதச் சூடு, அதிகச் சூடு, பொறுக்க முடியாத சூடு. இப்படிப் பலபல விதமான வெந்நீர் ஊற்றுக்கள் அருகருகே இருக்கின்றன. தண்ணீரில் கந்தகக் கலப்பு இருப்பதால், ஒருவித நாற்றம் இருக்கத்தான் இருக்கிறது. இருந்தாலும் அது சரும நோய்களுக்கு எப்படிப்பட்ட மருந்து! அதிலும் பனி நாட்களில், வெளியே இருக்கும் பொறுக்க முடியாத குளிருக்கு, இவ்வூற்

றுக்கள் ஒன்றில் அமிழ்ந்து கிடந்தால் எவ்வளவு இதமாக இருக்கிறது!

நான் வஜ்ரேசுவரிக்கு வந்தவனில்லை. ஆயினும் இவ்விவரங்களை யெல்லாம் போய் வந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தேன். ஆகவே, அந்தச் சுகத்தை அநுபவித்துப் பார்த்து விடுவதெனக் கிளம்பி வந்துவிட்டேன். ஆனால், குளிர்ந்த உடலுக்குக் கத-கதப்பு வேண்டுமென்று வந்து, தாங்க முடியாத குளிரில் சிக்கியல்லவா அவஸ்தைப்பட வேண்டியிருந்தது!

* * *

எத்தனை முயன்றும் என்னால் தூங்க முடியவில்லை. வெட வெடவென்று உடலும் பற்களும் தாளமிட்டன. சுருட்டி மடக்கிப் படுத்திருந்தவன் எழுந்து உட்கார்ந்தேன். பளிச்சென்று ஒரு யோசனை தோன்றிற்று: 'சே! எத்தனை மடையன் நான்! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறேனே! பேசாமல் வெந்நீர் ஊற்றில் போய் அமிழ்ந்து கிடக்காமல், எந்தப் பைத்தியக்காரனாவது இப்படி அவஸ்தைப் படுவானா?'

நாங்கள் வஜ்ரேசுவரிக்கு வந்து சேர்ந்த போது இரவு ஒன்பது மணி ஆகிவிட்டது. முன்னிருட்டுக் காலம். ஆகையால், எங்கும் போகாமல், எங்களுக்காக 'ரிசர்வ்' செய்திருந்த குடிலுக்குள் ஒண்டி, கொண்டு வந்திருந்த உணவு வகைகளைக் காலி செய்து விட்டு, காலையில் நாலு மணிக்கே எழுந்து, எல்லோருக்கும் முன்னால் குளிக்கச் சென்று விட வேண்டுமென்ற தீர்மானத்துடன் படுத்து விட்டோம்.

இப்பொழுது நடு இரவு தாண்டி விட்டது. எங்கும் ஆள் அரவமின்றி நிச்சப்தமாக இருந்தது! எனினும் பின் நிலவு வெளியே வெள்ளியாகக் காய்ந்தது. வெந்நீர் ஊற்றுக்கள் எங்கே இருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. அதனாலென்ன; தேடிக் கண்டு பிடித்து விடுவதெனக் கிளம்பி விட்டேன்.

ரஸ்தாவில் ஏறிச் சில அடிகள் நடந்ததுமே, தூரத்தில் ஆவிப் படலங்கள் பல தென்பட்டன. அங்கேதான் ஊற்றுக்கள் இருக்க வேண்டுமென, என் வேகத்தை யெல்லாம் சேர்த்துவைத்து ஓடினேன். ஆமாம்; அவை வெந்நீர் ஊற்றுக்கள் தாம். வினாடிகூடத் தாமதியாது, துண்டை உடுத்திக் கொண்டு 'அப்பாடா' என்று ஓர் ஊற்றில் இறங்கப் போனபோது யாரோ விசித்து அழும் குரல் என்னைத் திடுக்கிட வைத்தது. மனம் படபடக்கச் சுற்றிலும் ஒருமுறை நோக்கினேன். அது பொட்டலான இடம்; அருகே மாத்திரமல்ல; வெகுதூரம் வரையிலும் எவரையும் காணவில்லை. ஆனால் அந்த அழுகுரல் இன்னும் கேட்கிறதே!

சற்று உற்றுக் கேட்டபோது, அக்குரல் எனக்கு அருகிலிருந்தே வருவது தெரிந்தது. உடனே என் மனம் பேய்-பிசாசுகளை நினைத்துக்கொண்டு கதி கலங்கிற்று. அவ்வளவுதான். வெந்நீர் ஊற்றில் இறங்கப் போனவன், வீட்டுக்கு ஓடிவிடும் நினைவுடன் திரும்பினேன்.

"கடைசியில், நீயும் என் பிரலாபத்தைப் பொருட்படுத்தாமல்தான் போகிறாயா?"

என் மூச்சு அக்கணமே நின்றுவிட்டது. ஆம்! தெளிவான கூக்குரல் வெந்நீர் ஊற்றுக்குள்ளேயிருந்தல்லவா வருகிறது!

மிதமிஞ்சிய சோகம், பயம், இவை ஏற்படும்போது மனிதருக்குத் தம்மை மிஞ்சிய துணிவு ஏற்படும் என்று சொல்லுவார்களே, அதுதான், அப்பொழுது எனக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். "யார் அங்கே, ஊற்றுக்குள்ளே? வெளியே வா, இப்படி!" என்று கத்தினேன்.

"கோபிக்காதே மகனே! இந்த ஊற்றில் நான் மூழ்கடிக்கப் பட்டிருக்கிறேன். இதிலிருந்து நல்லதனமாக வெளியேறும் வகை அறியாமல்தான் மேலும், மேலும் நீர்பெருக்கி மாய்கிறேன்! மகனே, நீயாவது......"

முதிய குரலாக இருந்ததோடு பேசுவது பெண் என்பதும் இப்பொழுது எனக்குப் புலனாயிற்று. பெண் என்றதும், மனத்தைரியம் இன்னும் சற்று அதிகமாயிற்று. "நீங்கள் யாரம்மா? இந்த ஊற்றுக்குள்ளேயிருந்து பேசும் உங்கள் குரல் எப்படி வெளியே கேட்கிறது? இதற்குள் இத்தனை



நேரமாக அமிழ்ந்து கிடக்க உங்களுக்கு மூச்சுத் திணறவில்லையா?'' என்று வியப்புடன் வினவினேன்.

"நான்தான் வஜ்ரேசுவரி அப்பா! அதோ அரை மைலுக்கப்பால் குன்றின்மீது கோயி லெழுப்பி யிருக்கிறார்களே; அதில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் தெய்வம். ஆனால் அங்கே நீங்கள் காண்பது வெறும் கற்சிலை. என் நிஜ உருவம் உயிரோடு இந்த ஊற்றிலே புதைக்கப் பட்டிருக்கிறது!''

"அப்படியானால், நீங்கள் வஜ்ரேசுவரி தேவியின் ஆவியா?''

"ஆவி என்று நினைப்பவர்களுக்கு ஆவியாகவே இருப்பேன். உருவுடையவள் என்று கருதுபவர்களுக்கு உருவுடன் தோன்றுவேன். ஆனால், இன்றுவரை ஒருவராவது என்னை, என் நிலைமை, நான் சிந்தும் கண்ணீரை நினைந்துப் பார்க்க வில்லையே!''

"உங்கள் சோகந்தான் என்ன, அம்மா? வெறும் குரலையும் பேச்சையும் கொண்டு என்னால் எதுவும் நிச்சயிக்க முடியவில்லையே! சற்று வெளியே வந்து உங்கள் கதையைச் சொல்லுவீர்களா? என்னால் அதற்கு மாற்றுச் செய்ய முடியுமானால் செய்கிறேன்.''

"புதைபட்ட இடத்தை விட்டு நான் வெளிப்படலாகாது அப்பா. வெளிப்பட்டால், தெய்வமாகப் போற்றி வரும் என்னைப் பிசாசாக மதிப்பிட்டு விடுவார்கள்! இருந்தாலும் மகனே, என் உருவத்தைக்காண விரும்பினால், இதோ ஊற்றின் அடித்தளத்தைப் பார்.''

அவள் வாய்மூடு முன்பே என் கண்கள் ஊற்றை ஊடுருவின. உண்மைதான்; அங்கே, தலைவிரி கோலமாக, சோகத்தின் பிரதி பிம்பமாக, ஐம்பது வயது மதிக்கத் தக்க ஸ்திரீ ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர் ஆறுகப் பெருகி, அவளையே மூழ்கடித்துக் கொண்டிருந்தது.

"என்ன! நான் காண்பது வெந்நீர் ஊற்று இல்லையா?'' என்னை அறியாமலே வியப்புச் சூழ்ந்த உள்ளம் இக் கேள்வியை உதிர்த்தது.

"இல்லை மகனே, இது கண்ணீர் ஊற்று! வருஷக்கணக்காக, எந்த நாளில் இங்கே புதை பட்டேனோ அன்று தொடங்கி என் கண்கள் பொங்கிக் கொட்டும் கொதித்த தண்ணீர் ஊற்று!''

"தாயே, உங்கள் துயரம் யாது? ஐயோ, இறந்தும் இப்படிக் கண்ணீர் சிந்தும் உங்கள் சோக வரலாறுதான் என்ன?''

"கேள் மகனே! கடைசியில் நீயாவது என் துயரத்துக்குச் செவி மடுக்க மனம் கொண்டாயே, அப்படியே கரையில் உட்கார்ந்து கேள், குழந்தாய்'' என்று கூறி விட்டு வஜ்ரேசுவரி தன் கதையை எனக்குச் சொல்லலானாள்.



*   *   *

"உனக்குத் தாய் இருக்கிறாளா, அப்பா?'' என்று கேட்டாள் வஜ்ரேசுவரி.

"இருக்கிறாள் அம்மா!''

"சந்தோஷம்; அவளிடம் நீ எப்படி நடந்து கொள்ளுகிறாய்?''

"அவள்தான் என் கண்கண்ட தெய்வம்.''

"அப்படியா? அவ்வாறானால், நீ இவ்வுலகில் தவறிப் பிறந்த பிள்ளை. அது இருக்கட்டும்; உனக்குச் சகோதரர்கள் உண்டோ?''

"இல்லை அம்மணி; பெற்றோருக்கு நான் ஒரே மகன்.''

"அப்படியானால் உன் அன்னை பாக்கியம் செய்தவள். கேள் மகனே, இப்பொழுது என் கதையைச் சொல்லுகிறேன். இது நடந்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகி விட்டன. அப்பொழுது இந்த ஊர், இப்படிப் பட்டிக் காடாக இருக்கவில்லை. இது, அன்று ஒரு சிற்றரசரின் தலைநகர். அவருடைய பட்டமகிஷி நான். நெடுநாட்களாக எங்களுக்குப் புத்திர பாக்கியம் கிட்டவில்லை. எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டோம். எத்தனையோ நோன்புகளை அநுஷ்டித்தோம். ஆயினும் மக்கட்பேறு கிடைக்கவில்லை. அச்சமயம் ஒரு முனிசுவரர் எங்கள் அரண்மனைக்கு வந்தார். என் கணவர் அவரை அடி பணிந்து எங்கள் குறையை அறிவித்துக் கொண்டார்.

"கலி முற்றி வருகிறது, ராஜன்! புத்திரர்கள் பெற்றோரின் சத்துருக்களாக முளைக்கும் காலம் விரைவில் ஏற்படப் போகிறது.

உனக்கு மக்கட் பேறுதானே வேண்டும்? பெண்கள் பிறக்கும்படி ஆசி கூறுகிறேன்; போதுமா?" என்று கேட்டார் அம் முனிவர்.

"ஸ்வாமி, எத்தனை பெண்களைப் பெற்றாலும், மருந்துக்கு ஒரு புத்திரனாவது இல்லையென்றால், 'புத்' என்ற நரகத்தை அடைய நேரிடுமே" என்று வருந்தினார் என் பதி.

"சரி; நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். புத்திரப் பேறுதான் வேண்டுமென்றால் அவ்வாறே வரமளிக்கிறேன்" என்று கூறி, "ஒன்றுக்கு இரண்டு புத்திரர்களைப் பெறக் கடவாய்" எனக் கடாக்ஷித்தார் முனிபுங்கவர்.

"ஸ்வாமி, சற்புத்திரர்கள் பிறக்க ஆசிகூற வேண்டும்" என்று நான் அவரை வணங்கிக் கேட்டேன்.

"சற்புத்திரர்களா? வருங்காலத்தில் சத்தியம், நியாயம், நியதி எல்லாமே மூட்டை கட்டிவிடப் போகின்றன. அப்படியிருக்க எப்படிச் சற்புத்திரர்கள் தோன்றுவார்கள் அம்மா?" என்று சொல்லிச் சென்றார்.

'நல்லவர்களோ, கெட்டவர்களோ; நமது என்று உரிமை பாராட்டுவதற்கு மக்கள் கிடைத்தார்களே' என்று ஒருவர் பின் ஒருவராக இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்த போது நான் களிப்படைந்தேன்.

காலம் சென்றது. பிள்ளைகள் வளர்ந்தார்கள் — எப்படி? உலகத்திலுள்ள துர்க்குணங்களெல்லாம் அவர்களிடம் குடி கொண்டிருந்தன. யாரும் அவர்களுக்கு லட்சியமில்லை. எவருடைய நன்மொழியும் அவர்களுடைய செவிகளில் ஏறாது.

பிள்ளைகளின் போக்கால் மனமுடைந்த என் கணவர் நோய் வாய்ப்பட்டார். நெடுங்காலம் அவர் உயிர் தரிக்கவில்லை. போகும் போது, கண்களில் நீர் ததும்ப, "வஜ்ரேசுவரி, முனிவரின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் இரண்டு அதம சிகாமணிகளை மக்களாகப் பெற்று விட்டேன். என் ஆயுள் முடிந்து விட்டது. ஆனால் கண்ணே, பின் தங்கிவிடப் போகும் பெண் பேதையான உன்னை நினைக்கும் போதுதான் எனக்குப் பயம் ஏற்படுகிறது. இவர்களின் தொந்தரவுக்கு ஆளாகாதிருக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. அதை நான் செய்து விட்டேன். இந்த ராஜ்யத்துக்கு இனி நீயே அதிபதி. உனக்குப் பின் அரசை நிர்வகிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் உன்னுடையது தான். ராஜகுமாரர்கள் என்ற மமதையுடன் தான்தோன்றிகளாய்த் திரியும் இவர்களைக் கண்டித்து இழுத்து நல்வழிப்படுத்தும் கடிவாளம் உன் கையில் இருக்கிறது. அதைத் தகுந்தவாறு பிரயோகித்து, உன் வாழ்நாளிலாவது இவர்களை நல்ல பிள்ளைகளாகக் கண்டு, பிறகு என்னிடம் வந்து சேர்" என்று கூறி இறந்தார்.

நானும், அப்பொழுது அவருடைய இந்த முடிவை வியந்தேன். அரசுரிமை கிடையாது என்ற பயமுறுத்தலே என் மக்களை நல்வழிப்படுத்தச் சரியான ஆயுதம் என்று கருதினேன். ஆனால், அது என் உயிருக்கு உலைவைக்கும் வஜ்ராயுதமாக வல்லவா ஆகிவிட்டது!

கணவர் இறந்த பிறகு நான் பிள்ளைகள் இருவரையும் அழைத்து, "உங்களுக்கு ஒரு வருஷ அவகாசம் தருகிறேன்; அதற்குள் நீங்கள் திருந்தி, பொது ஜனங்களின் நன்மதிப்பைப் பெறுவிட்டால், இந்நாட்டைக் குடியரசாக்கி மக்களிடமே ஒப்படைத்து விடப் போகிறேன்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். அவர்கள் என் பயமுறுத்தலைப் பொருட்படுத்தவே யில்லை.

ஒரு வருஷத்துக்கு இரண்டு வருஷங்கள் காத்திருந்து பார்த்தேன். அவர்கள் நிலையில் மாற்றம் ஏதும் காணோம். இவர்களுடைய அட்டூழியத்தைச் சகிக்க முடியாமல் குடி மக்கள் ஒவ்வொருவராக நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்து விட்டனர். 'சரி; இனி இப்படி இருந்தால் பயனில்லை' என்று அவ்விருவரையும் சிறையில் அடைத்து விடும்படி கட்டளை யிட்டுவிட்டேன்.

இந்தத் தண்டனையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. காராக்கிரகவாசம் அவர்களைத் திருத்திவிடும் போலத் தோன்றிற்று. சில மாதங்கள் சிறைவாசம் செய்த பிறகு இருவரும், இனி நல்வழிப்பட்டு நடப்பதாகக் கூறி விடுதலை கோரி மன்றாடினார்கள். வெளியே விட்டுப் பார்த்தால்தானே திருந்தியதும், திருந்தாததும் தெரியும்? ஒரு மாதம் விடுதலை யளித்துப் பார்க்கலாமென்று இருவரையும் சிறையிலிருந்து விடுவிக்கச் செய்தேன். ஆனால் பாவிகள் ஒன்றாகச் சதி செய்து என்னைத் தீர்த்துவிடத் தீர்மானித்திருந்ததை நான் கண்டேனா?

நாள்தோறும் இரவு வேளையில் ஆண் வேடம் தரித்து நகர சோதனைக்குப் போவது என் வழக்கம். பிள்ளைகளை விடுவித்த அன்று சோதனை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த போது, இவ்விருவரும் என்னைக் குண்டுக் கட்டாகக் கட்டி எடுத்து வந்து இங்கே கிடத்தினார்கள்.

ராஜாங்க முத்திரைச் சின்னத்தை ஆபரணமாக மார்பில் அணிந்து கொண்டிருந்தேன். அதைக் கழற்றிக் கொடுக்கா விட்டால் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினர். 'உயிருள்ள வரையில் அதைக் கொடுக்கமாட்டேன்' என்று நான் எதிர்த்தேன். கடைசியில் இருவருமாக என்னைக் கழுத்தை நெரித்துக் கொன்று இங்கேயே குழி தோண்டிப் புதைத்துவிட்டு, அரசாங்க முத்திரைச் சின்னத்தை அபகரித்துச் சென்றனர். சென்றார்களே, அதன் பிறகாவது ஒழுங்காக ராஜ்யபாரம் செய்து வந்தார்களா? அது தான் இல்லை. மறுநாளே அரசுரிமை பற்றி இருவருக்கும் சண்டை வந்துவிட்டது. இறுதியில் ஒருவன்கூட ஒரு நாள் ஒரு பொழுதேனும் சிம்மாசனத்தில் அமராமலே, ஒருவரை ஒருவர் மாய்த்துக் கொண்டு அழிந்தார்கள். அரசனில்லாத நாடு பிறகு உருப்படுவது ஏது? கொஞ்சங் கொஞ்சமாக இந்த நகரம் பாழாயிற்று.

இவற்றை யெல்லாம் பார்த்து நான் துயரப் பெருக்கில் மூழ்கினேன். துர்மரணத்துக்கு ஆளானதால் என் ஆவி கரையேற்றப் படாமல் புதைபட்ட இடத்திலே இருக்க வேண்டியதாயிற்று. புதைந்த இடத்திலிருந்து வெளிப்பட்டால் பிசாசாகத் திரிய நேரிடும். ஆகவே, இங்கேயே இருந்து அழுது பிரலாபித்துக் கொண்டிருந்தேன். அருவி அருவியாக என் கண்கள் கண்ணீரைக் கொட்டின. பூமியின் உள்ளே பெருகிய அந்நீர் போக்கிடம் தேடி, அங்கங்கே ஊற்றுகளாக வெளிப்பட்டது. அதை வெந்நீர் ஊற்றென்று பாராட்டி புண்ய தீர்த்தமாகக் கருதி மக்கள் நீராடினர். ஒரு நாள் எங்களுக்குப் பிள்ளை வரம் அருளிய அந்த முனீசுவரரே, என் கண்ணீர் ஊற்றில் ஸ்நானம் செய்ய வந்தார். அவரிடம் என் கதையைக் கூறி அழுதேன். "ஸ்வாமி, எனக்கு எப்பொழுதாவது விமோசனம் ஏற்படுமா?" என்று அழுது பிரலாபித்தேன்.

"ஏற்படும் பெண்ணே! பழிக்குப் பழி வாங்கினால் உன் ஆத்மா சாந்தியடையும். தாயுள்ளத்தை அறியாது உன் பிள்ளைகள் உன்னைக் கொன்றதற்குப் பழியாக, ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையாய், அன்னையிடம் அழியாத பக்தி கொண்ட ஒரு மகனை, உன்னைக் கொன்றது போலவே கழுத்தை நெரித்துக் கொன்றாயானால் உனக்கு விமோசனம் உண்டாகும்!" என்று கூறிப் போனார்.

அத்தகைய பிள்ளை இந்தக் கலிகாலத்தில் எங்கே இருக்கப் போகிறான் என்றிருந்தேன். ஆனால் நல்ல வேளையாக, எனக்கு விமோசன மளிக்க இன்று நீ என்னைத் தேடி வந்து விட்டாய்!"

இவ்வாறு கதையை முடித்த வஜ்ரேசுவரி நான் எதிர்பார்க்கு முன்பே ஊற்றிலிருந்து எழும்பி வந்து என் குரல்வளையைப் பிடித்து நெரிக்க ஆரம்பித்து விட்டாள்.

எனக்கு மூச்சு திணறிற்று. விழிகள் பிதுங்கின. கண்டத்திலிருந்து "ஐயோ செத்தேன்!" என்ற சொற்கள் ஈனமாக ஒலித்தன.

* * *

"என்ன ஸார் இது? 'செத்தேன் - பிழைத்தேன்' என்று புலம்புகிறீர்கள்! எழுந்திருங்கள்! மணி நாலாகி விட்டது; குளிக்கப் போகலாம்" என்று நண்பர்கள் என்னை எழுப்பினார்கள்.

அப்பாடா! கடைசியில் நான் கண்டது கனவு தானா?

நண்பர்களிடம் அதைச் சொன்ன போது, அவர்கள் விழுந்து விழுந்து சிரித்து, "ராத்திரி பரசுராமர் கதையைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தோ மல்லவா? அதன் எதிரொலி!" என்றார்கள்.

எதன் எதிரொலியோ, வஜ்ரேசுவரிக்குப் போனதற்குச் சுகமான வெந்நீர் ஸ்நானத்துடன், அருமையான கதை ஒன்றும் எனக்குக் கிடைத்து விட்டது.



அல்ஜீரியாவில் உள்ள அராபியர் குடும்பம்

அல்ஜீரியா

மத்திய கேந்திரத்தில் உள்ள சில நாடுகளைப் போலவே டுனீசியாவும் சுதந்திரப் போரை ஆரம்பித்திருக்கிறது. சில தினங்களுக்கு முன் டுனீசியா தேசிய வாதிகளுக்கும் பிரஞ்சுப் போலீசாருக்கும் நடந்த போரில் பல அராபியர்கள் உயிர் இழந்தனர்.

பிரஞ்சு அதிகாரிகள் பல டுனீசியத் தலைவர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

அந்த நாட்டின் தனிப் பெரும் தலைவராக விளங்கும் ஹபீப் பௌர்கிபாவும் கைதியான தலைவர்களில் ஒருவர்.

பௌர்கிபா கைதியானார் என்ற செய்தி டுனீசியா மக்களிடையே இன்னும் அதிகக் கொந்தளிப்பை உண்டாக்கி விட்டது. அதன் விளைவாகப் பதினாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். டுனீசியாவில் உள்ள பிரஞ்சுப் போலீஸ் ஸ்டேஷன்கள் சூறையாடப் பட்டன.

“பிரஞ்சு சர்க்காரைக் காட்டிலும் பிரஞ்சு காலனி வெறியர்கள் அதிக சக்தி வாய்ந்தவர்கள். எனவே டுனீசியாவுக்குச் சாதகமாக உலக நாடுகளின் ஆதரவு ஏற்பட்டாலன்றி நமது நாட்டில் பிரஞ்சுக்காரர்கள் செய்து வரும் படுகொலைகளை நிறுத்த முடியாது” என்று ஹபீப் பௌர்கிபா கூறுகிறார்.

ஹபீப் பௌர்கிபா, ஸ்லிம் முதலிய செல்வாக்குள்ள தலைவர்களைப் பிரஞ்சு அதிகாரிகள் டுனீசியாவுக்கு அப்பால் உள்ள ஒரு தீவில் கொண்டு போய்ச் சிறைப்படுத்தி யிருக்கிறார்கள். பௌர்கிபா சிறையிலிருந்து சென்ற வாரத்தில் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இந்தியாவுக்கு அனுப்பிய ஒரு வேண்டுகோளை வாசக நேயர்கள் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். தங்கள் நாட்டில் நடந்துவரும் சுதந்திர யுத்தத்துக்கு இந்தியா ஆதரவு அளிக்கவேண்டும் என்று பௌர்கிபா இந்தியாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

டுனீசியாவின் தேசிய இயக்கத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்வதற்காகச் சென்ற வருஷம் ஹபீப் பௌர்கிபா, ஸ்லிம் இந்த இரு தலைவர்களும் இந்தியாவுக்கு வந்தனர்.

அந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு திடீரென்று தோன்றியதல்ல. முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பே டுனீசியாவில் தேசிய இயக்கம் உருவாகத் தொடங்கியது. மேற்படி நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர்கள் நாடு கடத்தப்பட்டு மாண்டதும் உண்டு.

1925-ம் வருஷம் பிரஞ்சுக்காரர்கள் மிகக் கொடுமையான அடக்கு முறைகளைக் கைக்கொண்டதால், டுனீசியா தேசிய வாதிகள், பல ஆண்டுகள் வரையில் இரகசியமாக வேலைசெய்து வந்தனர்.

இரண்டாவது மகாயுத்தம் முடிந்ததும், தங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்று டுனீசிய மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அவர்களின் நம்பிக்கை இன்றளவும் நிறைவேறவில்லை.

• • •

லிபியா, டுனீசியா நாடுகளை அடுத்துள்ள அல்ஜீரியாவும் ஒரு காலத்தில் ரோமியர்களின் காலனியாக இருந்தது. கி. பி. அறுநூறும் ஆண்டில் முகம்மதியர் படையெடுத்து அந்த நாட்டைக் கைப்பற்றிய பின்தான் அங்கு அராபியர்கள் குடியேறி ஸ்தாபிக்கலாயினர்.

ஸ்பெயினிலிருந்து விரட்டப்பட்ட மூர் ஜாதியினரும் அல்ஜீரியா தேசத்தில் வந்து குடியேறினார்கள்.

அல்ஜீரியா ஒரு காலத்தில் காட்டுமிராண்டிகளான கடல் கொள்ளைக்காரர்கள் அடங்கிய நாடாக இருந்தது என்பதைக் கேட்கப் பலரும் ஆச்சரியப்படுவார்கள்.

மொராக்கோ, அல்ஜீரியா, டுனீசியா, லிபியா முதலிய நாடுகளில் உள்ள ஒரு வகை ஜாதியினர், மத்தியதரைக் கடலில் செல்லும் கப்பல்களிலிருந்து கொள்ளையடிப்பதைத் தங்களுடைய தொழிலாகக் கொண்டிருந்தார்கள். 1550-ம் ஆண்டிலிருந்து சுமார் மூந்நூறு வருஷ காலம் மேற்படி கடலில் அவர்களுடைய ஆர்ப்பாட்டம் நீடித்திருந்தது.

அவர்கள் மத்திய தரைக் கடலில் செல்லும் பிரிட்டிஷ், பிரஞ்சு, ஸ்பானிஷ், அமெரிக்கக் கப்பல்களை நிறுத்தி அவற்றிலுள்ள சாமான்களைக் கொள்ளை யடிப்பது வழக்கமாக இருந்தது. அவர்கள் கொள்ளை யடிப்ப

துடன் நிற்கவில்லை. கப்பல் சிப்பந்திகளையும் பிரயாணிகளையும் அழைத்துச் சென்று அடிமைச் சந்தையில் விற்று வந்தார்கள்.

அவர்களுடைய கொடுமையிலிருந்து தப்புவதற்காக அமெரிக்கா அந் நாடுகளுக்குக் கப்பத் தொகைகளும் கொடுத்து வந்தது. கடைசியில் அமெரிக்கர்களும் பிரிட்டிஷாரும் கடற்படைகளைக் கொண்டு வந்து போர் புரிந்து, மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் நடந்துவந்த கொள்ளைகளைத் தடுத்தனர். அப்போது நடந்த போரில் அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜியர்ஸில் பெரும் பகுதி அழிந்து போயிற்று.



ஹபீப் பௌர்கிபா

அந்த நாட்டில் பேரீச்சை, அத்தி, ஆரஞ்சு, எலுமிச்சை, திராட்சை முதலிய பழ வகைகளும், கோதுமை, பார்லி முதலிய பல தரப்பட்ட தான்யங்களும் உற்பத்தியாகின்றன.

அங்கு இருபது லட்சத்துக்கு மேற்பட்ட பேரீச்சை மரங்கள் இருக்கின்றன. ருசியில் அல்ஜீரியா பேரீச்சம் பழங்கள் உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

அல்ஜீரியா மலைகளில் இரும்பு, ஈயம், தாமிரம், துத்தநாகம் முதலிய சுரங்கச் செல்வங்கள் இருக்கின்றன.

1830-ல் பிரான்ஸ் அல்ஜீரியாமீது படையெடுத்து அதைக் கைப்பற்றியது. அதிலிருந்து நாற்பது வருஷ காலம் அந்த நாடு பிரஞ்சு இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது! 1871-ம் வருஷத்தில் தான் அல்ஜீரியாவில் சிவில் சர்க்கார் ஏற்பட்டது. இன்றும் அது சுதந்திர மற்ற ஒரு பிரஞ்சுக் காலனியாகவே இருந்து வருகிறது.

அந்த நாட்டின் தலைநகரான அல்ஜியர்ஸ் மத்தியதரைக் கடலில் உள்ள ஒரு துறைமுகமாகும். அந் நகரில் மாணவர்களின் கல்வி வசதிக்காகப் பல கலாசாலைகள் இருக்கின்றன.

* * *

இச் சந்தர்ப்பத்தில் ஸஹாரா பாலைவனத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமாகும்.


மத்திய கேந்திர நாடுகள் சிலவற்றைப் பிளந்து கொண்டு செல்லும் ஸஹாரா பாலைவனம் உலகத்தில் உள்ள மற்ற எல்லாப் பாலைவனங்களையும் காட்டிலும் பெரியது.

இந்த மாபெரும் பாலைவனம் சுமார் மூவாயிரத்து இருநூறு மைல் நீளமும் ஆயிரத்து நானூறு மைல் அகலமும் இருக்கிறது! உலகத்தின் பெரும்பாலான நாடுகளும் மனித சஞ்சாரமில்லாத, மணல் சமுத்திரமான ஸஹாரா பாலைவனத்தைக் காட்டிலும் மிகச் சிறியவை என்பதைக் கவனிப்போர் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

* * *

எட்டரை லட்சம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள அல்ஜீரியாவின் ஜனத்தொகை சுமார் எண்பது லட்சம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோரும் அராபியர்கள்தான். அங்கு சுமார் பத்து லட்சம் ஐரோப்பியர்களும் இருக்கிறார்கள்.

அல்ஜீரியா நாட்டின் தெற்கு எல்லை எங்கே இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. அது உலகிலேயே பெரிய, பயங்கரமான ஸஹாரா பாலைவனத்தினிடையே இருப்பதே அதற்கு முக்கிய காரணம்.



அங்கு கோடைகாலத்தில் உஷ்ணம் நூற்றுமுப்பது டிகிரிக்கு மேல் இருக்கும். எனவே சிற்சில சமயங்களில் அங்கு பெய்யும் மழை பூமியில் வந்து விழுவதற்கு முன்பே ஆவியாக மறைந்து விடுவது உண்டு! அங்கு பகலில் உஷ்ணம் அதிகமாக இருப்பது போல் இரவில் குளிரும் சகிக்க முடியாமல் இருக்கும்.

அந்தப் பாலைவனத்தில் அடிக்கும் பயங்கரமான மணல் காற்றை ஒட்டகம், நெருப்புக் கோழி இந்த இரண்டு பிராணிகளைத் தவிர வேறு எதனாலும் எதிர்த்து நிற்க முடியாது.

ஜலவசதியுள்ள மேற்படி பாலைவனத்தின் எல்லைகளில் சிங்கம், சிறுத்தை, கழுதைப்புலி, மனிதக் குரங்கு, மலைப் பாம்பு முதலியவை ஏராளமாக இருக்கின்றன.



உகந்த ஜோடி
"என்னைப் போலவே
நான் கைப்பிடித்தவளும்...
கோபுரம் மார்க் பன்னீர், சந்தனாதி, அரைக்கீரை விதைத் தைலம், ஜெகன் மோகனா பத்தி, ஒயிட் ரோஸ் ஹேர் ஆயில், அரகஜா மீது அபார மோகம் கொண்டிருக்கிற நாங்கள் எப்படிப் பட்ட உகந்த ஜோடி பார்த்தீர்களா?"
K.T.R
வாசனாதி திரவிய உற்பத்திசாலை.
விஜயபுரம்.....திருவாரூர், தெ. இந்தியா.



அமரபுரி இளவரசி

~ விஜயம் ~

8. மாய வித்தை!

கமலம் சதா சர்வகாலமும் கடற்கரையிலேயே உட்கார்ந்து கொண்டிருப்பான். அவன் அலைகள் மோதும் சமுத்திரத்தைப் பார்த்து ஆனந்தப் படுவதற்காகவா போனுன்? இல்லை, சமுத்திரக் காற்றை அநுபவிக்கவா போனுன்? சகோதரர்களைப் பிரிந்து, தந்தையைப் பிரிந்து, அரண்மனை வாழ்வைத் துறந்து, அநாதையைப் போல வனவாசம் செய்ய ஆரம்பித்திருக்கும் கமலத்துக்குச் சமுத்திரத்தைப் பார்த்து ஆனந்த மடையத் தோன்றுமா? சித்தியின் கொடிய சூழ்ச்சியினுல் அன்னப் பறவைகளாகி விட்ட தன் அண்ணன்மார்களைப் பற்றிய நினைவில்தான் அவன் சதா ஈடுபட்டிருந்தான். அன்னப் பறவைகள் வருகின்றனவா என்று எதிர் பார்த்துக் கொண்டு, தூங்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் எல்லாம் கமலம் கடற்கரையிலேயே இருந்தான்.

கிழவி கமலத்தை மிகவும் அன்போடு பாதுகாத்து வந்தாள். அந்த வனப் பிரதேசத்திலிருந்த பெரிய பெரிய மரங்களும் பச்சைக் கொடிகளும் அவற்றில் பூத்துக் குலுங்கும் மலர்களும் கமலத்துக்கு மிகவும் உற்சாகமளித்தன. அந்த மரங்களில் வாழ்ந்து வந்த பறவையினங்கள் கமலத்துக்குச் சதா துணையிருந்தன. பாடுங் குயில்களின் இன்ப கீதம் அவனைப் பரவசப்படுத்தியது. ஆடும் மயில்களின் ஆனந்தம் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. 'ஓ' வென்று ஓசை யெழுப்பும் கடல் கமலத்தின் உள்ளத்துக்கு அமைதியை அளித்தது. அரண்மனையிலேயே அடைபட்டுக் கிடந்தால் கமலம் இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்து அநுபவிக்க முடியுமா?

காட்டில் கிடைக்கும் அருமையான கனிகள்தான் கமலத்துக்கு ஆகாரம். கிழவி ஒரு நல்ல பசுமாடு வளர்த்தாள். அதன் சுவையுள்ள பால் கமலத்துக்கு எவ்வளவோ சந்தோஷத்தை அளித்தது.

கமலம் கடற்கரையில் உட்கார்ந்து நீலவானத்தைப் பார்த்து அலுத்துப் போய்விட்டான். பொன்னிற அன்னப் பறவைகள் வருகிற வழியாயில்லை. இதேமாதிரி இரண்டு மூன்று மாதங்கள் சென்றன.

அன்று காலையில் எழுந்ததும் கமலத்துக்கு மிகவும் உற்சாகமாயிருந்தது. அவளுக்கே காரணம் விளங்கவில்லை. வழக்கம் போல் கடற்கரைக்குச் சென்று வெய்யில் சுரீர் என்று உறைக்கிறவரையில் உட்கார்ந்து விட்டுத் திரும்பினுள். பிறகு பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கிழவிக்கு ஒத்தாசையாக வீட்டுக் காரியங்களைச் செய்து விட்டு, மாலையில் கடற்கரைக்குப் போனுள்.

மாலைச் சூரியனின் பொன்னிற வெய்யில் பட்டு மரங்களும் செடிகளும் கொடிகளும் தங்கமயமாகத் தோற்றம் அளித்தன. சமுத்திர அலைகள் அந்த அஸ்தமன சூரியனின் ஒளிபட்டு வர்ண ஜாலங்களை அள்ளித் தெளித்தன. நீலக் கடலில் சுருண்டு விழும் அலைகள் வெண்மையான நுரைகளை வாரிச் சொரிவதையும், அந்த நுரைகளுக்கும் அலைகளுக்கும் மத்தியில் மாலை வெய்யில் தங்கக் கோலம் போடுவதையும் பார்த்துக் கமலம் பூரித்துப் போனுள்.

கமலம் அந்த இயற்கைக் காட்சியில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்த போது ஒரு ஆச்சரியமான காட்சியைக் கண்டாள். களங்கம் இல்லாதிருந்த நீலவானத்தில் அழகிய பொன்னிற நட்சத்திரங்கள் பள பளவென்று மிதந்து வருவதைப் பார்த்தாள். வர வர அந்த நட்சத்திரங்கள் பெரிதாகிக் கொண்டே வந்தன. சில நிமிஷங்களுக்குள் அந்த நட்சத்திரங்கள் இன்னும் இன்னும் பெரிதாகிக் கரையை நோக்கி வேகமாகப் பறந்து வந்தன.

அவைகள் கரையை நெருங்க நெருங்கக் கமலத்துக்கு ஆனந்தம் பொங்கியது. அவைகள் நட்சத்திரங்கள் அல்ல என்பதும் பொன்னிற அன்னப் பறவைகள் என்பதும் அவளுக்கு இப்பொழுது நன்ருய்த் தெரிந்தது. நீல வர்ண ஆகாயத்தில் தங்க வர்ண அன்னங்கள் பறப்பது அழகாய்த்தான் இருந்தது. அஸ்தமன சூரியனின் மஞ்சள் வெய்யில் பட்டு அந்த அன்னப் பறவைகளின் பொன் இறகுகள் தகதக வென்று பிரகாசித்தன. கொஞ்ச தூரத்தில் அந்தப் பறவைகள் கீழாகப் பறந்து ஒரு மரத்தின் ஓரமாகத் தரையில் இறங்கின.

கமலம் உடனே அவைகளை எண்ணிப் பார்த்தாள். சரியாய்ப் பதினொரு அன்னங்கள் இருந்தன. சந்தோஷ மிகுதியால் அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஆனால் அவள் கொஞ்சமும் பரபரப்புக் காட்டவில்லை. அன்னப் பறவைகள் ஓடிப் போய்விடுமோ என்று அவளுக்குப் பயம். மேலும் பறவை உருவத்தில் இருக்கும் அவளுடைய அண்ணன்மார்கள் அவளை எப்படித் தெரிந்து கொள்ளுவார்கள்? 'அண்ணா!' என்று அழைத்தால் அன்னப் பறவைகளுக்கு விளங்க வேண்டுமே! அவைகளுக்குப் பக்கத்தில் போனால் ஒருவேளை தங்களைப் பிடிக்க வருவதாக நினைத்துப் பறவைகள் பறந்து போய்விட்டால்? இந்த நினைவெல்லாம் அவள் மனதில் தோன்றிக் கவலையில் ஆழ்த்தியது.

சில நிமிஷங்களில் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். மெதுவாக எழுந்து, அந்த அன்னப் பறவைகள் தன்னைப் பார்க்காத விதத்தில் நடந்து, அந்த மரத்துக்குப் பின்புறமாகச் சென்று நின்று கொண்டாள். அப்போது சூரியன் அஸ்தமித்துக் கொஞ்ச நேரம் ஆகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக இருள் பரவ ஆரம்பித்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்த அன்னப் பறவைகள் தங்கள் சிறகுகளைப் பட பட வென்று அடித்துக் கொண்டன. ஆகா! என்ன ஆச்சரியம்! அந்தப் பதினொரு பொன்னிற அன்னப் பறவைகளும் மறைந்து விட்டன. அதே இடத்தில் பதினொரு இளவரசர்கள் நின்று கொண்டிருந்தனர்!

கமலத்துக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. நின்று கொண்டிருந்தவர்கள் அவளுடைய அண்ணன்மார்கள்தான். இவ்வளவும் உண்மையா? இல்லை, கனவு காண்கிறோமா என்று அவளுக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது. கண்களைத் தேய்த்துவிட்டுக் கொண்டு பார்த்தாள். உண்மைதான். கொஞ்சங் கூடச் சந்தேகமில்லை. அவளுடைய அண்ணன்மார்கள்தான் அவர்கள்!

கமலம் தாங்க முடியாத சந்தோஷத்தினால் தன்னை மறந்து "பாட்டி!" என்று பலமாகக் கூப்பிட்டு விட்டாள்.

உடனே அவளுடைய சகோதரர்கள் திடுக்கிட்டு நாலாபுறமும் பார்த்தார்கள். மரத்துக்குப் பின்புறத்தில் பிரமை பிடித்தவள் போல் கமலம் நிற்பதைப் பார்த்தார்கள்.

உடனே சகோதரர்களில் கடைசி இளவரசன், "கமலம்! கமலம்! நீ எப்படியம்மா இந்தக் கொடிய நாட்டுக்கு வந்தாய்!" என்று ஆச்சரியத்தோடு கேட்டான். பிறகு அவன் கமலத்தின் கையைப் பிடித்து அழைத்து வந்தான். மற்றச் சகோதரர்களும் அவளைப் பார்த்துப் பரம சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தார்கள்.

கமலம் 'பாட்டி!' என்று சற்று நேரத்துக்கு முன் கத்தினாள் அல்லவா? அந்தக் குரல் கேட்டுக் கிழவி ஓடிவந்தாள். ஏதாவது கொடிய மிருகங்களிடம் கமலம் அகப்பட்டுக் கொண்டு விட்டாளோ என்று கிழவிக்குப் பயமாய்ப் போய்விட்டது.

கமலத்தைத் தேடிக்கொண்டு மரத்தடிக்கு வந்து சேர்ந்த கிழவிக்கு ஆச்சரியத்தினால் மூச்சே நின்று விடும்போல் ஆகிவிட்டது. வீராதி வீரர்களான பதினொரு இளவரசர்களும் அவர்களுக்கு மத்தியில் அழகி கமலமும் நின்று கொண்டிருந்தார்கள்.

"கமலம், எப்படி நீ இவர்களைக் கண்டு பிடித்தாய்? அன்னப் பறவைகளாக இவர்கள் மாறிவிடவில்லையா? மந்திரம் பலன் அற்றுப் போய்விட்டதா?" என்று கிழவி ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கலந்த குரலில் கேட்டாள்.

"பாட்டி, எனக்கு ஒரு விவரமும் தெரியாது. ஆகாயத்திலிருந்து பொன்னிற அன்னங்கள் பறந்து வந்து இங்கே இறங்கின. நான் பார்த்து விட்டு இங்கே ஓடிவந்தேன். எனக்குக் கொஞ்ச நேரம் வரையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. உன்னைக் கூப்பிடலாம் என்று பார்த்தால் அதுவும் முடியவில்லை. இவ்வளவு தூரத்திலிருந்து பலமாகக் கத்தினால் பறவைகள் பறந்து விடுமே! எல்லாவற்றுக்கும் பக்கத்தில் வந்து பார்க்கலாம் என்று இங்கே வந்து மரத்தின் பின்னால் நின்றேன். மறு நிமிஷம் அவைகள் மறைந்து என் அண்ணன்மார்கள் வந்துவிட்டார்கள். நான் இந்த அதிசயத்தைப் பார்த்ததும் என்னையும் அறியாமல் பலமாக உன்னைக் கூப்பிட்டு விட்டேன்!" என்றாள் கமலம்.

உடனே, கிழவி "சரி, நம்முடைய குடிசைக்குப் போய் எல்லாவற்றையும் கேட்கலாம். இளவரசர்கள் களைத்திருக்கிறார்கள். அவர்கள் பழமும் பாலும் சாப்பிட்டு விட்டுச் சொல்லட்டும்!" என்றாள்.

இளவரசர்களும் கமலமும் கிழவியைத் தொடர்ந்து சென்றார்கள். (தொடரும்)




"ஓய்! நீர்தானே என்னை ஏமாற்றிய அந்தப் பழைய டாக்டர்? நினைவு இருக்கிறதா, 1908 வருஷம் ஜலதோஷத்திற்காக நான் உங்களிடம் வந்தேனே?"

"ஆமாம், நான்தான் உங்கள் ஜலதோஷத்தை நிவர்த்தி செய்து அனுப்பினேனே!"

"நாசமாய்ப் போச்சு, நிவர்த்தி செய்த அழகு! அதுதான் மறுபடியும் வந்து விட்டதே!"



சந்தனமணமென்றால் இது!



"நான் உபயோகித்திருக்கும் இதர சந்தன சோப்புகளில் உங்கள் சோப்பிலிருக்கும் நறுமணம் இல்லை" என்று திருப்தி அடைந்த நேயர் ஒருவர் எழுதுகிறார்.

இவருக்கு எங்கள் வந்தனம்

மேட்டூர் சந்தன சோப்

தயாரிப்பு :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் லிட்.

திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜெண்ட்ஸ் :

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிட்.

120, அரமனைக்கார வீதி, சென்னை-1



12. என்ன தவறு?

தூரத்தில் தெரிந்த பொன்னியின் வீடு ராஜாளி மடம் போல் இல்லை. அழகான சிறிய ஓட்டு வீடு. வீட்டைச் சுற்றிலும் முள் வேலி வைத்து அடைத்த சிறிய தோட்டம். வேதாவின் கண்களுக்கு அப்பொழுது அவைகளெல்லாம் பார்க்க ரம்மியமாக இருந்தன. பொன்னியின் வீட்டில் அவளுடைய தாயார் இருப்பாள். பாட்டி இருப்பாள். இன்னும் யார் யார் இருப்பார்களோ! டாக்டர் வந்து காத்திருப்பார் என்று வேறு பொன்னி சொல்லியிருந்தாள். அவரைச் சந்திக்கத்தானே வேதாவை அழைத்து வருகிறாள் பொன்னி! இதை நினைத்தவுடன் வேதாவின் இருதயமே சில்லிட்டது. அவள் மனத்தில் அர்த்தமற்ற கூச்சம் எழுந்தது. அவளைக் கண்டதும் பொன்னியின் தாயார் எப்படி நடந்து கொள்வாளோ! அவளுடைய தாயாரோடு எப்படிப் பேசுவது! எப்படி நடந்து கொள்வது!—இவை எல்லாவற்றையும் சிந்தித்த வண்ணம் சிலைபோல் அமர்ந்திருந்தாள் வேதா. அவளுக்கு எல்லாம் புதுமையாகவும் விசித்திரமாகவும் இருந்தன. இத்தனை நாள் வரையில் அவள் வேறு எவருடனும் நெருங்கிப் பழகியதில்லை. இந்தப் பரந்த உலகில் எத்தனை ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள்! அவர்களெல்லாம் எப்படிப்பட்ட குணமுடையவர்களோ, அவளுக்குத் தெரியாது!

"எங்கள் வீடு இவ்வளவு சிறிதாக இருக்கிறதே என்று யோசிக்கிறாயா! சின்ன வீடாக இருந்தாலும் எங்கள் வீடு அழகான வீடு. ராஜாளி மடம் போல் இல்லை. இந்தச் சின்ன வீட்டில்தான் நாங்களெல்லாரும் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்கிறோம். இதைப் பார்த்தவுடனே உன் மனதிற்கு நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படவில்லையா!" என்று கேட்டாள் பொன்னி.

"ஆமாம்!......" என்றாள் ஏதோ யோசித்த வண்ணம் வேதா.

"உன்னைக் கண்டதும் என் தாயாரும் பாட்டியும் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள், தெரியுமா!"

பொன்னி அந்த வார்த்தையைச் சொல்லி முடிக்கு முன்னரே வண்டி அவளுடைய வீட்டு வாசலில் வந்து நின்றது.

வீட்டு வாசலில் பொன்னியின் தாயார் செல்லி நின்று கொண்டிருந்தாள். பொன்னி வண்டியிலிருந்து கீழே இறங்கி வேதாவையும் கையைப் பிடித்துக் கீழே இறக்கி விட்டாள்.

"வா அம்மா, வா!" என்று செல்லி உபசார வார்த்தைகள் சொல்லி வேதாவை வீட்டிற்குள்ளே அழைத்துச் சென்றாள். அந்த வீட்டுத் தாழ்வாரத்தில் ஒரு சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஓட்டு வீடுதான். தாழ்ந்த உத்திரம். சிறிய தூண்கள். தரையிலும் சுவரிலும் கரியும் சாணமும் கலந்து மெழுகி இருந்தது. அந்தச் சிறிய தாழ்வாரத்தை அடைத்து மண்ணால் செய்யப்பட்ட இரண்டு தானியக் களஞ்சியங்கள் வைக்கப்பட்டிருந்தன. வீட்டு முற்றத்தில் ஒரு புறம் வேர்க்கடலையும், மற்றொரு புறம் துவரையும் கொட்டப்பட்டிருந்தன. பதம் செய்யப்பட்டுக் கத்தை கத்தையாக உயரே தொங்கவிடப் பட்டிருந்த புகையிலை ஒருவிதமான வாசனையைக் கிளப்பிக் கொண்டிருந்தது. இவைகளெல்லாம் அந்த வீட்டின் இடத்தை அடைத்துக் கொண்ட பின்னும், பாக்கி இருக்கும் இடங்களில் வரிசையாகப் பானைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு களஞ்சியத்திற்குப் பக்கத்தில் கிழவி ஒருத்தி முனகியபடியே முடக்கிப் படுத்துக் கிடந்தாள். அவள் தான் பொன்னியின் பாட்டி என்பதை வேதா மிகவும் எளிதாக உணர்ந்து கொண்டாள். வேதா இம்மாதிரியான வீட்டை இது வரை கண்டதே இல்லை. இடத்தை அடைத்துக் கொண்டு இவ்வளவு சாமான்கள் இருந்தாலும் அந்த வீடு மனதிற்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடுக்கக் கூடியதாகத்தான் வேதாவிற்குத் தோன்றியது. அவள் அந்த வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றாள்.

"என்னம்மா இப்படிப் பார்க்கிறாய்! எங்கள் வீடெல்லாம் இப்படித்தான் இருக்கும். நாங்கள் பாடுபட்டு வேலை செய்யும் ஏழைக் குடியானவர்கள் தானே...!" என்றாள் செல்லி.

"ஏழைக் குடியானவர்கள் வீடாயிருந்தாலும் இந்த வீடுதான் சொர்க்கம். அரண்மனை மாதிரி வீடு இருந்து என்ன புண்ணியம், அங்கே பேயும் பிசாசும் இருந்தால்!" என்றாள் பொன்னி. வேதா ஒன்றும் வாய் திறக்கவில்லை. அவள் மனத்திற்குள் மெதுவாகச் சிரித்துக் கொண்டாள்.

"அதிருக்கட்டும், அம்மா! டாக்டர் ஐயாவை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்! அவரைக் காணோமே என்றுதான் வேதா இப்படிப் பரபரவென்று விழிக்கிறாள்" என்றாள் பொன்னி.

"அவரா! தோட்டத்திலே கட்டிலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார், பாவம்! பொன்னி இப்படி ஒரு பெரிய மனிதரைக் காக்க வைக்கலாமா!" என்று கேட்டாள் செல்வி.

"பாவமா! அவர் யாருக்காகக் காத்திருக்கிறார்! எங்கள் வேதாமாதிரி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள அவர் ஒரு கோடி வருஷம் வேண்டுமானாலும் காத்திருக்கலாமே!" என்றாள் பொன்னி.

"ஆமாம், நான் உனக்காகக் காத்திருக்கவில்லையா...!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் மருதப்பன்.

வேதா தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தாள். வெட்கத்தால் அவள் கன்னங்களில் சிவப்பேறியது. அவளுடைய அமிழ்ந்த விழிகளில் ஒரு புது அழகு கூடியது. அழகிய அதரங்களில் புன்முறுவல் களித்தது.

"சரி, வா! தோட்டத்திற்குப் போவோம்" என்று சொல்லி வேதாவின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் பின்புறமாயுள்ள தோட்டத்திற்குச் சென்றாள் பொன்னி. அந்தச் சமயத்தில் மருதப்பன் ஒருவிதமான குறும்புச் சிரிப்புடன் பொன்னியின் முகத்தைப் பார்த்தான். அந்தச் சிரிப்பிற்குப் பதில் கூறுவதுபோல் கண் ஜாடையாகவே ஏதோ சமிக்ஞை செய்துவிட்டுப் போனாள் பொன்னி.


அந்த வீட்டிற்குப் பின்புறம் இருந்த தோட்டம் மிகச் சிறியதுதான். ஒரு சிறிய குடிசை. ஒரு வைக்கோல் போர். இரண்டு மூன்று மரங்கள். வைக்கோல் போருக்குச் சமீபமாக இரண்டு பசுமாடுகளும், இரண்டு காளை மாடுகளும் கட்டப்பட்டிருந்தன. சிறிய குடிசைக்குச் சமீபமாகப் போடப்பட்டிருந்த கட்டிலில்தான் டாக்டர் பரசுராமன் அமர்ந்திருந்தார். வாசற்புறத்தில் வண்டி வந்து நின்றதும், வீட்டிற்குள்ளே பொன்னியும் வேதாவும் பேசிக் கொண்டிருந்ததும் அவருக்குத் தெரியும். அவருடைய மனது வேதாவைப் பார்க்க வேண்டுமென்று ஆவலாகத்தான் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் தன் மனத்துள் எழுந்த ஆவலை வெளியே காட்டிக்கொள்ள அவர் சங்கோசப் பட்டார். பொன்னி வேதாவை அழைத்துக் கொண்டு வருவதைப் பார்த்ததும் அவர் சட்டென்று எழுந்து நின்றார்.

பொன்னி அவருக்குச் சமீபமாக வந்து, "பாவம்! ரொம்ப நேரமாக இந்தத் தோட்டத்திலே காத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. இதோ அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன், உங்கள் ராணியை! இது ராஜராணி மடம்இல்லை. இங்கே உங்கள் மனத்திலுள்ளதையெல்லாம் பயப்படாமல் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்" என்றாள்.

டாக்டர் சிரித்துக் கொண்டே, "பொன்னி! நீ ரொம்பப் பொல்லாதவள். என்ன தைரியம்! இந்த நிசி வேளையில் அந்தக் கோட்டையில் இருந்து இவளை எப்படி இங்கே அழைத்துக் கொண்டு வந்தாய்!" என்று கேட்டார்.

அவர் குரலில் ஆச்சர்ய பாவம் தாண்டவமாடியது. அவர் பொன்னியிடம் பேசிக் கொண்டிருந்தாரே தவிர அவருடைய பார்வையெல்லாம் பொன்னியின் தோளைப் பிடித்துக்கொண்டு நின்ற வேதாவிடமேதான் லயித்திருந்தது. வெண்ணிலவின் குளுமையான ஒளியில் வேதாவின் வதன அழகு முன்பு அவர் கண்ட அழகைவிட இன்னும் எவ்வளவோ சிறந்ததாகவும் வேறானதாகவும் அவருக்குத் தோன்றியது. வெட்கத்தாலும் கூச்சத்தாலும் வேதா தலை குனிந்த வண்ணமே நின்று கொண்டிருந்தாள். அவளுடைய இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"சரி, நான் போகிறேன். உங்களுக்குள் தனியாகப் பேசிக் கொள்ள எவ்வளவோ ரகசிய மிருக்கும்" என்று சொல்லிவிட்டுப் பொன்னி சட்டென்று வீட்டிற்குள் போய்விட்டாள். வேதா இப்படி நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை. அவளும் பொன்னியைப் பின் தொடர்ந்து சென்றுவிட நினைத்தாள். ஆனால் அந்தச் சமயத்தில் அந்த இடத்திலிருந்து ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாத மதிமயக்கம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. டாக்டர் பரசுராமன் ஆர்வத்தோடு அவள் முகத்தையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார். பிறகு, "வேதா, இங்கே வா! உன்னோடு சில வார்த்தைகள் பேச வேண்டும்" என்று தழுதழுத்த குரலில் அழைத்தார். அவருக்குக் கூட அப்பொழுது கனவு உலகத்திலிருப்பது போல்தான் தோன்றியது. இருளடைந்து சூன்யமே உருவான ஒரு பெரிய வீட்டில் தனி அறையில் ஒரு நாள் துயரம் நிறைந்த வேளையில் அவர் அவளைச் சந்தித்திருந்தார். இன்று இரண்டாவது தடவையாக அவளைச்



சந்திக்கிறார். ஆனால் அன்று அவர் மனதிலிருந்த பயமும் பீதியும் இன்று இல்லை. அன்று இருந்த உணர்ச்சி வேறு; இன்று அவருக்கு ஏற்பட்டுள்ள உணர்ச்சி வேறு. அந்த இடம் வேறு; இந்த இடம் வேறு. இன்று அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு கூட்டைத் திறந்துகொண்டு வந்த பறவையைப் போல் அந்தப் பயங்கரமான கட்டிடத்திலிருந்து கட்டுக் காவலை மீறிக்கொண்டு அவள் வந்திருக்கிறாள். அறியாமையே உருவான பெண்ணான அவள், காதலால் உந்தப்பட்டு அவரைக் காண வேண்டுமென்று வந்திருக்கிறாள். இப்பொழுது இந்த இடத்தில் அவர்கள் சுதந்திரமாகத் தங்கள் தங்கள் மனதிலுள்ளவற்றை யெல்லாம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

வேதா தலை குனிந்த வண்ணமே கையைப் பிசைந்து கொண்டு நின்றாள். அவளிடம் அவர் என்னதான் பேச விரும்புகிறார்! அவளுக்கு இதெல்லாம் ஒருபுறம் வெட்கத்தையும் கூச்சத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தாலும் இன்னொரு புறம் எல்லையற்ற வியப்பை அளிக்கக் கூடியதாகவும் இருந்தது.

டாக்டர் கட்டிலை விட்டு எழுந்து அவளுக்குப் பக்கத்தில் வந்து நின்று, "எவ்வளவு நேரம் இப்படி நிற்பாய்! வா! அதோ, அந்த மரத்தடியில் போய் உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசுவோம்" என்று சொல்லி அவளுடைய கரத்தைப் பற்றிச் சமீபத்திலிருந்த மரத்தடிக்கு அழைத்துக் கொண்டு போய், தாமும் அமர்ந்து அவளையும் தம் பக்கத்தில் அமர்த்திக் கொண்டார்.

வேதா சித்திரப் பதுமைபோல் நடந்து சென்று அவருக்குப் பக்கத்தில் அமர்ந்தாள். அவரோடு அப்படி அங்கு அந்த வேளையில் தனிமையிலிருப்பது தகாது என்றுதான் அவள் மனதில் பட்டது. ஆனால் அவர் விருப்பத்திற்கு மாறாக மறுத்துக் கூறும் துணிவு அப்பொழுது அவளுக்கு இல்லையே! என்ன செய்வாள்! அவள் தலை நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தாள். அவளுடைய கண்களில் ஒரு ஆவலும் ஆர்வமும் இருந்தாலும் தடுமாற்றமும் பயமும் இருந்தன. இப்பொழுது அவள் எப்படி மீள முடியும்! அப்பொழுது அவளுக்கு ஏற்பட்டிருந்த உணர்ச்சிப் பெருக்கை எப்படிக் கட்டுப் படுத்த முடியும்!

சில நிமிட நேரம் அங்கு மௌனம் சூழ்ந்திருந்தது. மறுபடியும் டாக்டர் பேச ஆரம்பித்தார். "வேதா! நீ என்னைப் பார்க்கத்தானே இங்கே வந்தாய்!" என்று கேட்டார்.

வேதா புன்முறுவலுடன் 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள்.


"நான் உன்னோடு தாராளமாகப் பேசலாமல்லவா! அதில் தவறு ஒன்றும் இல்லையே!"

அவள் தன் அழகிய விழிகளை மலர விழித்து அவரைப் பார்த்துவிட்டு, "அதில் என்ன தவறு!" என்று அடக்கமாகச் சொல்லிவிட்டு விரலால் தரையைக் கீறலானாள்.

"வேதா! நான் உனக்கு எந்தவிதமான துன்பத்தையோ துயரத்தையோ கொடுக்கமாட்டேன். நான் உன்னை எதற்காகப் பார்க்க விரும்பினேனென்று உனக்குத் தெரியுமா!" என்று சொல்லி டாக்டர் அவள் முகத்தைப் பார்த்தார். அந்தக் கணத்தில் அவளும் அவர் முகத்தைப் பார்த்தாள். களங்கமின்றிப் பிரகாசித்த நிலவு அவர்கள் இருவர் முகத்தையும் ஒருவருக்கொருவர் தெளிவாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளச் செய்தது. அத்துடன் அவர்கள் உள்ளத்து உணர்ச்சிகளையும் முகத்தின் மூலமாகத் தெளிவாக அறிந்து கொள்ளும்படி செய்தது.

"நான் இப்பொழுது எதற்காக உன்னைப் பார்க்க விரும்பினேன், தெரியுமா! என்னால் உன்னை மறக்க முடியவில்லை. நீ என் மனத்தைக் கவர்ந்து விட்டாய். உன்மேல் எனக்கு அளவற்ற அன்பு உண்டாகிவிட்டது" என்று சொல்லி டாக்டர் அவள் கன்னத்தை இலேசாகத் தட்டினார்.

வேதா இதற்கு எவ்விதமான பதிலும் சொல்லவில்லை. ஆனால் அவள் தலையை ஆட்டினாள். அவளுடைய கருவிழிகளில் பயம்தான் நிரம்பி இருந்தது. அவள் உடல் நடுங்கியது.



அவளுடைய விழிக் குறியிலிருந்து அவள் உள்ளத்திலே எழுந்துள்ள பயத்தை உணர்ந்து கொண்ட டாக்டர், "உன்னைப் போன்ற பெண்ணிடம் இப்படிப் பேசுவது தவறாக இருக்கலாம். ஆனால் வேதா, உன்னிடம் நான் கொண்டிருக்கும் காதல் வார்த்தைகளால் விளங்காது. இதை நீ பூரணமாக நம்பு" என்றார்.

வேதா அப்பொழுதும் ஒரு குழப்பமான நிலையில் இருந்தாள். டாக்டர் பரசுராமன் அவளுக்குச் சமீபமாக நெருங்கி உட்கார்ந்து ஆர்வத்தோடு அவள் கரத்தை எடுத்துத் தன் கரத்தோடு பொருத்திக் கொண்டார்.

அவளும் அந்தச் சமயம் காதலுக்கு அடிமையானவள்தான். உணர்ச்சியோடும், வெட்கத்தோடும், தவிர்க்க முடியாத ஒரு வேதனையோடும் அவரைப் பார்த்தாள். அந்தச் சமயத்தில் அவர்கள் இருவருமே தங்கள் நிலைமையை மறக்கும் மீறிய உணர்ச்சிக்குள்ளாகியிருந்தனர். அவள் டாக்டரின் அணைப்பில் இருந்தாள். கட்டுக்கடங்காத காதல் உணர்ச்சியில் அவர்கள் தன் நிலை மறந்து வான வெளியில் மிதந்தனர்.

வெண்ணிலவின் இன்ப ஒளி. தெற்கிலிருந்து வரும் காற்று வேறு சிலுசிலுவென்று வீசிக்கொண்டிருந்தது. எங்கும் இரவின் அமைதி சூழ்ந்திருந்தது. சூழ்ந்திருந்த அமைதியைக் குலைக்காமலேயே இரண்டு உள்ளங்கள் ஒன்றோடொன்று ஒட்டிப் பேசாத பேச்சில் தங்கள் நினைவழிந்திருந்தன.

அப்பொழுது எங்கிருந்தோ வந்த ஒரு ஆந்தையின் சீரல் அவர்களுக்குச் சுய உணர்வை ஏற்படுத்தியது. வேதா சட்டென்று பரசுராமனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். அவள் கண்களில் மறுபடியும் ஒரு கலவரமும் பீதியும் சூழ்ந்தன. அவள் உடல் நடுங்கியது. நெற்றியில் முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

டாக்டர் பரசுராமன் அவள் முகத்தைப் பார்த்தார். ஆனந்தமாக மிதந்து கொண்டிருந்த ஓடம் ஒரு சுழலில் சிக்கிச் சுழன்றது போல இவ்வளவு நேரம் மெய்ம்மறந்த இன்ப நிலையில் இருந்த அவருடைய உள்ளம் இப்பொழுது சிறிது தடுமாற்றமடைந்தது. வேதாவின் முகத்தைப் பார்த்ததும் அவருக்குச் சிறிது ஏமாற்றமும் வியாகூலமும் ஏற்பட்டது. "வேதா! நீ ஏன் இப்படிப் பயப்படுகிறாய்! என் மீது உனக்கு அந்தரங்கமான அன்பு இல்லையா......!" என்று கேட்டார்.

வேதா ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே அவர் முகத்தைப் பார்த்தாள். அவள் கண்களில் தவிப்போடு கூடிய ஒரு பரிதாப உணர்ச்சி தாண்டவமாடியது. அவளுக்கு அவர்மீது எல்லையற்ற காதல் இருக்கிறது என்பதை அந்த நயன பாஷை உணர்த்தியது. பரசுராமன் மறுபடியும் அவளுடைய மெல்லிய கரத்தை எடுத்துத் தன் கரத்தோடு பொருத்திக் கொண்டு, "வேதா! இதை என்னால் நம்ப முடியவில்லை. எல்லாம் கனவு போலத்தான் இருக்கிறது. உன்னை நான் அன்று ராஜாளி மடத்தில் சந்தித்தது, இன்று இரவு நீ துணிகரமாகப் பொன்னியோடு என்னை சந்திக்க இங்கே வந்தது, எல்லாம் சொப்பனம் போலத்தா னிருக்கிறது. வேதா! நான் உன்னை நேசிக்கிறேன். இனிமேல் உன் வாழ்க்கையில் எவ்விதத் துக்கமும் துயரமும் இருக்கக்கூடாது என்பதுதான் என் விருப்பம்" என்றார்.

வேதா அவருக்கு எவ்விதமான பதிலும் சொல்லவில்லை. அப்பொழுது அவள் பேசக் கூடிய நிலையிலேயே இல்லை. அதுவரையில் நடந்த ஒவ்வொன்றையும் உணர்ந்து பார்க்கக் கூடிய நிலையிலேகூட அவள் இல்லை. அப்பொழுது அவள் மனத்தை ஆட்டிக் குலைத்தது அர்த்தமற்ற ஏதோ ஒரு பயமும் நடுக்கமும் தான். கருணை நிரம்பிய ஒரு மனிதன் கையில், அனாதையான வழி தெரியாமல் பயத்தால் தடுமாறிக் கொண்டிருக்கும் குழந்தை ஒன்று அகப்பட்டது போன்ற நிலையில் தான் அவள் இருந்தாள். அவள் மனக் கண்ணின் எதிரே பெரியம்மா மரகதத்தின் கண்டிப்பான முகமும் வேலைக்காரி செங்கம்மாவின் கோரமான முகமும் மாறிமாறித் தோன்றிக் கொண்டிருந்தன. அவர்கள் இருவரும் இன்று அவள் செய்த துணிகரமான காரியத்தை அறிந்தார்களேயானால்...!

"வேதா! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்! எதற்காக நீ பயப்பட வேண்டும்! வேதா! நீ எதற்கும் அஞ்சாதே! நான் இருக்கிறேன். நான் இருக்கும்போது உனக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது. இனி ஒரு கணம் கூட என்னை விட்டு நீ பிரிந்திருக்க வேண்டாம்" என்றார் டாக்டர் உணர்ச்சிப் பரவசத்தில்.

வேதா ஒரு பெருமூச்சுடன் நடுங்கும் குரலில் பேச ஆரம்பித்தாள். "இப்படியெல்லாம் நான் நடந்து கொண்டது பிசகல்லவா...! என்னுடைய நிலைமை என்ன! இதையெல்லாம் பெரியம்மா தெரிந்து கொண்டால்..."

டாக்டர் அலட்சியமாகச் சிரித்தார். "உன் பெரியம்மாவைப் பற்றி இனிமேல் நீ துளிக்கூடக் கவலைப்பட வேண்டாம். இனிமேல் அவள் அதிகாரமெல்லாம் செல்லாது. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ செய்ததில் எதுவும் தவறில்லை. வேதா, இவ்வளவு நாளும் அந்த இருண்ட கட்டிடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த உனக்கு இது மன நிம்மதியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தவில்லையா! என் வாழ்க்கையிலேயே இன்றுதான் எனக்கு ஆனந்தமான நாள், வேதா!" என்றார் சற்றுப் பதட்டமான குரலில்.

"ஆனால் இது பிசகான காரியமில்லையா! அவமானமான காரியமில்லையா!"

"அவமானமான காரியமா!" என்று கேட்ட அவர் மறுபடியும் ஏளனமாகச் சிரித்துவிட்டு, "இல்லை, வேதா! மறுபடியும் அந்த வார்த்தையைச் சொல்லாதே. நீ எத்தகைய அவமானமடையக் கூடிய காரியத்தையும் செய்யவில்லை. அந்தரங்கமான, அப்பழுக்கற்ற, உண்மையான காதல் கொண்ட இருவரின் சந்திப்பை அவமானமான செய்கை என்று சொல்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்தான் மனித இனத்திற்குக் கீழானவர்கள்" என்றார்.

வேதா மௌனமாக உட்கார்ந்திருந்தாள். பரசுராமன் குனிந்திருந்த அவளுடைய தலையை நிமிர்த்தி, "இதோ பார், வேதா! இனிமேல் நீ அந்தப் பேய் மடத்திற்குத் திரும்பிப் போக வேண்டாம். இந்த இரவு உன்னுடைய துக்ககரமான, வறண்டு போன வாழ்க்கைக்கு ஒரு முடிவு. இன்றோடு அந்தப் பயங்கரமான ராஜாளி மடத்தையும், அந்த இரண்டு ராட்சதப் பிறவிகளையும் அடியோடு மறந்து விடு. நாளைய தினமே நான் உன்னுடைய பெரியம்மாவிடம் சென்று..."

"வேண்டாம், வேண்டாம். தயது செய்து அப்படிச் செய்யாதீர்கள், பெரியம்மாவைப் பற்றி இன்னும் நீங்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவள் ரொம்பக் கண்டிப்பானவள், பொல்லாதவள். அவளுக்குக் கோபம் வந்தால்..." என்றாள் வேதா நடுங்கிக் கொண்டே.

"அப்படியா! அதையும்தான் பார்ப்போமே!" என்றார் டாக்டர் தீவிரமான குரலில். (தொடரும்)



"என்ன இது! காப்பியிலே ஒரு வண்டல் தங்கிக் கிடக்கிறது! ஓய், ஸர்வர்!"

"ஏன் ஐயா, ஸர்வரைக் கூப்பிடுகிறீர்?"

"அவர் காப்பி, ஒரு இரண்டுக்குமாகச் சேர்த்து 'பில்' போட்டுவிடப் போகிறாரே என்றுதான்!"


விசைச் சக்தியின் வேகம்
நீங்களும் பெறுக
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
சிரமமான வேலை நீங்கியதும், சளைக்காத உணர்ச்சியிருக்கும் போதுதான் நீங்கள் திடமான ஆரோக்கியம் உள்ளவரென்பதைக் குறிக்கும். சளைக்காத உணர்ச்சி பெறுவதற்கு, பிரதி தினமும் போஜனத்தின் அங்கமாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதைத்தவிர சிறந்த தோன்றுமில்லை. தேக வளனூட்டுவதற்கு அத்யாவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட், வேலை செய்வதற்கான திராணியை பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் இதர நிலைமைகளுக்கு இடங்கொடாதபடி தேகத்திற்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.
உங்கள் குடும்பம் முழுவதற்கும் இப்பொழுதே வாங்கி விடுங்கள்.
Waterbury's Compound
WATERBURY'S COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
உங்களைத் தென்புடன் வைத்திருக்கும்
NAS 738


இந்தியாவின் தலைசிறந்த
சைக்கிள் டயர்
சூப்பர்
இந்தியா
சிவப்பு வளையத்தைக் கவனித்து வாங்கவும்

விதியின் விளையாட்டு

நா. சுப்பிரமணியம்

சட்டப் பரீட்சையில் தேறியதும் உத்தியோக வேட்டையில் இறங்கினேன். தஞ்சை ஜில்லாவின் கோயில்களில் ஆலயக் கணக்குகளைத் தணிக்கை செய்யும் தேவஸ்தானம் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கிடைத்தது. மறுதினமே அந்த ஜில்லாவின் ஒரு கோயிலைப் பார்வையிடவும் கணக்குகளைத் தணிக்கை செய்யவும் எண்ணி, சம்பந்தப்பட்ட கோவிலதிகாரிகளுக்கு முன்கூட்டியே அறிவித்து விட்டுப் பிரயாணமானேன்.

புதிய உத்தியோகம். நல்ல சம்பளம். இத்துடன் என் சொந்த ஜில்லாவுக்கே நான் உத்தியோகம் பார்க்கப் போகிறேன். தஞ்சை ஜில்லாவின் வளம் பொருந்திய கிராமம் தான் என் பிறப்பிடம். பல்வேறு காரணங்களாலும், படிப்பை முன்னிட்டும் கிராமத்தை விட்டு வெளியேறிப் பல வருடங்களாகி விட்டன. பல வருடங்களுக்குப் பிறகு மறுபடி இன்றுதான் என் சொந்த ஜில்லாவிற்குப் பிரயாணமாகிறேன். ரயில் தஞ்சை ஜில்லாவின் எல்லையைத் தொடும்போதே என் உள்ளத்தில் ஆனந்தம் மிகுந்தது.


நான் போய்ச் சேர வேண்டிய ஊர் வந்து சேர்ந்தது. ஸ்டேஷனுக்குக் கோவில் அதிகாரிகள் வந்து வரவேற்று அழைத்துப் போனார்கள். ஒரு வார காலம் தணிக்கை செய்யப் போவதாக அறிவித்தேன். அன்று முழுவதும் ஓய்வு எடுத்துக் கொண்டு மறுதினம் தணிக்கை ஆரம்பித்தேன். தணிக்கையின் முதல் வேலையாகக் கோவிலுக்குச் சொந்தமான வாகனங்கள் எவ்வளவு, பழுது பார்க்கப் படவேண்டியவைகள் எவ்வளவு, புதிதாக வாங்கப்பட்டுக் கணக்கில் எழுதப் பட்டுள்ள வாகனங்கள் இருக்கின்றனவா என்று பார்க்க விரும்பினேன். கோவில் தர்மகர்த்தா கோவிலின் உள்ளே பிரகாரத்தில் பூட்டப்பட்டிருந்த ஒரு பெரிய அறையைத் திறக்கச் சொன்னார். கதவு திறக்கப்பட்டது. கணக்குகளை வைத்துக் கொண்டு பரிசிலனை செய்தேன். உள்ளேயிருந்து வெளவால் புழுக்கை நாற்றம் மூக்கைத் துளைத்தது. மூக்கைப் பிடித்துக் கொண்டே அறைக்குள் சென்று வாகனங்களைப் பார்வையிட்டேன். தணிக்கையெல்லாம் முடிந்து வெளியேறும் போது அறையின் மூலையில் இருந்த ஒரு பெரிய போட்டோ என் கண்ணில் பட்டது.

வெகு காலத்துக்கு முன் எடுக்கப்பட்ட பெரிய போட்டோ அது. கண்ணாடிகள் எல்லாம் நொறுங்கி, கேட்பாரற்று ஒரு மூலையில் கிடந்தது.

"இது யார் போட்டோ? ஏன் இது இங்கே மூலையில் கிடக்கிறது?" என்று கோவில் தர்மகர்த்தாவைக் கேட்டவாறே அந்தப் போட்டோவை ஊன்றிக் கவனித்தேன்.

"இவன் தான் இந்தக் கோவிலை எனக்கு முன் பரிபாலித்து வந்த மகா பாவி. கோயில் சொத்தைக் கொள்ளையடித்து, மனம் போன போக்கில் தாறுமாறாகச் செலவழித்துக் கோயில் கணக்குகளில் மோசடி செய்து கடைசியாக எல்லாம் வெளியாகும் தறுவாயில் தற்கொலை செய்து கொண்டு விட்டான். இவன் நாளில் உண்டான ஊழலைக் கடந்த இருபது வருடங்களாக நிவர்த்திசெய்யப் பாடுபடுகிறேன். ஆனால் நிவர்த்தி செய்ய முடியவில்லை. 'சிவ சொத்துக் குலநாசம்' என்று தெரிந்து கொள்ளாமல் கோயில் சொத்தைச் சொந்தத்துக்கு உபயோகப் படுத்திக் கடவுளின் கோபத்துக்கு ஆளானான். கடவுளும் சரியாகத் தண்டனை கொடுத்தார். இந்தத் தேவஸ்தானத்தில் உள்ளவர்களுக்கு இந்த மோசடிகளின் சுயசரிதம் நன்றாய்த் தெரியும். அதனால் தான் இவன் போட்டோவை ஒருவர் கண்ணிலும் படாமல் இங்கே போட்டு வைத்திருக்கிறேன்!" என்றார். இவைகளைச் சொல்லும்போது அவர் மனம் படபடத்தது. அறையைப் பூட்டிவிட்டு வெளியேறினோம்.

சோலைகள் நிறைந்திருந்த அந்தக் கிராமம் கூடக் கடுங்கோடையின் வெப்பத்துக்கு ஈடுதர இயலாமல் ஒரே புழுக்கமாயிருந்தது.



"பஸ்ஸுக்குத் தானே நிற்கிறீர்கள்"

"ஆமாம்."

"பஸ் ஸ்டாண்டு அங்கே தூரத்திலே இருக்கிறது. நீங்கள் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்களே?"

"பஸ் அகப்படாமல் இருக்கிறதற்கு எங்கே நின்றால் என்ன?"

கோவில் தர்மகர்த்தாவிடம் புழுக்கமாயிருப்பதைச் சொன்னேன். அவர், "தெற்குக் கோபுர வாயிலில் படுத்தால் நல்ல காற்று வரும். இப்போதே ஏற்பாடு செய்கிறேன்!" என்று சொல்லிப் போனார்.

தெற்குக் கோபுர வாயிலில் படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்தேன். துணைக்கு ஒரு வயது சென்ற காவல்காரனைக் கோயிலதிகாரி ஏற்பாடு செய்திருந்தார். பூரண நிலவு காய்ந்து கொண்டிருந்தது. தெற்கு வாயிலானதால் ஜிலு ஜிலு என்று காற்று வந்து கொண்டிருந்தது. நிலவும் தென்றலும் மனத்துக்கு நிம்மதியைக் கொடுக்கக் கூடியவைதான். ஆனால் காலையில் நான் பார்த்த போட்டோ என் மனக்கண் முன் அடிக்கடி தோன்றி நிம்மதி ஏற்படாமல் அடித்துக் கொண்டிருந்தது. கோயிலதிகாரி சொன்ன வார்த்தைகள் என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. போட்டோவைப் பற்றி இன்னும் யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம் துடித்தது. கட்டிலில் எழுந்து உட்கார்ந்து காவல்காரனை அருகில் அழைத்தேன்.

"காலையில் வாகனங்கள் வைக்கும் அறையில் ஒரு போட்டோவைப் பார்த்தேன். அதில் இருப்பவர் யார்? அவரைப்பற்றிய முழு விவரமும் உனக்குத் தெரியுமா? அந்தப் போட்டோவை ஏன் வெளியில் மாட்டாமல் அந்த அறையின் ஒரு மூலையில் போட்டிருக்கிறார்கள்? இந்த விவரங்களை அறிய மிகவும் ஆவலாயிருக்கிறது. உண்மையை ஒளிக்காமல் சொல். உனக்கு வேண்டிய சன்மானம் தருகிறேன்!" என்றேன்.

அந்த வேலையாள், "இவ்வளவு நாட்களாக யாரிடத்திலும் சொல்லாத சமாசாரத்தை இன்றைக்கு உங்களிடம் சொல்லப் போகிறேன். அந்தச் சமாசாரத்தைச் சாவதற்கு முன்னால் யாரிடத்திலாவது சொல்லி விட்டுப் போனால்தான் என் நெஞ்சு வேகும்போலிருக்கிறது. ஆகவேதான் உங்களிடம் சொல்லுகிறேன்!" என்று சொல்லிவிட்டு அந்தக் கதையை ஆரம்பித்தான்.

"ஏழு வயதுப் பையனாயிருக்கையிலே நான் இந்தக் கோவிலில் தீவட்டி பிடிக்க ஆரம்பித்தேன். இப்பொழுது வயசு எழுபது ஆகிறது. இந்தக் கோவிலுக்குத் தர்மகர்த்தாவாக இருபது வயது இளைஞர் ஒருவர் வந்தார். அவருடைய போட்டோவைத்தான் நீங்கள் இன்று காலையிலே பார்த்திருக்கிறீர்கள். அவர் தர்மகர்த்தாவாக வந்தபோது இந்தக் கோயில் இருந்த சீர்கேட்டைச் சொல்லி முடியாது. கோவிலுக்கு எவ்வளவு நிலம், அது யார் யாரிடம் இருக்கிறது என்று கூடத் தெரியாது. சாமிக்குக் காலா காலத்திலே பூஜைகூடக் கிடையாது. பத்து வருஷ காலம் உழைப்பாய் உழைத்துக் கோயிலையும் சீர் பண்ணிக் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டு பிடித்து அவைகளைக் கோயிலுக்குச் சேர்த்து வைத்துக் கோவிலை ஒரு நல்ல நிலைமையில் கொண்டு வந்து வைத்தார் அந்தத் தர்மகர்த்தா. இதனால் சிலர் அவருக்கு விரோதமாகக் கிளம்பி விட்டார்கள். மனிதர் ரொம்ப சாது; உத்தமர். வம்பு தும்புக்குப் போகாமல் பிறருடைய மனம் நோகாமல் நடந்து கொண்டு வந்தார்.

"அந்த வேளையிலேதான் கோவில் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்ள ஒரு ஏழையைக் காரியஸ்தராக நியமித்து அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார் அவர். இரண்டொரு வருஷங்களில் அந்தக் காரியஸ்தர் தன்னுடைய சாமர்த்தியத்தால் தர்மகர்த்தாவின் நல்ல மதிப்பை அடைந்தார். தர்மகர்த்தாவுக்கு அவரிடம் நல்ல மதிப்பும் நம்பிக்கையும் உண்டாகிச் சகல பொறுப்பையும் அவரிடமே ஒப்படைத்து விட்டார். இந்த நிலையிலே கோவிலுக்கு விரோதமாகச் சிலர் நடக்க ஆரம்பித்தார்கள். அநாவசியமான வம்புச் சண்டைகள் ஏற்பட்டன. இவைகளையெல்லாம் அடக்கத் தர்மகர்த்தா படாத பாடு பட்டார். இருந்தும் அவரை எதிர்த்தவர்கள் கொஞ்சம் கடுமையாக எதிர்த்ததால் அவரும் கடுமையாக நடக்கும்படி நேரிட்டது. கோவில் நிர்வாகம் தடைபட்டு ஸிவில் வழக்குகள், அடிதடி, கிரிமினல் வழக்குகள் அதிகரித்தன. எங்கும் கோவிலுக்கு விரோதமாகக் கட்சிகள் சதிகள் தோன்றின. தேவஸ்தான ஊழல் சம்பந்தமாகப் புகார்கள் உண்டாகி மேலதிகாரிகளின் காதில் விழுந்தன. அநாமதேயக் கடிதங்கள் தினமும் எழுதப் பட்டன. தர்மகர்த்தா இதையெல்லாம் சமாளிக்க முடியாமல் திண்டாடினார். காரியஸ்தரை நம்பி எல்லாவற்றையும் ஒப்படைத்தார். ஆனால் காரியஸ்தரோ விரோதக்காரர்களுடன் இரகசியமாகத் தொடர்பு வைத்துக் கொண்டு இந்தத் தர்மகர்த்தாவை ஆபத்தில் சிக்க வைத்து அவரை வேலையை விட்டு நீக்கி விடவும், தாம் தர்மகர்த்தாவாக ஆகிவிடவும் திட்டம் போட்டார்.

"அதன் பலனாகக் கோவிலின் ஊழலை விசாரிக்கப் பட்டணத்திலிருந்து அதிகாரிகள் வந்தார்கள். அன்றைக்கு மறு நாள் திருவாதிரை. கோவிலில் விடியற் காலை நாலு மணிக்கே பூஜை ஆரம்பமாகி விடும். திருவாதிரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, தர்மகர்த்தா கோவில் பிராகாரத்திலேயே படுத்திருந்தார். பட்டணத்திலிருந்து வந்தவர்கள் தேவஸ்தானம் ஆபீஸில் தங்கியிருந்தார்கள். கோவில் பூஜை ஆரம்பித்தது. நடராஜாவுக்குத் திருவாபரணம் சாத்தும் சந்தர்ப்பம் வந்தது. தர்மகர்த்தாவை எழுப்பப் பிராகாரத்துக்குப் போனார்கள். பிராகாரத்தில் தர்மகர்த்தாவைக் காணவில்லை. இதற்குள் பட்டணத்திலிருந்து வந்த அதிகாரிகள் கோவிலுக்கே வந்து விட்டார்கள். அப்போது அம்மனுக்குச் சாத்தியிருந்த காசு மாலையைக் காணோம் என்று குருக்கள் வந்து முறையிட்டார்.

எல்லோரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனார்கள். உடனே தர்மகர்த்தாவின் வீட்டுக்கே எல்லோரும் புறப்பட்டார்கள்.

"தர்மகர்த்தாவின் வீட்டில் நுழைந்ததும் அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திகைக்க வைத்தது. தர்மகர்த்தா வீட்டுக் கூடத்தில் படுத்துக் கொண்டு ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். அவர் பக்கத்தில் ஒரு துணியில் முடிந்தவண்ணம் சிவகாம சுந்தரியின் திருவாபரணமாகிய காசு மாலை கிடந்தது. காரியஸ்தர் அதை எடுத்துப் பட்டணத்து அதிகாரியிடம் கொடுத்தார். பிறகு தர்மகர்த்தாவை எழுப்பினார். ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை. முகத்தில் தண்ணீரைத் தெளித்ததும் அவர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். சுற்றுமுற்றும் பார்த்து, "நான் எங்கே யிருக்கிறேன்?" என்று குழப்பத்துடன் கேட்டார்.

"நீர் உம்முடைய வீட்டில்தான் இருக்கிறீர். இன்னும் சிறைச்சாலைக்குப் போகவில்லை. அதிர்ஷ்டவசமாக நாங்கள் உம்மைக் கையும் களவுமாகக் கண்டு பிடித்துவிட்டோம். உத்தமரைப் போலவும் பரம பக்த சிரோமணியைப் போலவும் பிரமாதமாக வேஷம் போட்டீரையா?" என்று பட்டணத்திலிருந்து வந்த அதிகாரி ஒருவர் கேலியாகச் சொல்லிச் சிரித்தார்.

"என்ன இது அபாண்டப் பழி! நானா கோவில் சொத்தைக் கொள்ளை அடித்தேன்? என்ன அநியாயம் இது?" என்று கண்களில் நீர் பெருகக் கேட்டார் தர்மகர்த்தா.

"உம்முடைய யோக்கியதை முழுவதும் வெளியாகிவிட்டது. பல நாள் திருடனாயிருந்த நீர் இன்றைக்கு அகப்பட்டுக் கொண்டீர். நீர் திருடன்தான் என்பதை ருசுப்படுத்த இதோ தேவியின் திருவாபரணம் இருக்கிறது! இன்னுமா மறைக்கப் பார்க்கிறீர்?" என்று அதிகாரிகளில் ஒருவர் இரைந்தார்.

"உடனே காரியஸ்தர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடித் தகவலை அறிவித்து இரண்டு கான்ஸ்டபிள்களுடன் வந்து சேர்ந்தார். தர்மகர்த்தாவின் முகம் வாடிவிட்டது. அவருக்கு உலகமே இருண்டுவிட்டதுபோல் இருந்தது. வாய் திறவாமல் எழுந்து அவர்களைத் தொடர்ந்து வெளியே வந்தார். கான்ஸ்டபிள்கள் அவரைத் தேவஸ்தானம் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர். அதிகாரிகளும் காரியஸ்தரும் மற்றுமுள்ளவர்களும் பின்னால் சென்றனர்.

"என் இஷ்ட தெய்வத்தைக் கும்பிட்டு விட்டு வருகிறேன்" என்று தேவஸ்தானம் ஆபீசுக்குள் தர்மகர்த்தா போனார். ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம், அரை மணிக்கு மேலாகியும் அவர் திரும்பி வரவில்லை. கொல்லைப் பக்கம் போய்ப் பார்த்தால் கிணற்றில் அவரது உயிரற்ற உடல் மிதந்து கொண்டிருந்தது. அவர் பெரிய மானி; பழி பாவத்துக்குப் பயப்படுபவர். அபாண்டமான பழி அவர்மீது சுமத்தப்பட்டது. அதை அவரால் தாங்க முடியவில்லை. அவருக்கு மனைவி இறந்து விட்டதால் தன்னுடைய ஏழு வயதுப் பையனை தன் தங்கை வீட்டில் விட்டிருந்தார். பையனைக் கூட பார்க்காமல், உறவினர்கள் முகத்தில் இந்த அபாண்டமான பழியுடன் விழிக்கப் பயப்பட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டு விட்டார். அவரல்லவோ மானமுள்ளவர்!

"அவர் இறந்தது முதல் காரியஸ்தர் தர்மகர்த்தாவாக வந்து விட்டார். அவர்தான் இப்போது இருப்பவர். அவர் செய்த சதிக்கு அந்த உத்தமர் பலியானார். அந்தச் சதியில் இன்னும் இரண்டு பேர் சம்பந்தப்பட்டவர்கள் உண்டு. அவர்களில் ஒருவன் இறந்து விட்டான். இன்னொருவன் இன்னும் உயிருடன் இருக்கிறான். அந்த மகாப் பாவி யார் தெரியுமா? நான்தான்!" என்று சொன்ன அந்தக் காவல்காரன் மேலும் தொடர்ந்தான்.

"திருவாதிரை பஜனைதினம் தர்மகர்த்தா பிரகாரத்தில் படுத்திருப்பதாகச் சொன்னேன் அல்லவா? அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு அவர் நன்றாகத் தூங்கும்போது அவருக்கு மயக்க மருந்தைக் காட்டி மூர்ச்சையாக்கி ஒருவருக்கும் தெரியாமல் அவர் வீட்டில் அவரைக் கொண்டுபோய்ப் போட்டோம். காரியஸ்தர் அம்மனின் காசு மாலையை மயக்கமாய்க் கிடந்த தர்மகர்த்தாவின் அருகில் போட்டார். நாடகம் திறமையாக நடிக்கப்பட்டது. அதில் அந்தத் தர்மகர்த்தா பலியானார். இது நடந்து இருபது வருடங்களாகி விட்டன. இதுவரை நான் ஒருவரிடமும் சொல்லவில்லை. இன்னும் சில நாட்களில் இந்த உயிர் போகப் போகிறது. யாரிடமாவது சொல்லா விட்டால் என் மனம் வெடித்து விடும்போல் இருந்தது. நீங்கள் யாரோ, எனக்குத் தெரியாது. இருந்தாலும் சொல்லி விட்டேன்!" என்று முடித்தான்.

"பயப்படாதே, கிழவா! நான் யார் தெரியுமா? நீ இது வரை சொல்லி வந்தாயே, அதே தர்மகர்த்தாவின் மகன்தான். இன்று காலை படத்தைப் பார்த்த போது என் தகப்



பனார் ஜாடை தெரிந்தது. அதனால்தான் விவரம் விசாரித்தேன். நான் சிறு வயதிலேயே என் அத்தை வீடு போய் விட்டேன். என் தாயார் என்னை அறையிலேயே விட்டு விட்டு இறந்தாளாம். எனக்கு ஏழு வயதாயிருந்த போது என் தகப்பனார் திடீரென்று மாரடைப்பால் இறந்ததாக என் அத்தை சொன்னாள். என் தகப்பனாரை இது வரை நான் சரியாகப் பார்த்ததேயில்லை. இதே மாதிரி சிறிய அளவில் என் அத்தை வீட்டின் கூடத்தில் ஒரு போட்டோ மாட்டியிருக்கிறது. அதைக் கொண்டுதான் நான் இந்தப் போட்டோவை அடையாளம் தெரிந்து கொண்டேன். இன்று காலை இப்போதுள்ள தர்மகர்த்தா என் தந்தையைப் பற்றிச் சொன்னபோது 'இப்படிப்பட்ட பாவியா என் தகப்பனார்?' என்று வருத்தப் பட்டேன். ஆனால் இப்போது நீ சொன்ன பிறகு, என் தகப்பனார் மானி, வீரபாரதி என்று அறிகிறேன். என் தகப்பனாரைப் பற்றிய உண்மை விவரங்களைச் சொன்ன உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?" என்றேன்.

"இந்தத் தர்மகர்த்தாவை நீங்கள் சும்மா விடக்கூடாது" என்றான் அவன்.

"நீ கவலைப்படாதே! பொழுது விடிந்தும் என்ன ஆகிறது, பார்!" என்று அவனிடம் சொன்னேன். பேச்சுக்காகத்தான் அவனிடம் அப்படிச் சொன்னேனே ஒழியப் பழி வாங்கும் உணர்ச்சி எனக்கு இல்லை.

பொழுது விடிந்ததும் அந்தத் தர்மகர்த்தாவைக் கண்டு பேசி அவரைச் சீர்திருத்தி விட வேண்டுமே ஒழிய அவர்பேரில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாதென்று தீர்மானித்தேன். இரவு முழுவதும் தகப்பனாரின் நினைவில் ஆழ்ந்திருந்த நான் விடியற்காலம்தான் சிறிது கண்ணயர்ந்தேன்.

"எஜமான்! தர்மகர்த்தா அவருடைய அறையில் விஷமுண்டு பிணமாய்க் கிடக்கிறார்" என்று கூறி ஒரு ஆள் வந்து என்னை எழுப்பினான். போய்ப் பார்த்தேன். அந்தத் தர்மகர்த்தா கீழே படுத்துக் கிடந்தார். அவர் மேஜை மீது ஒரு கடிதம் கிடந்தது. பிரித்துப் படித்துப் பார்த்தேன்.

"இரவு பட்டணத்து அதிகாரியைத் தெற்குக் கோபுர வாசலில் படுக்க வைத்துவிட்டு வந்த நான் தூக்கம் பிடிக்காததால் அவருடன் அங்கேயே படுக்க எண்ணிப் படுக்கையுடன் போனேன். நான் போனபோது காவல்காரக் கிழவன் அவரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். ஒற்றுக் கேட்டேன். நான் செய்த சதியையும் என்னுடைய நயவஞ்சகத் தன்மைக்குத் தர்மகர்த்தா பலியானதையும் விளக்கிக் கொண்டிருந்தான். முழுக் கதையையும் கிழவன் அவரிடம் சொல்லக் கேட்டேன். இப்பொழுது வந்துள்ள அதிகாரி பழைய தர்மகர்த்தாவின் மகன் என்பதையும் அவர்கள் பேச்சிலிருந்து அறிந்தேன். 'பொழுது விடிந்தால் என்ன ஆகிறது, பார்' என்று அவர் சொன்னார். எனக்கு முன்பு இருந்தவர் உத்தமர். அவரை அநியாயமாய்க் கெடுத்த எனக்கு உரிய தண்டனை மரண தண்டனையே. ஆதலால் நான் விஷம் உண்டு உயிரை விட்டு விடுகிறேன். மன்னிக்கவும்." என்று எழுதியிருந்தது.

"விதியை வெல்ல யாரால் முடியுங்க?" என்று கேட்டான் கிழவன்.

"யாராலும் முடியாது!" என்றேன் நான்.

பிறந்த நாள் பரிசு!

தாத்தாவின் பக்கத்தில் மிகுந்த வினயத்தோடு வந்து உட்கார்ந்தான் ராமு. தன் பேரப்பிள்ளையைக் கண்டதும் தாத்தா, "ஏண்டா, ராமு! இன்றைக்கு முழுதும் வீட்டிலேயே உட்கார்ந்திருக்கிறாயே, விளையாடப் போகவில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அவன் அபூர்வமாக அன்று வீட்டிலிருந்தது அவருக்கு மிகுந்த திகைப்பை யளித்தது.

"தாத்தா! எனக்கு விளையாடப் பிடிக்கவில்லை. அது சரி, தாத்தா! உங்களுக்குப் பிறந்த நாள் சமீபத்தில் வருகிறது என்றீர்களே! அது எப்பொழுது வருகிறது?" என்று ஆவலுடன் கேட்டான் ராமு.

"ஏண்டா, கண்ணே! என் பிறந்த நாளைப் பற்றி எதற்காக இவ்வளவு அக்கறையுடன் கேட்கிறாய்?" என்று வினவினார் தாத்தா.

"இல்லை, தாத்தா! உங்களுக்குப் பிறந்த நாள் பரிசு ஒன்று வாங்கிக் கொடுக்க உத்தேசித்திருக்கிறேன்...."


"அப்படியா? என் பிறந்த நாள் இன்னும் மூன்று மாதங் கழித்துத் தான் வருகிறது" என்றார் தாத்தா.

"மூன்று மாதங் கழித்துத் தானே தாத்தா உங்கள் பிறந்த நாள் வருகிறது? நல்லதாகப் போயிற்று. அதற்குள் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து உங்களுக்குப் பிறந்த நாள் பரிசாக புதிய பொடி டப்பி ஒன்று வாங்கித் தந்து விடுவேன்" என்று கூறினான் ராமு மிகுந்த மகிழ்ச்சியுடன்.

"ஏண்டா, பொடி டப்பியா வாங்கப் போகிறாய்? என்னிடந்தான் ஒரு பொடி டப்பி இருக்கிறதே? வேறு நல்லதாக ஏதாவது வாங்கிக் கொடுடா" என்றார் தாத்தா தன் பேரப் பிள்ளையைப் பார்த்து.

"தாத்தா! இன்று காலையில் உங்களிடமுள்ள பொடி டப்பி என் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்து சுக்கு நூறாக உடைந்து விட்டது. அதனால்தான்..." என்று தயங்கிக் கொண்டே கூறினான் ராமு. இவ்வளவு நேரமும் பேரப்பிள்ளையின் பேச்சில் மகிழ்ந்திருந்த அவருக்குக் கோபம் பொங்கி யெழுந்தது. அவனை அடிப்பதற்காக எழுந்திருந்தார் அவர். அதுவரை அங்கே நிற்க ராமுவுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? — பி. என். மணி.

கூர்மையானது!



மலிவானது!

ஸெவன் ஓ' க்ளாக் ப்ளேடுகள் உயர் தர எஃகினால் செய்யப்பட்டவை. மிகக்கூர்மையாக இருக்க அவற்றின் முனைகள் மூன்று தடவைகள் தீட்டப்படுகின்றன. அவை மிகக்கூர்மையாக இருப்பதால் ஒவ்வொரு ப்ளேடைக் கொண்டு சுத்தமாக பலதடவைகள் க்ஷவரம் செய்து கொள்ள முடிகிறது. அவற்றை அதிக காலம் உபயோகிக்க முடிவதால் அவை சிக்கனமானவை.

7 o'clock

ஸெவன் ஓ'கிளாக் ஸ்லாட்டட் பிளேடுகள்



10 ப்ளேடுகள் கொண்ட
பாக்கெட் ரூ. 1

TAM.



புஷ்பாவின் காதலன்

எஸ். வைத்தியநாதன்

புஷ்பா எங்கோ சிநேகிதியின் வீட்டிற்குப் போயிருந்தாள். கஸ்தூரி மட்டுந்தான் வீட்டிலிருந்தான். தெருவில் சாத்துக்குடிக்காரன் குரல் கேட்டது. கஸ்தூரி அவனைக் கூப்பிட்டு ஒரு டஜன் பழம் வாங்கி விட்டுப் பணம் எடுப்பதற்காக உள்ளே போய் மனைவியின் கைப் பெட்டியைத் திறந்தான். அவன் வீட்டுப் பொக்கிஷ அதிகாரி புஷ்பாதான். காலணா வேண்டுமென்றாலும் அவளைக் கேட்டுத்தான் வாங்கிக் கொள்ள வேண்டும்.

பெட்டியைத் திறந்த கஸ்தூரி ஒரு ஓரத்தில் கவர் ஒன்று இருப்பதைக் கண்டு வியப்புடன் எடுத்துப் பார்த்தான். அது புஷ்பாவின் பெயருக்கு வந்திருந்தது. தபால் முத்திரையிலிருந்து அன்றுதான் அக்கடிதம் வந்திருக்கிறது என்பதும் தெரிந்தது. 'புஷ்பா இதைப் பற்றி நம்மிடம் எதுவும் கூற வில்லையே! யார் எழுதி யிருப்பார்கள்? கையெழுத்துப் பழக்க மில்லாததாக அல்லவா இருக்கிறது?' என்று தனக்குள் எண்ணிய கஸ்தூரி உறையிலிருந்து கடிதத்தை எடுக்கப் போனான்.

"சாமி! என்னை அனுப்புங்க: பொழுது போவுது, பாருங்க" என்று வாசலிலிருந்த சாத்துக்குடிக்காரன் அவசரப் படுத்தவே, முதலில் பணத்தைக் கொடுத்து அவனை அனுப்புவதற்காகக் கஸ்தூரி வாசலுக்குப் போனான். திரும்பி உள்ளே வரும்பொழுது கஸ்தூரி கையிலிருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்துக்கொண்டே வந்தான்.

சென்னை
9—1—1949

அருமை புஷ்பா,

புஷ்பா! எத்தனை பொருத்தமான பெயர்! உனக்குப் பெயர் சூட்டிய உன் பெற்றோரின் புத்தி சாலித்தனத்தை எவ்வளவு வியந்து பாராட்டினாலும் தகும். கமலம், குமுதம் இம்மாதிரி ஒரு குறிப்பிட்ட மலரின் பெயரை வைக்காமல் புஷ்பம் என்ற பொதுவான பெயரை வைத்தார்களே, அது எவ்வளவு மேதாவித்தனமான காரியம், தெரியுமா? ஏனென்றால் எல்லாப் புஷ்பங்களும் உன்னைச் சரண் புகுந்திருக்கின்றன! உன்னுடைய முகம் தாமரை, கண்கள் நீலோத்பலம், கன்னங்கள் ரோஜா, நாசி எள்ளுப் புஷ்பம், பற்கள் முல்லை ஆகிய புஷ்பங்களைப் பழிக்கின்றன. இவ்வளவு மென் மலர்களும் குடிகொண்டிருக்கும் உன்னைப் புஷ்பா என்று பொதுவாக அழைப்பது எவ்வளவு பொருத்தமானது? இத்தகைய எழில் வாய்ந்த உன்னை மறப்பது என்றால் அது இலேசான காரியமா? அதுவும் என்னுடையவள் என்று இதுவரை நம்பிக்கொண்டிருந்த நீ திடீரென்று வேறொருவனுக்குச் சொந்தம் ஆகிவிட்டால் அது எனக்கு எத்தகைய பேரடியாக இருக்கும்?

உண்மையைச் சொல்லுகிறேன், புஷ்பா! உன்னை என்னால் மறக்க முடியவில்லை. உன் மோகன உருவம் சதா சர்வ காலமும் என்னெதிரில் களிநடம் புரிந்த வண்ணம் இருக்கிறது. உன்னைப் பிரிந்து உயிர் வாழ்வது இயலாத காரியம் என்ற உறுதி என் மனத்தில் வேரூன்றி விட்டது.

புஷ்பா! என்னை உயிர்ப்பிப்பதும், சாகடிப்பதும் உன் கையிலிருக்கிறது. உன்னைக் காண ஓடிவந்துவிட வேண்டும் என்று என் மனம் துடியாய்த் துடிக்கிறது. ஆனால் உன் உத்தரவின்றி அங்கே வருவதற்கும் தயக்கமாயிருக்

றது. உன் நினைவினாலேயே பைத்தியமாக மாறிக் கொண்டிருக்கும் என்னை உய்விக்கக் கூடிய சாதகமான பதில்—அதாவது நான் அங்கே வந்து உன்னைச் சந்திக்கும் பாக்கியத்தை அளிப்பாயா? ஒவ்வொரு கணமும் உன்னுடைய மென் கரத்தினால் எழுதப்படும் பதிலுக்காக—எனக்கு உற்சாகமளித்து, உயிரும் உணர்வும் ஊட்டக் கூடிய கடிதத்துக்காக—ஏக்கமுடன் காத்திருக்கிறேன். உன்னை மறக்காத,

சேஷாத்ரி

பின் குறிப்பு :— இக்கடிதத்தைத் துணிச்சலுடன் உன் கணவன் விட்டிற்கே நான் எழுதிவிட்டது குறித்து உனக்கு வியப்பும், வேதனையும் கோபமும் ஏற்படலாம். ஆனால் நான் அவசரப்பட்டு இதைச் செய்யத் துணிந்து விடவில்லை. ஆழ்ந்து யோசனை செய்த பிறகே எழுதினேன். மிகப் படித்தவராகிய உன் கணவர் உயர்தரப் படிப்புள்ள மனைவியாகிய உனக்கு வரும் கடிதங்களைப் படிக்கவோ, யார் எழுதி யிருக்கிறார்கள் என்று உன்னைக் கேட்கவோ மாட்டார் என்ற நம்பிக்கைதான் என்னுடைய இந்தக் கடிதம் தைரியமாக உன்னை நாடி உன்னுடைய வீட்டுக்கே வருவதற்குக் காரணம்.

கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தபோது சிறிது சிறிதாகச் சூடேறிக் கொண்டிருந்த கஸ்தூரியின் ரத்தம் கடிதத்தை முடிக்கும் போது ஓரே அனல் பிழம்பாய்க் கொதித்தது; கோபத்தால் உடல் நடுங்கியது. பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டான். அவனுடைய மூச்சுக் காற்றுக்கூட ஓரே உஷ்ணமாகத்தான் வெளிவந்தது. 'தொப்'பென்று சாய்வு நாற்காலியில் போய் விழுந்தான். 'ஹா ஹா ஹா' வென்று பைத்தியம் பிடித்தவன்போல் சிரித்தான். இன்னும் என்ன வெல்லாமோ காரியங்களைப் பண்ணினான்!

இவளுக்கு ஒரு திருட்டுக் காதலன்! யார் இந்தச் சேஷாத்ரி என்கிற அயோக்கியன்? பெரிய காளிதாஸனைப் போல் கவிதை பாஷையில் அல்லவா வர்ணிக்க ஆரம்பித்து விட்டான்? என் வீட்டுக்கே கடிதம்—அதுவும் காதல் கடிதம்—எழுதத் துணிந்துவிட்டான் என்றால் அவன் எவ்வளவு திமிர் பிடித்தவனாக இருக்கவேண்டும்? இவள் இடங் கொடுக்காமலா அவனுக்கு அத்தகைய துணிவு ஏற்பட்டிருக்கும்? எத்தனை நாளாக இவர்களுடைய காதல் நாடகம் நடந்து வருகிறதோ? கடிதத்திலிருந்து கல்யாணத்துக்கு முந்தியே அவனுக்கும் இவளுக்கும் தொடர்பு இருக்கும் போலல்லவா தோன்றுகிறது? அப்படி யிருக்கும்பொழுது இவள் எதற்காக என்னை மணந்துகொண்டு இப்படி உடல் ஓரிடமும், உள்ளம் ஓரிடமுமாக இரட்டை வாழ்வு நடத்த வேண்டும்?

வஞ்சகி! துரோகி! இவளை முழுதும் புரிந்து கொள்ளாத முட்டாளாக அல்லவா நான் இருந்து விட்டேன், இந்த ஒன்றரை வருஷமாக! இவளுடைய தளுக்கும், குலுக்கும், புன்சிரிப்பும் என்னை மயக்கி மூளையையே மழுங்க அடித்து விட்டனவே! இவளுடைய செய்கை ஒவ்வொன்றும் வெறும் நடிப்பு, வெளிவேஷம் என்பதைத் தெரிந்துகொள்ளச் சக்தி யற்றவனாகப் போய் விட்டேனே!

இவள் எப்படி யெல்லாம் திறமையாக நடித்தாள், என்னிடம் உயிரையே வைத்திருப்பவள்போல்! எனக்கு ஒரு சிறு தலைவலி வந்தாலும் தனக்கு ஏதோ பெரிய ஆபத்து வந்தாற்போல் அல்லவா காட்டிக்கொண்டு பெரிதும் கிலேச மடைந்தாள்!

அப்போதெல்லாம் இவள் இருதயக் கோயிலில் இவள் அருமைச் சேஷாத்ரியின் உருவம் தானே தாண்டவமாடிக் கொண்டிருந்திருக்க வேண்டும்? இவையொன்றையும் அறியாமல் மௌடீகனாகிய நான் இவளிடம் எல்லையற்ற பிரேமை கொண்டு என்னையே அல்லவா இவளுக்கு அர்ப்பணித்து விட்டேன்! இவளுக்குச் சகலவிதமான சுதந்திரங்களும் அளித்து இவளை என்னுடைய எஜமானியாக ஆக்கிக் கொண்டேனே! இப்போதல்லவா தெரிகிறது, இவளுடைய சுயரூபம்? இவள் அழகின் போதையில் மயங்கி உணர் விழந்திருந்த எனக்கு இக் கடிதம் சவுக்கடி கொடுத்து இப்போதுதான் சுயப் பிரக்ஞையை உண்டாக்கி யிருக்கிறது. பெண்களை நம்பக் கூடாது என்றும் பெண்களின் மனம் ஆழங்காண முடியாத சமுத்திரம் என்றும் தெரியாமலா பெரியோர்கள் சொன்னார்கள்? புஷ்பா என்னும் இந்தப் பெண் உருவம் பயங்கரமான நஞ்சை மறைத்து வைத்திருக்கும் கொடிய சர்ப்பம் என்று இப்போது தான் புலப்படுகிறது! இவள் என்னை எவ்வளவு முட்டாளாகக் கருதி, அலட்சியமாகத் தன் கள்ளக் காதலனின் கடிதத்தைப் பெட்டியில் வைத்திருக்கிறாள்! இதற்குக் காரணம் இவள் பெட்டியை நான் எங்கே திறக்கப் போகிறேன் என்ற நினைப்பாகத் தானே இருக்க வேண்டும்! நல்ல வேளை



ரயில்வே கேட் பியூன் :—என் ஐயா, காரைக் கொண்டு வந்து கேட்டிலே மோதுகிறீர்களே? 'கேட்' மூடியிருப்பது உங்கள் கண்ணில் படவில்லையா?

காரில் இருப்பவர் :—சத்தம் போடாதே, அப்பா! காரை நிறுத்துவதற்காகத்தானே கேட்டில் கொண்டு வந்து மோதினேன்!

யாகச் சாத்துக்குடிப் பழக்காரன் வந்தான்; இவன் சாயமும் வெளுத்தது.


இவ்வாறெல்லாம் நினைத்து மனம் வெதும்பினான் கஸ்தூரி. நினைக்க நினைக்க ஆறவில்லை அவனுக்கு. கோபமும், துயரமும் வேதனையும் மாறி மாறி அவன் உள்ளத்தில் எழுந்து அவனை வதைத்தன. ஆயிரமாயிரம் ஈட்டிகளை ஏககாலத்தில் அவனுடைய மயிர்க்காலுக்கு மயிர்க்கால் யாரோ செலுத்துவது போலிருந்தது. பாவம், இருக்காதா பின்னே? ஒன்றரை வருஷத்துக்கு முன் புஷ்பாவை அவன் மணந்தபோது தன்னைக் காட்டிலும் பாக்கியவான் இம் மூவுலகிலும் இருக்க முடியாது என்று எண்ணிப் பூரித்திருந்தான்; இறுமாந்திருந்தான். ஆனால் அவன் நினைத்தது அவ்வளவும் பகற்கனவாக அல்லவா முடிந்து விட்டது!

அப்பொழுதிருந்த மன நிலையில் அந்த வஞ்சகி வந்ததும் அவள் கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா என்று தோன்றியது அவனுக்கு. பெரும் பிரயத்தனம் செய்து தன்னை அடக்கிக் கொண்டு யோசனை செய்தான். அதற்குள் அவசரப்படக் கூடாது. இன்னும் கொஞ்சம் இவள் நாடகத்தை ரஸிக்க வேண்டும். இவளுடைய திருட்டுக் காதலனுக்கு இங்கே புறப்பட்டு வரும்படி இவள் கடிதம் எழுதுவாள். அந்தக் கயவனும் வருவான். அப்போது பார்த்துக் கொள்ளலாம். இரண்டு பேரையும் சரியாக மண்டகப்படி நடத்தி மரியாதை செய்யலாம்! அதுதான் சரி. இப்போது இவள் வந்ததும் கடித விஷயம் எதுவுமே தெரியாததுபோல் நடந்து கொள்ள வேண்டும். இவள் என்ன செய்கிறாள் என்பதையும் அதி ஜாக்கிரதையாகக் கவனித்து வரவேண்டும்.—இவ்வாறு முடிவு பண்ணிய கஸ்தூரி விரைவாக எழுந்து அந்தக் கடிதத்தை முன்பிருந்தபடியே பெட்டியில் வைத்து விட்டு மீண்டும் நாற்காலியில் வந்து சாய்ந்து கொண்டான்.

புஷ்பா வந்தாள். கணவனின் முகம் வியாதியில் அடிபட்டவன் போலிருப்பதைப் பார்த்து விட்டு, "என்ன, உங்கள் முகம் ஏன் இப்படியிருக்கிறது?" என்று கேட்டாள். கஸ்தூரி வெறுப்புடன் தனக்குள் சிரித்துக் கொண்டான். 'என்ன கரிசனம்? இன்னுமா நான் முட்டாள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டு விடுவோமா என்று ஒரு கணம் அவனுக்குத் தோன்றியது. ஆனால் அடுத்த கணமே அதை அடக்கிக் கொண்டு, "ஒன்றுமில்லையே! சற்றுத் தலைவலிமாதிரியிருக்கிறது!" என்றான்.

"தலைவலிமாதிரி இருக்கிறதா? அசல் தலைவலி இல்லையா?" என்று நகைத்த வண்ணம் கேட்ட புஷ்பா, "கொஞ்சம் கெட்டிக் காப்பியாகப் போட்டுக் கொண்டு வந்து தருகிறேன்; சாப்பிடுங்கள். தலைவலி சிட்டாய்ப் பறந்து விடும்!" என்றாள்.

'உன் சிரிப்பும், சாகசமும் இனிமேலுமா என்னிடம் பலிக்கும்! எத்தனை நாட்கள்தான் ஒருவனை ஏமாற்ற முடியும்?' என்று எண்ணிய அவன் மேலுக்கு, "எனக்குக் காப்பியும் வேண்டாம், கீப்பியும் வேண்டாம். போய் உன் வேலையைக் கவனி!" என்றான்.



"நான் சொல்வதைக் கேளுங்கள். ஒன்றும் தடுத்துப் பேசாதீர்கள். உங்களுக்கு எது வேண்டும், எது வேண்டாம் என்பது எனக்குத்தான் தெரியும்" என்று கூறிய புஷ்பா அவன் மீண்டும் எதுவும் கூறுவதற்குள்ளாகச் சமையலறைக்குப் போய் விட்டாள்.

'இப்படிப் பேசிப் பேசித்தானே என்னைச் சர்வ முட்டாளாக அடித்து விட்டாய்! இனி மேல் உன் பாச்சா பலிக்கப் போவதில்லை. விழித்துக் கொண்டு விட்டான் கஸ்தூரி' என்று எண்ணிய கஸ்தூரிக்கு அவள் கொடுக்கும் காப்பியை வாங்கிச் சாப்பிடக்கூட விருப்பமில்லை. என்றாலும் அவசரப்பட்டுத் தன்னுடைய வெறுப்பை வெளியிட்டு விடக் கூடாது என்று தீர்மானித்துச் 'சாப்பிட்டு வைப்பது' என்று முடிவு செய்தான்.

காப்பியைக் கொண்டு வந்து கொடுத்த புஷ்பா அவன் காப்பி சாப்பிட்டதும், "ஒரு வேடிக்கை நடந்திருக்கிறது. உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேனே! இருங்கள், இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

'என்ன வேடிக்கை எனக்கு இவள் காண்பிக்கப் போகிறாள்! இவளே ஒரு

வேடிக்கை, இவனுடைய லீலைகளும், நடிப்பும் அதை விடப் பிரமாதமான வேடிக்கையாச்சே!'—இவ்வாறு சென்றது கஸ்தூரியின் சிந்தனை.

உள்ளிருந்து திரும்பிய புஷ்பா கஸ்தூரியிடம் ஒரு கவரைக் கொடுத்து, "முட்டாள் ஒருவன் கண்டபடி பிதற்றியிருக்கிறான், பாருங்கள்!" என்றாள். கஸ்தூரி சற்று நேரம் முன்பு படித்த அதே கடிதந்தான் அது. 'எதற்காக இதை என்னிடம் காட்டுகிறாள்? இவளுடைய நாடகத்தில் இன்னொரு காட்சியோ இது?' என்று வியப்புடன் எண்ணிய கஸ்தூரி கடிதத்தைப் பிரித்துப் படிப்பது போல் பாவனை செய்தான்.

அவன் 'படித்து' முடிந்ததும் தன் உணர்ச்சிகளையெல்லாம் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு முகத்தையும் சாதாரணமாக வைத்துக் கொள்ள முயற்சித்த வண்ணம், "இவன் யார், புஷ்பா?" என்று கேட்டான்.

"காளிதாஸ மகாகவியின் மறு அவதாரம்" என்று சிரித்தவண்ணம் கூறினாள் புஷ்பா.

"ஆமாம், ஆமாம். அப்படித்தான் தோன்றுகிறது. வர்ணனை பிரமாதமாக இருப்பதிலிருந்தே தெரியவில்லையா? ஆமாம், உனக்கு இவனை வெகு நாட்களாகவே தெரியுமோ?" என்று தன் முகத்தைக் கம்பீரமாக வைத்துக் கொண்டு கேட்டவாறே புஷ்பாவின் முகபாவத்தைப் படிக்கலானான்.

"இவன் என் தூரத்து உறவினன். அத்தை பிள்ளையாக வேண்டும். சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்து விட்டவன். எங்கள் வீட்டிலிருந்து படித்துக் கொண்டிருந்தான். சிறு வயதில் எங்கள் இருவரையும் அகமுடையான், பெண்டாட்டி என்று தமாஷாகக் கூறிப் பெரியோர்களெல்லாம் பரிகாசம் செய்வது வழக்கம். அதையே பெரியவனான அப்புறமும் நினைத்துக் கொண்டு, என் மேல் இவன் 'காதல்' கொண்டு விட்டான் போலிருக்கிறது! இதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்கு இவன் மீது எத்தகைய 'காதல்' உணர்ச்சியும் இதுவரை உண்டானதில்லை. எனக்குக் கல்யாணம் செய்யும் பொருட்டு வரன் வேட்டையில் இறங்கிய போது அப்பா இவன் ஜாதகத்தையும் பார்த்தார். எங்களிருவருக்கும் யாதொரு பொருத்தமுமில்லாமல் இருக்கவே, அப்பா அதை அதோடு விட்டுவிட்டார். என்னைத் தனக்குக் கொடுக்கவில்லை என்று சேஷாத்ரிக்கு ரொம்ப வருத்தம் போலிருக்கிறது. அதனால்தான் நம் கல்யாணத்திற்குக் கூட அவன் வரவில்லை. அப்புறம் அவனை நான் சந்திக்கவும் இல்லை. இன்று இந்த உளறல் கடிதம் வந்திருக்கிறது" என்று முடித்த புஷ்பா தன் கையில் வைத்திருந்த இன்னொரு கடிதத்தைக் கணவனிடம் கொடுத்து, "அவனுக்குப் பதில் எழுதி வைத்திருக்கிறேன். இதையும் படித்துப் பாருங்கள்!" என்றாள். கஸ்தூரி ஆச்சர்யத்துடன் படிக்கத் தொடங்கினான்.



பிச்சைக்காரன்:—அம்மா, ஏதாவது உங்களுக்கு வேண்டாததை இப்படி விட்டெறியுங்க!

வீட்டுக்காரி:—சரி, கொஞ்ச நேரம் பொறுத்து வா! மாமியார் கிணற்றுக்குப் போயிருக்காங்க, வரட்டும்!

சேஷாத்ரி,

விவேகமுள்ளவனுகிய, படித்தவனுகிய உனக்கு ஏன் இவ்வித எண்ணம் தோன்றியது? உன் புத்தித் தாழ்வைக் குறித்து நான் மிக்க துயரமடைகிறேன். நீ கடிதத்தில் எழுதியிருப்பதெல்லாம் பைத்தியக்காரப் பிதற்றல்கள். தவறான உன் போக்கைச் சீக்கிரத்தில் திருத்திக் கொள்வது நலம். தயவு செய்து என்னை மறந்து விடு. என்னைச் சந்திக்கவோ, அல்லது இம்மாதிரியெல்லாம் கடிதமெழுதவோ முயற்சிக்காதே.

என் கணவர் மிகுந்த பெருந்தன்மையுள்ளவர். அதனால்தான் நான் தப்பினேன். வேறொரு மனிதராயிருந்தால் நீ இவ்வாறு உளறிக் கொட்டியிருப்பதற்கு என் கதி என்னவாகியிருக்குமோ? நினைக்கவே என் உள்ளம் நடுங்குகிறது.

என் கணவருக்குத் தெரிந்து, அவருடைய அனுமதியுடன் நான் உனக்கு இக்கடிதம் எழுதுகிறேன். இதிலிருந்தே என் கணவர் எவ்வளவு விசால இருதயம் படைத்த உத்தமர் என்பதை நீ ஊகித்துக் கொள்ளலாம்.

என்னை அடியோடு மறந்துவிட நீ முயற்சிப்பது நம்மிருவருக்குமே மிக்க நன்மை பயக்கும்.

இங்ஙனம்,

புஷ்பா

இதைப் படித்ததும் கஸ்தூரியின் இருதயத்தில் புகைந்து கொண்டிருந்த அக்கினி அவிந்து குளிர்ந்து விட்டது. அவன் சிந்தையில் கவிந்து கொண்டிருந்த சந்தேக மேகங்கள் விலகின. 'இத்தகைய வெள்ளை உள்ளம் படைத்த உத்தமியைச் சந்தேகித்தோமே' என்ற வேதனையால் அவனுடைய உள்ளம் தவித்தது.

"ஏன், நான் எழுதியிருப்பது சரிதானே?" என்று கேட்டாள் புஷ்பா.

"இதையெல்லாம் நீ என்னிடம் காண்பிக்க வேண்டுமா, புஷ்பா? உசிதமான காரியம் எது என்பது நீ தீர்மானிக்க வேண்டிய சமாசாரம் அல்லவா? நீ ஆட்டுவிக்கிறபடி ஆடவேண்டிய வெறும் பொம்மை தானே நான்?" என்று கூறி நிஷ்களங்கமாகி விட்ட மனத்துடன் சிரித்தான் கஸ்தூரி!

ஆத்ம இன்பம்

வே. லக்ஷ்மி

கானம்! வேணுகானம்!! வேய்ங் குழலின் இனிய கானம்! எங்கிருந்தோ மனதை மயக்கும் இசை நாதம் காற்றுடன் கலந்து வந்தது.

நானும் என் நண்பன் இளங்கோவனும் அதி காலையில் 'அழகர் மலை' அடிவாரத்தில் உலாவிக் கொண்டிருந்தோம். காற்றுடன் கலந்து வந்த அந்த இசை வெள்ளம் எங்கள் உணர்வை அடக்கி உள்ளத்தை மகிழச் செய்தது. ஆகாயமளாவ உயர்ந்து நிற்கும் அழகர் மலையும் அவ்வின்னிசையால் சலனமற்றுக் காணப்பட்டது. அம் மலைச் சிகரங்களில் படிந்திருந்த பனிக்கூடமும் அவ்விசையின் இனிமையில் உருகி ஓடலாயின. சுற்றியிருந்த மரம் செடிகளும் அந்த இன்ப இசையில் திளைத்து ஆனந்தத்தால் பனி நீர்த் துளிகளைச் சிந்தியது. அருகில் இருந்த தடாகத்தில் உள்ள தாமரை மலர்கள் அம் மாய இசையினால் மலர்ந்து மணம் வீசியது. மரக்கிளைகளில் உட்கார்ந்திருந்த பறவைகள் அத் தீங்குழலின் சுவையைப் பருகியபடி அசைவற்றுச் சித்திரம் போல் காணப்பட்டது. எங்களையும் எங்கள் சுற்றுப்புறத்தையும் இவ்வாறு செயலொடுங்கச் செய்த அக் குழலிசை ஏனோ 'டக்' கென்று நின்றது. அந்த இசை திடீரென நின்றதும் என் உள்ளமும் உடலும் ஏதோ ஒன்றைப் பறி கொடுத்து விட்டதைப்போலத் 'துடி துடி'க்கலாயின. "அடாடா! என்ன இனிமையான இசை" என்று வாய் விட்டுக் கூறினேன்.

என் நண்பன் இளங்கோவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். "ஆண்டவன் சித்தத்தை அறிய யாரால் முடியும்! இந்த இசையை இசைத்த இசைவாணனின் வாழ்க்கை ஒரு புதிர். காட்டில் மலர்ந்த மலரைப் போலவும், கையற்ற ஊமையின் கற்பனைகளைப் போலவும் இவ் வுன்னத கீதம் உலகிற்குப் பயனற்றுப் போய்விட்டது" என்றான்.

"ஏன் அப்படி" என்றேன் நான்.

"அது ஒரு பெரிய கதை. சொல்லுகிறேன் கேள்" என்று ஆரம்பித்தான் இளங்கோவன்.

நானும் ஆவலுடன் கதையைக் கேட்க அவன் முகத்தைப் பார்த்தேன்.

* * *

நண்பர்கள் என்ற பெயருக்கே எடுத்துக் காட்டாக அவர்கள் இருந்தார்கள். சிறு வயதிலிருந்தே ஒன்றாகப் பழகியவர்கள். நல்ல குடும்பங்களில் பிறந்தவர்கள். அதைப் போலவே அவர்களுடைய பெயரும் பொருந்தியிருந்தது. ஒருவர் பெயர் சுந்தரம், இன்னொருவர் பெயர் மூர்த்தி.

மூர்த்தியின் தாய் அவனுடைய சிறு வயதிலேயே இறந்து விட்டாள். அவன் பொருட்டே அவன் தந்தை மறு மணம்கூட செய்து கொள்ளவில்லை. ஆதலால், மூர்த்திக்கு வேறு உடன் பிறந்தவர்கள் கிடையாது. ஆனால் சுந்தரத்துக்குத் தாய், தந்தை, சகோதரன், சகோதரி எல்லாரும் இருந்தனர். அவர்கள் இருவரும் பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் ஒன்றாகவே படித்து வந்தார்கள். சுருங்கச் சொன்னால் ஈருடலும் ஓருயிருமாக இருந்து வந்தனர் என்றுதான் சொல்ல வேண்டும். விதியின் வலிமையாலோ அல்லது வேறு எதனாலோ, அவர்களுக்குக் குழலிசைப்பதில் இச்சை உண்டாகியது. இருவரும் குழலூதப் பழகினார்கள். வளர்ந்து வந்த அவர்கள் நட்பினைப் போலவே குழல் ஊதுவதிலும் அவர்கள் திறமை வேகமாக வளர்ந்து வந்தது.

அன்று அந்த நகரத்தின் ஒருபுறம் இருந்த ஏரிக் கரையில் அவ்விரு நண்பர்களும் உட்கார்ந்திருந்தார்கள். வழக்கமாக அவர்கள் மாலை வேளையில் அங்குதான் வருவார்கள். அவர்கள் குழல் ஊதிப் பழகும் இடமும் அதுதான்.

மனோகரமான மாலை வெய்யில் லேசாக மஞ்சள் வர்ணத்தை எங்கும் தீட்டிக் கொண்டிருந்தது. எதிர்க் கரையில் இருந்த புஷ்பக் காட்டிலிருந்து வந்த மணம் ஏரிக் காற்றின் ஜிலுஜிலுப்புடன் கலந்து விட்டது. அவர்களைச் சுற்றிலும் தனிமை இன்பம் நிறைந்திருந்தது. இவை யாவும் சேர்ந்து ஒரு கனவுலகத்தை அவர்களுக்கு முன் சிருஷ்டித்தது. அக்கனவு உலகத்தில் நுழைந்து குதூகலத்துடன் குழலூதத் தொடங்கினார்கள் அந்த நண்பர்கள். அடாடா! என்ன இனிமை! எத்தனை ஜிலுஜிலுப்பு! எவ்வளவு குழைவு! அந்த இனிய கீதத்தின் சக்தியால் பகலவனும் சிறிது சிறிதாகக் கரைந்து மறைந்து விட்டான். மல்லியும், முல்லையும் மலர்ந்தன. அல்லியும், ஆம்பலும் நெகிழ்ந்து இதழ் பிரிந்தன. வெண்ணிலவும் வெளிப்பட்டது. இளந் தென்றலும் இசையுடன் கலந்து விட்டது. பொங்கி வழிந்து கொண்டு இருந்த புன்னாகவராளி ராகம் சிறிது சிறிதாக அடங்கி முடிவுக்கு வந்தது. அக் குழல் இசை ஓய்ந்ததும் ஏதோ ஒன்று 'சர சர' வென்று ஓடும் சத்தமும், அதைத் தொடர்ந்து, "அந்தப் பாம்பு! அதோ ஓடிவிட்டது!" என்ற குரல் ஒலியும் காதில் விழுந்தன. தங்களைத் தவிர வேறு மனிதர்களும் அங்கு இருக்கிறார்கள் என்பதை அப்பொழுதுதான் அந்த நண்பர்கள் உணர்ந்தார்கள். "பாம்பா, எங்கே!" என்று பீதியுடன் கேட்டார்கள். அவர்களுக்கு எதிரே நின்று கொண்டிருந்தவர்களைப் பார்த்ததும் அப்படியே திக்பிரமை அடைந்தார்கள். "என்ன இது! இத்தனை நேரம் நாம் செய்த கான ஆராதனையின் பயனாக சாட்சாத் 'சரஸ்வதி' தேவியே பிரத்யட்சமானளோ என்று அவர்களுக்குத் தோன்றியது.

ஆம்; உண்மைதான்! அவர்கள் முன்னின்ற பெண்மணியின் அழகும், அலங்காரமும் அப்படித்தான் இருந்தன. பால்வண்ண சேலையிலே, தேவமாதினை ஒத்த அந்த எழில் நங்கையின் வதனத்திலே அச்சமும், ஆவலும், நகையும், நாணமும், கலந்து காணப்பட்டன. வசீகரம் பொருந்திய அவள் முகத்தில் 'கரு கரு' வென்று சுழன்ற கண்களும், அக்கண்களின் ஜீவ ஒளியை மறைக்கத் துடி துடிப்பது போல் காற்றில் அலைந்து விழும் அவள் முன் நெற்றிக் கூந்தல்களும், அவள் அணிந்திருந்த சிவப்புக் கரையிட்ட வெண் பட்டாடையும், சிவந்த உதடுகளின் நடுவில் முத்தைப் போல் மின்னிய பல் வரிசையும், பார்ப்பவரை ஒரு கணம் திகைப்புறச் செய்தன.

வெண் மணி மாலைகள் மார்பினில் அசைந்தாட, வெண் சங்கு வளையல்கள் கரங்களில் இனிமையாக ஒலி செய்ய, கரிய குழலில் சூட்டியிருந்த வெண் மலர்கள் மணம் வீச, அப்பெண்மணி சாட்சாத் சரஸ்வதி தேவியைப் போலத்தான் இருந்தாள்.

அவளே முதலில் தன் குமுத வாயைத் திறந்து அமுதம் போன்ற இனிய குரலில் பேசினாள். "ஆகா! என்ன அற்புதமான கானம்! பட்ட மரமும் தளிர்க்கும், பாம்பும் படமெடுக்கும் கானம்! அடாடா! அந்தப் பாம்புதான் எப்படி ஆடி அடங்கியது! அது என் மனத்தை விட்டு அகலவில்லை. எனக்கு இப்பொழுதுகூட பயமாயிருக்கிறது" என்று நடுங்கியபடியே கூறினாள்.

"ஆம், அம்மா சரஸ்வதி, உத்தமமான இசைதான் அது. அதன் மேன்மையால்தானே அந்தப் பாம்பும் பரவசமடைந்தது" என்று அப்பெண்ணுடன் இருந்த பெரியவர் கூறினார்.

சுந்தரமும் மூர்த்தியும் புன்னகை பூத்தனர்.

அந்தப் பெரியவர் மேலும் பேச ஆரம்பித்தார். "இசை அன்பர்களே! என்னை முல்லையூர் தனபாலப் பிரபு என்பார்கள். இவள் என் ஒரே மகள் சரஸ்வதி. இவளுடைய கல்வியின் பொருட்டு நாங்கள் இ கு தங்கியிருக்கிறோம். இன்று இந்தப் பக்கமாக நாங்கள் உலாவ வந்தோம். உங்கள் இசை விருந்து கிடைத்தது! தெவிட்டாத அதன் இனிமையால் நேரம் சென்றதே தெரியவில்லை" என்று கூறிப் பாராட்டினார்.

அன்று முதல் சுந்தரம், மூர்த்தி, சரஸ்வதி மூவரும் நெருங்கிப் பழகி அளவளாவி வந்தனர்.

இப்படி இரண்டாண்டுகள் சென்றன. அவர்கள் படிப்பும் முடியும் தருவாயை அடைந்தது. இப்பொழுதெல்லாம் அவர்கள் ஒருவரை ஒருவர் பிரிய வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் தோன்றி அவர்கள் பேச்சுக்களிலும் புகுந்தது.

இந்நிலையில் ஒரு நாள் தனபாலப் பிரபு, தன் மகள் சரஸ்வதியைக் கூப்பிட்டார். "இந்த வருஷத்துடன் உன் படிப்பு முடிவடைந்து விடும். ஆகையால் உனக்கு விவாகம் செய்ய எண்ணுகிறேன். உன் தாயும் என்னைத் தொந்தரவு செய்கிறாள்" என்று சொல்லி விட்டு, தாம் அவளுக்காகப் பார்த்துள்ள ஐந்தாறு வரன்களைப் பற்றியும் அவளிடம் கூறினார்.

தந்தை கூறுவதைக் கேட்ட சரஸ்வதி "இப்போதென்ன விவாகத்தைப் பற்றி அவசரம்! நம் நண்பர்களின் இசையைக் கேட்க இன்று வருகிறீர்களா, அப்பா!" என்று பேச்சை மாற்றினாள்.

"சரஸ்வதி! நீ அப்படிச் சொல்லக் கூடாது. உன் விவாகத்தைப் பற்றி இனியும் கவனியாதிருக்க முடியாது. ஆனால் உன் இஷ்டத்துக்கு மாறாக நான் ஒன்றும் செய்ய மாட்டேன். நான் சொன்ன வரன்கள் உனக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்லி விடு. அந்த இசைவாணர்களில் ஒருவரை நீ மணக்க விரும்பினாலும் நான் அதற்குத் தடை செய்ய மாட்டேன்" என்றார்.

"சரி, அப்பா! சற்று வெளியே போய் வந்து பிறகு பேசலாம்" என்று கூறி எழுந்தாள்.

ஏற்கனவே இசைவாணர்களைப் பிரியவேண்டும் என்ற எண்ணத்தால் கிளறப்பட்டிருந்த சரஸ்வதியின் மனத்தில், அவள் தந்தையால் விவாகம் என்ற விதை நடப்பட்டதும், அது பலப் பல பிரச்னைகளைக் கிளப்பிக் கொண்டு முளைக்க முற்பட்டது. தந்தை கூறிய மற்ற வரன்களை எல்லாம் தள்ளிக் கொண்டு இசை நண்பர்கள் அவள் மனக்கண் முன் தோன்றினார்கள். இவர்களில் யாரை மணப்பது! இதை எப்படி முடிவு கட்டுவது! இருவரிலும் அழகு மிகுந்தவர் யார்! சுந்தரமா! மூர்த்தியா! இருவருமே அழகுள்ளவர்தானே! குழல் ஊதுவதிலும், இருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களாக எனக்குத் தோன்றவில்லையே!

இரட்டையர்களா அவர்கள்! இல்லை வேறுபாடும் உண்டு. எதில் வேற்றுமை! அதுதான் எனக்குத் தெரியவில்லை. வயதில் ஒழுக்கத்தில் திறமையில் இருவரும் சமமே. என்ன யோசித்தும் ஒரு முடிவு காண முடியாது தவித்தாள், சரஸ்வதி.



இச்சமயத்தில் அவள் தந்தை அவளை மறுபடியும் விவாக விஷயத்தைப் பற்றி அவள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி வற்புறுத்தினார்.

"என்னை விட மாட்டீர்கள் போல் இருக்கிறதே. இந்த இசை நண்பர்களில் நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்களோ, அவரை மணக்க எனக்குச் சம்மதம் அப்பா!" என்றாள் சரஸ்வதி.

ஒரு விதமாக விவாகத்துக்குச் சரஸ்வதியின் சம்மதம் பெற்ற தனபாலப் பிரபு, குழலூதும் இசை நண்பர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஒரு புது வழியைக் கையாண்டார்.

* * *

கலைகளில் எல்லாம் மேன்மையானது இசைக் கலைதான். அதிலும் குழல் ஊதுவது தெய்வாம்சமானது. இக்கலையில் பரிபூரணமாய்ச் சாதனை பெற்ற ஒருவன், மற்ற துறைகளில் எல்லாம் உயர்ந்தவனாய்த்தான் இருப்பான் என தனபாலப் பிரபு எண்ணினார். ஆகையினால், இவ்விருவரிலும் எவன் சிறந்த இசையா

னரோ, அவனுக்கே தன் மகள் சரஸ்வதியை மணம் செய்விப்பதென்று தீர்மானமாக முடிவு செய்து கொண்டார்.

பெயர் பெற்ற சங்கீத வித்வான்களையும் சிறந்த ரசிகர்களையும் கொண்ட ஒரு சபையைக் கூட்டி அச்சபையின் முன் இருவரையும் குழல் வைதச் செய்து, யார் சிறந்தவர் என்பதை அறிந்து விடத் தீர்மானித்தார். அதன்படியே நண்பர்கள் இருவருக்கும் இரு கடிதங்களை அனுப்பினார்.

"இசை அன்பர்களே,

மிகச் சிறந்த வித்வான்களுக்கும் கலாரசிகர்களுக்கும் ஒரு விருந்தளிக்கப் போகிறேன். அப்பொழுது உங்கள் இசை விருந்தை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன், மற்றொரு முக்கியச் செய்தியையும், உங்களுக்கு அறிவித்து விடுகிறேன். உங்கள் இருவரில் ஒருவரை என் மருமகனாகவும், என் அருமைக் குமாரி சரஸ்வதியின் கணவனாகவும் ஏற்றுக் கொள்ள நான் பெரிதும் விரும்புகிறேன். ஆதலால், அக்கலைஞர்கள் மூலம் உங்களில் உயர்ந்த இசையாளனுக்கு என் மகளை மனைவியாக்க எண்ணியுள்ளேன். இப்படிக்கு, உங்கள் அன்புள்ள,

தனபாலப் பிரபு."

இந்தமாதிரி கடிதங்களை அந்த நண்பர்களுக்கு அனுப்பிய பிறகு சரஸ்வதியின் தந்தை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருந்தார்.

நண்பர்களின் காலை உணவிற்கு பின், அவர்கள் தத்தம் அறையில் இளைப்பாறிக் கொண்டிருக்கும்போது, பிரபுவின் கடிதம் அவர்களுக்குக் கிடைத்தது. அதைப் படித்த அவர்கள் திகைத்தார்கள். அவர்கள் உள்ளத்தில் கடுமையான புயல் வீச ஆரம்பித்தது. பகல் உணவின் போது சந்தித்துக் கொண்ட அவர்கள், ஒன்றும் பேசவில்லை. அவர்களால் பேச முடியவில்லை. அன்று மாலை குழல் ஊத ஏரிக்கரைக்கும் போகவில்லை. இரவு உணவும் கொள்ளவில்லை. படுக்கையிலும் உறக்கமில்லாது புரண்டு புரண்டு படுத்தனர்.

அவர்கள் மனக்கண்முன், ஒரு முறை மஞ்சள் பட்டு உடுத்திப் பிச்சி மலரை மைக் கூந்தலில் முடித்துக் கொண்டு, பிறை போன்ற நெற்றியில் செஞ்சாந்து அணிந்து கொண்டு, தாங்கள் இசைக்கும் இசையில் ஆழ்ந்து அறிவிழந்தவளைப் போல் காணப்படும் சரஸ்வதியும், மறு முறை சிவந்த பட்டு உடுத்தி, ரத்தினாபரணங்கள் தரித்து, செந்தாமரை மலரைக் கருங்குழலில் சூட்டிக் கொண்டு 'கல கல' வென்று சிரித்துச் சிரித்துப் பேசும் சரஸ்வதியும், பிறிதொரு முறை, எளிமையும், தூய்மையுமான அலங்காரத்துடன் ஆடியும், பாடியும் தன் கலைச் சிறப்பைக் காட்டும் சரஸ்வதியும், மாறி மாறித் தோன்றி அவர்கள் உள்ளத்தைத் துடி துடிக்கச் செய்தாள். இரவு முழுவதும் எப்படிப் பதில் எழுதுவதென யோசித்துத் தவித்த நண்பர்கள் விடியற் காலையில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஆளுக்கொரு கடிதம் எழுதிப் பிரபுவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அன்று பகல் தனபாலப் பிரபு அக்கடிதங்களை தன் மகள் சரஸ்வதிக்குப் படித்துக் காண்பித்தார்.

"பிரியமுள்ள பிரபுவுக்கு,

மூர்த்தி எழுதிக் கொள்வது. உங்கள் கடிதம் கண்டேன். வந்தனம். சரஸ்வதியை மனைவியாக அடைபவன் மிகவும் பாக்கியசாலியே ஆவான். அவள் பொருட்டு எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ள நான் தயார் என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். —மூர்த்தி."



"ஏன் ஸார், பாகிஸ்தான் சம்பந்தமாகப் பேப்பரிலே ஏதேனும் செய்தி வந்திருக்கிறதா?"

"வேண்டியது வந்திருக்கிறது. கொஞ்சம் இருங்கள். அந்தச் செய்தி வந்த பக்கத்தை அப்படியே பாகிஸ்தான் பண்ணிக் கொடுத்து விடுகிறேன்!"

"தனபாலப் பிரபுவுக்கு,

எளியேன் சுந்தரம் எழுதிக் கொள்வது. உங்கள் கடிதம் கண்டேன். விவரமறிந்தேன். நான் குழலூதப் பழகியது என் ஆத்ம இன்பத்துக்காகத்தான் போட்டியிட அல்ல. ஆகவே, என் அருமை நண்பனுடன் போட்டியிட நீங்கள் என்னை மறுமுறையும் வற்புறுத்தாமலிருக்க வேண்டுகிறேன். இனி எந்தச் சபை முன்னும் குழல் இசைப்பது இல்லை என்று சரஸ்வதி தேவியின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். —சுந்தரம்."

தந்தை அக்கடிதங்களைப் படிக்கக் கவனமாகக் கேட்ட சரஸ்வதி தீனமான குரலில், "அப்பா! எனக்கொன்றும் புரியவில்லையே!" என்றாள்.

"குழந்தாய், இதோ பார்! இருவர் கடிதத்திற்கும் உள்ள வேற்றுமைகளை. சுந்தரத்தின் கடிதத்தில் உன்னைப் பற்றிய பேச்சே இல்லை. ஆனால் மூர்த்தியின் கடிதத்தில் உன்னை மனைவியாகப் பெறுபவன் பாக்கியசாலி என்று எழுதியிருக்கிறான். அடுத்ததாக, சுந்தரம் தன் ஆத்ம இன்பத்துக்காகவே குழலிசைப்பதாகக் கூறுகிறான். எனக்குத் தெரிந்த மட்டும், ஆத்ம இன்பத்தை நாடுபவர்கள் எப்போதும் உலக இன்பத்தில் இச்சையற்றே யிருப்பார்கள். மேலும், உற்றார் உறவினர் அற்றுத் தந்தை ஒருவருடன் இருக்கும் மூர்த்தியை நீ மணந்தால் அவன் நம்முடனே தங்கி நம் செல்வங்களையும், உன்னையும் பார்த்துக் கொள்வது சுலபம். ஆதலால் மூர்த்தியே உன்னை அடைவதற்கு எல்லாவிதத்திலும் தகுந்தவன்" என்று விவரித்துக் கூறினார் தனபாலப் பிரபு.

"அப்பா! உங்கள் அபிப்பிராயம் எதுவோ அதுவே என் அபிப்பிராயமும்!" என்றாள் சரஸ்வதி.

பிரபுவின் தீவிர விடாமுயற்சியால் சரஸ்வதியும் மூர்த்தியும் கணவன் மனைவியுமாயினர். சில நாளில் மூர்த்தி தன் தந்தையுடன் பிரபுவின் வீட்டிலேயே வசிக்கலானான்.

பிரிவு நண்பர்களை வாட்டிய தென்றாலும், மூர்த்தியின் மனத் தாபத்தைப் போக்கும் மருந்தாக சரஸ்வதி யிருந்தாள். அதற்கு நேர் மாறாக, சுந்தரத்தின் மன ஏக்கத்தை அதிகப்படுத்தும் சம்பவங்கள் நேர்ந்து வந்தன.

சுந்தரத்தின் தந்தை நடத்தி வந்த வியாபாரம் பலத்த நஷ்டமடைந்து அதனால், மனமுடைந்த அவர் படுத்த படுக்கையாகப் படுத்து விட்டார். அவருடைய பெரிய குடும்பம் வறுமையில் சிக்கி அல்லல் பட்டது. சுந்தரத்தின், படிப்பின் மூலம் கிடைத்த குமாஸ்தா வேலையின் வருமானம், அவர்கள் குடும்பத்திற்குப் போதவில்லை.

இவைகளைப் பற்றி யெல்லாம் கொஞ்சம் கேள்விப்பட்ட நண்பன் மூர்த்தி ஏதாவது பணவுதவி செய்ய எண்ணிச் சுந்தரத்தை அணுகினான். ஆனால், சுந்தரம் அவைகளை மறுத்து விட்டான். சுந்தரம் உண்மைக் கலைஞன் அல்லவா! அதனால் தானே அவன் பெண்மையையும், இசைக் கலையையும் ஒன்றிற்காக ஒன்றை அடிமையாக்க விரும்பவில்லை. ஆனாலும் என்ன! எந்த லட்சியமும் பசிக்கு முன் பஞ்சாய்ப் பறந்து விடும் அல்லவா! அதுதான் அவன் வாழ்க்கையிலும் நடந்தது.

வீட்டின் ஏழ்மை தாங்காது அவன் தாய், அவனுடைய இசைக்கலையின் மூலம் அவனை ஏதாவது பொருள் தேடும்படி அடிக்கடி வற்புறுத்தினாள். தாயின் தொந்தரவும், அக்குடும்பத்தைக் காக்க வேண்டிய கடமையும், அவனைத் தவிக்கச் செய்தது. நீண்ட யோசனைக்குப் பிறகு சுந்தரம் ஒரு சபாவில் கச்சேரி செய்ய ஒப்புக் கொண்டான்.

கச்சேரிக்கு ஒரு வாரம் இருக்கும் போது அச்சபாவின் காரியதரிசி சுந்தரத்திடம் வந்து பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சின் முடிவில் சாதாரணமாகச் சிரித்துக் கொண்டே "மிஸ்டர் சுந்தரம் நீங்கள் கொடுத்த ஆணையை மறந்துவிட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் எங்கள் சபாவில் கச்சேரி செய்ய வேண்டிய தேதியை மறந்து விடாதீர்கள்" என்றார்.


இந்த சகஜமான வார்த்தைகள் சுந்தரத்தின் மூளையை மின்னலைப் போல் தாக்கி யிருக்க வேண்டும். அவன் உரத்த குரலில் 'நான் பாவி! பிரபுவுக்குக் கொடுத்த சத்தியத்தை மறந்தவன்" என்று கூறித் தலையில் 'பளார் பளார்' என்று அறைந்து கொண்டான். அடுத்த கணம் வீட்டை விட்டு வெளியே ஓடினான்.

அன்று முதல் சுந்தரம் சித்தஸ்வாதீனமற்றுத் திரிகிறான். ஆற்றங் கரையிலும், பயங்கரக் காட்டின் நடுவிலும், மலர் வனத்திலும், மலை உச்சியிலும், காலையிலும், மாலையிலும், இருளிலும், நிலவிலும், அவனுக்கு இஷ்டமானால் அற்புதமாகக் குழல் ஊதுவான். ஆனால் யாராவது மனிதர்கள் இருக்கும் அரவம் கேட்டால் குழல் ஊதுவதை நிறுத்திவிட்டு ஓடி விடுவான். என்று ஒரே மூச்சாகக் கூறி அந்தச் சோகக் கதையை முடித்தான் இளங்கோவன்.

"ஆஹா! உத்தம நண்பர்களின் குழலிசை கேட்டு மயங்கி வந்த பெண்மை என்ற பாம்பானது, தன்னைப் போற்றிப் பணிந்தவனுக்கு மாணிக்கம் போன்ற இன்பத்தையும் தன்னை உதறித் தள்ளியவனுக்கு கொடிய நஞ்சைப் போன்ற துன்பத்தையுமன்றோ அளித்துவிட்டது" என்றேன் நான்!

"அப்படிச் சொல்லாதே. ஆத்ம இன்பத்துக்காகவும் அருமை நண்பனின் சுகத்துக்காகவும் தன் அருமையான இல்லற வாழ்க்கையைத் தியாகம் செய்து விட்டான் சுந்தரம் என்று சொல்லு" என்றான் என் நண்பன் இளங்கோவன்.

மலான் அலறுகிறார்!



"ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையரல்லாதாரால் வெள்ளையருக்கு எப்போதும் அபாய நேரலாம்; அதற்குத் தயாரா யிருக்கவேண்டும்!" —டாக்டர் மலான் தென்னாப்பிரிக்கா பிரதம

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி


5. சிரசாசனம்


ஒன்றரை அடி அகலம் இரண்டடி நீளத்தில் ஒரு துணி மடிப்பைத் தயார் செய்து கொள்ள வேண்டும். பருத்தியிலான துப்பட்டியை மடித்துத் தயார் செய்து கொள்ளலாம். அல்லது சாதாரணத் துணிகளை மடித்தும் தயார் செய்து கொள்ளலாம். ஒன்றரை அல்லது இரண்டங்குல கனமுடையதா யிருக்க வேண்டும். ஆரம்ப சாதகர்கள் சிரசாசனத்தை முதலில் சுவரின் ஓரமாகத்தான் செய்ய வேண்டும்.

மடிப்பைச் சுவருக்கு ஒட்டினாற்போல் வைத்துக் கொள்ளவும், மடிப்பிற்கு அரை அடி தூரத்தில் முழங்கால்களை மடித்து அடுத்த பக்கங்களில் வெளியாகி யிருக்கும் படங்களில் முதல் சித்திரத்திலுள்ளபடி உட்காரவும். இரண்டு கை விரல்களை நன்றாகக் கோர்த்துக் கொண்டு இரண்டாவது சித்திரத்திலுள்ளபடி முழங்கை வரையில் மடிப்பில் இருக்கும்படி வைத்துக் கொள்ளவும். உச்சந் தலை, மடிப்பில் படும்படி மூன்றாவது சித்திரத்திலுள்ளபடி தலையை இரண்டு கைகளுக்கும் மத்தியில் வைக்கவும். பிறகு முழங்கால்களைத் தரையை விட்டுத் தூக்கிப் பாதங்களின் விரல்கள் மட்டும் தரையில் இருக்க நாலாவது சித்திரத்தில் இருப்பது போல் நிற்கவும். கூடுமானவரை உடலை உயர்த்திக் கால்களைச் சிரசின் சமீபம் மடிக்காமலேயே கொண்டு வந்து, சற்று மூச்சைப் பிடித்துக் கால்களை உதைத்துக் கொண்டு மேலே தூக்கி ஐந்தாவது சித்திர நிலைக்கு வரவும். இப்பொழுது முழங்கால்கள் மடக்கிய பாகங்கள் சுவரை ஒட்டியிருக்கும்படி செய்யவும். அதாவது ஆறாவது சித்திரம் போல. பிறகு முழங்கால்களை நேராகத் தூக்கி இரண்டு பாதங்களையும் நேராக நீட்டி எதிரே உள்ள சித்திர நிலைக்கு வரவும். இந் நிலையில் வேண்டிய நேரமிருந்து கால்களை மடக்கிப் படிப்படியாய் ஆறாவது ஐந்தாவது சித்திர நிலைக்கு வந்து, கால்களை இறக்கி நாலாவது சித்திர நிலைக்கு வரவும். பிறகு விரிப்பில் உடலை நன்றாக நீட்டிப் படுத்து, உடலைத் தளரவிட்டுக் கண்களை மூடிக் கொண்டு இளைப்பாறவும்.

நாலாவது சித்திர நிலையிலிருந்து கொண்டு மூச்சைப் பிடித்து, ஆறாவது சித்திர நிலைக்கு வந்த பிறகு மூச்சை சாதாரணமாய் விடவும் இழுக்கவும் செய்யலாம்; படபடப்புக் கூடாது.

ஆரம்பத்தில் சுவர் துணையாக யிருந்து பழகிக் கொண்டு, பிறகு சிறிது சிறிதாகச் சுவரின் உதவியில்லாமல் செய்ய முயற்சிக்க வேண்டும். ஒரு சிலரைத் தவிர மற்றவர்களெல்லாம், சிரசாசனம் செய்ய உடலைத் தூக்கிச் சுவரில் சாற்றும் போது உடல் முழுவதும் சுவரில் சாய்ந்தே இருக்கும். சில நாட்களில் குதிக் கால்கள் மட்டும் சுவரில் வைத்து மற்ற பாகங்கள் சுவரை விட்டு விலகித் தனியாய் நேராய் இருக்க முயற்சி செய்ய வேண்டும். பின்னும் சில நாட்கள் பொறுத்து ஒரு காலை மெதுவாகச் சுவரை விட்டுக் கிளப்பி முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். ஒரு காலைச் சுலபமாய்க் கொண்டு வந்து விடலாம். ஆனால் இரண்டாவது காலைக் கொண்டு வருவது தான் சிறிது கஷ்டம். சிலர் நிலை தவறி, பக்கங்களிலோ, முன் பக்கமோ விழுந்து விடுவார்கள்.





மிக ஜாக்கிரதையாக இரண்டாவது காலையும் சுவரை விட்டு எடுக்க வேண்டும். லேசாய்ச் சுவரின் பிடிப்பு அதிகமில்லாமல் காலை வைக்க முடிகிறதா வென்று பார்த்துக் கொள்ளவேண்டும். பிறகு ஒரு விநாடி காலைச் சிறிது விலக்கிப் பார்த்து மறுபடியும் சுவற்றில் வைத்து விட வேண்டும். மறுபடி காலை ஒரு விநாடி விலக்கிப் பார்ப்பது, விழுந்து விடும்போலிருந்தால் மறுபடியும் சுவற்றின் ஆதாரவைத் தேடுவது. இவ்வாறு சிறிது சிறிதாக முயற்சி செய்து கொண்டே வந்தால் சில நாட்கள் அல்லது சில மாதங்களில் சுவரின் உதவியில்லாமலேயே தனியாய் நிற்க வரும். எந்த இடத்திலும் சிரசாசனம் போடலாம்.

ஆரம்ப சாதகர்கள் சிரசாசனத்தில் அதிக நேரம் இருக்கக் கூடாது. கால் அல்லது அரை நிமிஷமே இருக்கலாம். பிறகு இறங்கி விட வேண்டும். முதலில் இரண்டு மூன்று தடவை சிரசாசனத்தை முயற்சி செய்து நிற்கலாம். சரியாய் நிற்க வந்த பின் நிற்கும் நேரத்தைச் சிறிது சிறிதாக அதிகப் படுத்திக் கொண்டே போகலாம். அதே சமயம் சுவரின் உதவியில்லாமல் செய்யச் சிறிது சிறிதாகப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். முதல் வாரத்தில் அரை நிமிஷம் வீதம் மூன்று தடவை செய்யலாம். அதற்கு அடுத்த வாரங்களில் வாரத்திற்கு ஒரு நிமிஷமாக நேரத்தை அதிகமாக்கிக் கொண்டே போகலாம்.

சிரசாசனம் குறைந்தது பத்து நிமிஷம் வரைக்கும் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். அதிகமானால் அரை மணி நேரத்திற்குமேல் போகக் கூடாது. ஒரே தடவையில் பத்து நிமிஷமோ அரை மணியோ செய்ய வேண்டுமென்பதில்லை. முடிந்தவர்கள் செய்யலாம். முடியாதவர்கள் இரண்டு அல்லது மூன்று தடவைகளில் செய்து பூர்த்தி செய்து கொள்ளலாம். ஒவ்வொரு தடவைக்கும் இடையில் ஒன்று அல்லது இரண்டு நிமிஷ நேரம் காலை நீட்டிப் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும்.

• • •

முதலில், சிரசாசனம் செய்ய ஆரம்பிக்கும் போது, மனத்தில் பயமோ, பதட்டமோ கூடாது. மனதில் தைரியமும், அமைதியும் அவசியம் வேண்டும். அப்படி மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள முடியாதவர்கள், மற்ற ஆசனங்களைச் செய்து, உடலை உறுதிப்படுத்திக் கொண்டு, தயார் செய்து கொள்ள வேண்டும். அப்பொழுது, 'சரி இந்தச் சிரசாசனத்தையும் நம்மால் செய்ய முடியும்' என்ற முடிவு ஏற்படும். அதன்பின் சிரசாசனம் செய்யலாம். முதலில் எடுத்ததும் யாரும் சிரசாசனத்தைப் பழகக் கூடாது. அப்படிப் பழகினால் ஏதாவது சங்கடங்கள் ஏற்படும். இத்தனைநாள் யாதொரு பயிற்சியும் இல்லாத உடலைத் தலை கீழாக உடனே திருப்பி நிறுத்துவது சரியல்ல. அப்படிச் சிலர் செய்து ஏதாவது ஏற்பட்டால், பழியைச் சிரசாசனத்தின்மேல் போட்டு விடுவார்கள். அம்மட்டோடு மாத்திரம் விட மாட்டார்கள். சிரசாசனம் செய்வதனால் என்னென்னமோ கெடுதிகள் ஏற்படும் என்றும் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

சிலர் கால்களை ஊன்றி உதைத்து மேலே தூக்கிச் சுவரில் சாத்தும்போது கழுத்து வளைந்து, தலை நழுவி, உடல் கோணல் மாணலாய் விடும். அச்சமயம் சிலருக்குக் கழுத்தைச் சுளுக்கிக் கொள்ளலாம். முதலில் கை விரல்களை உறுதியாய்க் கோத்துக் கொண்டு சரியானபடி தலைக்கு ஆதரவாய்ப் பின் பக்கம் தலையைப் பிடித்தாற்போல் வைத்துக் கொண்டு, முழங்கை வரை மடிப்பில் நன்றாக ஊன்றிக் கொண்டால், இம்மாதிரி யெல்லாம் ஏற்படாது. ஒவ்வொரு படியையும், நன்கு கவனித்துச் சரியாய் இருக்கின்றதா என்று பார்த்துச் செய்தால் நல்லது. சிலர் தலையைக் கீழே ஊன்றினதும், உடனே பல்டி அடித்தாற் போல் செய்து, எப்படியோ எக்கச் செக்கமாக ஒரு மூலையில் நின்று விடுவார்கள். சிலர் தலையணையைப் போட்டு, இரண்டு கைகளைத் தரையில் ஊன்றி நின்று விடுவார்கள். சிரசாசனத்தில் பழக்கமுள்ளவர்கள் எப்படிச் செய்தாலும் அவர்களுக்கு ஒன்றும் ஆகாது. ஆனால் புதிய சாதகர்கள் கவனித்து முறைப்படிப் பழக வேண்டும். சிலர் சுவரின் மூலைகளில் சிரசாசனம் செய்வார்கள். அப்படிச் செய்து பழகி வந்தாலும் பரவாயில்லை.

ஆரம்ப சாதகர்களுக்கு, கழுத்தைச் சுளுக்கிக் கொண்டால், அந்த வலி போகுமட்டும் ஆசனங்கள் செய்வதை நிறுத்திவிட வேண்டும். விளக்கெண்ணெய் தடவி விட்டுக்கொண்டு வெந்நீர் ஒரு நாளைக்கு இரண்டு தடவை விட்டு வந்தால் குணமாகி விடும். பிறகு மறுபடியும் ஜாக்கிரதையாய்ச் சிரசாசனத்தை ஆரம்பிக்க வேண்டும். சிலருக்குச் சிரசாசனம் செய்ததும் தலை சுற்றுவது போல்


இருக்கும். மயக்கம் ஏற்படும். வாந்தி வருவது போலுமிருக்கும். அப்படி யிருந்தால் அவர்கள், ஆசனம் செய்வதற்கு அரைமணி அல்லது ஒரு மணி நேரத்திற்கு முன் வீசம் படி—நான்கு அவுன்ஸ்—பால் சாப்பிடலாம். ஆனால் பால் சாப்பிட்டவுடனே ஆசனம் செய்யக்கூடாது. ஆசனம் செய்ததும் பால் சாப்பிடக்கூடாது. அரை மணி நேரம் பொறுத்தேதான் எதையும் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் தலை கிறுகிறுப்பு, மயக்கம், வாந்தி முதலியன உண்டாகா.

சிலருக்குத் தானாகக் கால்களைத் தூக்கிச் சுவரில் சாத்த வராது. தூக்கினும் எங்கு விழுந்து எக்கச்சக்கமாகி விடுமோ என்ற பயம் இருக்கும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஒருவர் கிட்ட இருந்து உதவி செய்யலாம். சாதகர் நாலாவது சித்திர நிலைக்கு வந்த பின், உதவி செய்பவர் கால்களைப் பிடித்துத் தூக்கி நிமிர்த்திச் சிரசாசன நிலைக்குக் கொண்டு வந்து, கால்களைச் சுவரில் வைக்கும்படி செய்யலாம். அப்படியே பிடித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமே யில்லை. சுவரில் கால்களை வைத்து விட்டால் சுயமாகவே முயற்சி செய்து, சில நாட்களில் சிறிது சிறிதாகச் சுவரை விட்டுக் கால்களைக் கிளப்ப முயற்சி செய்ய முடியும். உதவி செய்பவர் பிடித்துக் கொண்டே யிருந்தால் முயற்சிக்கு இடமில்லாமற் போய் விடுகிறது. சிலர் சிரசாசனத்திலிருந்து இறங்கப் பயப்படுவார்கள். சிலர் எக்கச் சக்கமாக இறங்குவதால், முழங்கால் பாதம் முதலியவைக்கு அடிபடும். சிலர் பக்கங்களில் சாய்ந்து விடுவார்கள். சிரசாசனம் செய்யும் முறையை நன்றாய்ப் படித்து, பதட்டம், பயம் முதலியன இல்லாமல் படிப்படியாய் இறங்க வேண்டும். இல்லையானால் வேறு யாரேனும் உதவி செய்பவர் கால்களைப் பிடித்து நிதானமாக இறக்கியும் விடலாம்.

ஆரம்பத்தில் சிலருக்கு உச்சி வலிக்கும். ஆகையால் எப்பொழுதும் ஆரம்ப சாதகர்கள் சிரசாசனத்தைக் கால் அல்லது அரை நிமிஷத்துக்கு மேல் செய்யக்கூடாது. உடல் கனத்தை முதன் முதலாகச் சிரசு தாங்குவதால் அப்படி வலிக்கும். ஆனால் பிரதி தினமும் பழகிக் கொண்டு வந்தால் சில நாட்களில் அந்த வலி யிருக்காது. சிலர் கடினமான மடிப்பை உபயோகிப்பதால் வலிக்கலாம். மடிப்பு போதுமான கனம் இல்லாமையினாலும் வலிக்கலாம். மடிப்பைச் சிறிது மிருதுவாகவும், உயரமாகவும் ஆக்கிக் கொண்டால் வலிக்காது. மெதுவாய் இருக்க வேண்டுமென்று தலையணையை உபயோகிக்கக் கூடாது. அதில் முழங் கைகள் வரை உறுதியாய் ஊன்ற முடியாது. தவிர, பஞ்சு நிறைந்திருப்பதால் பாரம் அழுத்தின இடத்தில் பஞ்சு விலகிக் கொள்ளும். அதனால் நமக்கு ஒரு சமநிலை ஏற்படாது. ஆகையால் சம உயரமான துணி மடிப்பே நல்லது.

ஆரம்ப சாதகர்கள் சுவரின் உதவியில்லாமல் நிற்க வந்தபிறகு, முதலிலிருந்து ஆரம்பித்துச் செய்யும்போது சுவரில் கால்களை வைக்காமல் தானாக நிற்கப் பழக வேண்டும். சுவரின் ஓரமாகச் செய்தாலும், சுவரின் உதவி நாடாமல் செய்யவேண்டும். சில நாட்களில் மடிப்பை ஒரு அடி மூன்றுக்கு இழுத்துப்போட்டுத் தனியாய்ச் செய்யலாம். பிறகு அறையின் நடுவில் எங்கு செய்தாலும் நன்றாக வரும்.

"சுவரின் உதவியுடன் எப்பொழுதும் செய்தால் என்ன!" என்று சிலர் கேட்கலாம். சிரசாசனத்தில் நமது கவனம் பூராவும் சிரசில்தான்



இருக்க வேண்டும். ரத்தம் மூளைக்கு நன்கு பாய்வதாகவும், மூளை நன்கு போஷிக்கப்படுவதாகவும் அதனால் ஆரோக்கியம் வீரியம் அடைவதாகவும் மனத்தில் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். சுவரோடு கால்களை வைத்துச் செய்தால், மனமும் அங்கு செல்லும். அதனால் மூளைக்கு ரத்தம் பாய்வதில் சிறிது தடை ஏற்படும். ஆரம்பத்தில் எப்படியும் சில மாதங்கள் முயற்சி செய்து சுவரை விட்டுச் செய்யப் பழகிக் கொண்டால் பிறகு எப்பொழுதும் மனத்தை ஒரு இடத்தில் வைத்திருக்கலா மல்லவா!

சிரசாசனத்தில் அதிக நேரம் இருப்பவர்கள், எதற்கும் கடிகாரத்தை முன்னால் வைத்துக் கொண்டு செய்து வருவதுதான் நல்லது.

பெண்கள் சிரசாசனம் செய்யும்போது கால் சட்டை போட்டுக் கொள்வது நல்லது. அப்பொழுதுதான் உடையைப் பற்றி அதிகக் கவனம் செலுத்தாமல் நிம்மதியாய்ச் செய்ய முடியும். இந்த ஆசனத்தை எல்லா வயதினரும் செய்யலாம். ஆண், பெண், சிறுவர், சிறுமியர்கள் எல்லோரும் செய்யலாம். ஆனால், சிறுவர், சிறுமியர்கள் அதிக நேரம் செய்யக்கூடாது. ஏதோ இரண்டு மூன்று நிமிஷங்கள் மட்டும் செய்யலாம். மற்றவர்கள் அதிக நேரம் செய்யலாம். (தொடரும்)

நல்லாடை அணிந்த ஆண்கள்

பளபளப்பான



பாதரக்ஷைகளை அணிகிறார்கள்

உலகில் சிறந்த ஆடைகளை நீங்கள் அணியலாம், ஆனால் பாதரக்ஷைகளை கொண்டுதான் உமது நாகரீகத்தை மதிப்பிடுவார்கள். நல்லாடையுடுத்த ஆண்கள் எல்லோரும் பளபளப்பான பாதரக்ஷையணிகிறார்கள். உலகமெங்கும் வெற்றிக்கு முதல்படியது. பாதரக்ஷையை கவனியுங்கள்—கீவி பாலிஷை உபயோகியுங்கள். அது அவற்றை மென்மையுறக்காப்பதுடன், பளபளப்பாகவும் பிரகாசமாகவும் இருக்கச் செய்கிறது. கீவி பாலிஷ் வேண்டுமென்று கேளுங்கள். எப்போதும் நல்ல தோற்றமளிக்க வேண்டுமென்று கருதுங்கள்.

கீவி



பாலிஷ் செய்யும் போதே
போஷாக்களிக்கிறது.

விநியோகஸ்தர்கள் : ஆர். ஏ. ருட்ஸர் & கோ., மதராஸ் - 1

இருமல், உபாதையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி இவை மூன்றே நிமிஷங்களில் அகற்றப் படுகின்றன.

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா! அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா! பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் சிற்சில உணவுகளையும் உட்கொள்ள முடியவில்லையா!

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ ஓர் புதிய நம்பிக்கையை அளிக்கும். மயக்க மருந்து, புகை பிடித்தல், இஞ்சக்ஷன், ஆட்டோமைஸர் இவை தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின்போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக அகன்றுவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி கபத்தைக் கரைத்து சிரமம் இன்றி ஸ்வாஸத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவிலேயே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 ஆண்டுகளாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ அநேகமாக உடனே குணமளித்து சுவாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக மிஸ்டர் ஜே.ஆர். இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்திவிட்டது. இரண்டு வருஷங்களில் அத்தொந்தரவே அவருக்கு மீண்டும் ஏற்படவில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதும் நேரடியாக இரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறு நாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிற தென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கிறது.

Mendaco

மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது

சந்நியாசினி

டி. எஸ். கே.

கூடத்திலிருந்த சோபாவில் உட்கார்ந்து குழந்தை ராதையைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள் லீலா. அவள் மகன் கண்ணன் அவசரம் அவசரமாக உள்ளே ஓடி வந்தான். "அம்மா! நேத்திக்கு கோவிலிலே பாடிக் கொண்டிருந்தாளே ஒரு சந்நியாசினி, அவர்கள் எல்லோரும் கூட்டமா வராம்மா. வாயேன், நாமும் போய் அவர்களைப் பார்க்கலாம்" என்று அவசரமாக அழைத்தான். பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு வாசல் கேட்டண்டை வந்து நின்றாள் லீலா. நெற்றியில் குங்குமம் பிரகாசிக்க காவி உடை தரித்து கண்ணனின் பாடலைப் பாடியவண்ணம் வந்து கொண்டிருந்தனர் அந்த சந்நியாசினிகள். "ஆடுகிறான் கண்ணன் பாடுகிறான் கண்ணன் ஆனந்த ராதையுடன்" என்ற பாட்டை வெகு அழகாக பாடிக் கொண்டே அந்த வீதியைக் கடந்து சென்றார்கள். நிராசை ததும்பும் கண்களால் அந்தத் தலைமை சந்நியாசினியையே பார்த்துக் கொண்டிருந்தாள் லீலா. ஆனால் அவளோ இந்த உலகத்தையே மறந்து கண்ணன் கழலினையே தஞ்சமென்று கருதிய மீராவைப் போல் சென்று கொண்டிருந்தாள். "நன்றாகப் பாடுகிறார்கள் இல்லையா, அம்மா?" என்ற கேள்வி லீலாவைத் திருப்பியது. உள்ளே வந்து உட்கார்ந்த லீலாவின் மனம் துக்கத்தால் குமுறியது. அவள் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் சினிமாப் படம் போல் அவள் உள்ளத்தில் விரிந்து ஓட ஆரம்பித்தது.

*　　　*　　　*

பாங்கர் ராகவாச்சாரியின் இரு கண்மணிகளாக விளங்கினர் கோமளமும், லீலாவும். ஒரு கிளையில் பூத்த இரு மலர்கள் போல ஜோடியாக இருக்கும் தம் பெண்களைப் பார்த்துப் பார்த்து பரவசமடைவார் ராகவாச்சாரி. சாந்தம், பொறுமை, அடக்கம் இவைகளுடன் விளங்கினாள் கோமளம். இதற்கு நேர்விரோதமாக இருப்பாள் லீலா. துடுக்கான பேச்சு, கலீரென்ற சிரிப்பு, நவநாகரீகமான தோற்றம் இவைகளுடன் கூடிய ஒரு புதுமைப் பெண்ணாகக் காட்சி அளிப்பாள்.

பருவமடைந்த தம் முதல் பெண் கோமளத்தை சப் கலெக்டர் குமாருக்கு மனைவியாக்கிப் பெருமிதம் அடைந்தார் ராகவாச்சாரி. இதற்கு அவர் பார்க்காத ஜோதிடர் இல்லை. கேட்காத ஆருடம் இல்லை. வேண்டாத தெய்வங்கள் இல்லை. பல பெரிய இடங்களையெல்லாம் தள்ளிவிட்டு ஜாதகப் பொருத்தம் ஒன்றுக்காகவே அவர் சப் கலெக்டர் குமாருக்குக் கோமளத்தைக் கொடுத்தார். தன் பெண்ணும் மாப்பிள்ளையும் சந்தோஷமாக வாழ்வதைக் கண்டு மிகுந்த திருப்தியுடன் கண்ணை மூடிவிட்டார்.

மாமனாரின் திரண்ட ஆஸ்தியை விட அவரது இளைய குமாரி லீலாவைத்தான் விரும்பினான் குமார். அவள் பேச்சும் சிரிப்பும் அவன் மனதை மிகவும் கவர்ந்தது. ஆடம்பரப் பிரியனான அவனுக்குக் கோமளத்தின் சாந்தமான தோற்றம் அர்த்தமற்றதாக இருந்தது. ஆனால் குழந்தை கண்ணனிடம் தன் உயிரையே வைத்திருந்தான் குமார்.

ஒருநாள் குழந்தை கண்ணனுக்கு நல்ல ஜுரம். அன்று குமாரும் லீலாவும் சினிமாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மெதுவாக அங்கே வந்த கோமளம் தன் தங்கையிடம் "லீலா நீயும் சினிமாவுக்குப் போகப் போகிறாயா? கண்ணனுக்குக் காய்ச்சல் ஜாஸ்தியாக இருக்கிறது. அவனை வைத்துக்கொண்டு தனியாக இருக்க எனக்குப் பயமாயிருக்கிறது" என்றாள். அதைக் கேட்ட குமார் கோபத்துடன் "ஏன் உனக்குத் துணை அவள்தான் வேண்டுமோ? பங்களாவிலுள்ள வேலைக்காரர்கள் எல்லாம் எங்கு போய் விட்டார்கள்! லீலா புறப்படுகின்றாயா இல்லையா?" என்று இரைந்தான்.


"இல்லை அத்திம்பேர் நான் அக்காவிற்குத் துணை இருக்கிறேன். நீங்கள் போய் விட்டு வாருங்கள்" என்று தயங்கியபடி கூறிய லீலா குமாரின் கண்களில் தெறிக்கும் கோபத்தைக் கண்டு பதில் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். படத்தை ரசிக்க முடியாதபடி ஏதோ சஞ்சலம் அவள் மனத்தைக் கவ்வியது. ஒருவழியாகப் படம் முடிந்ததும் வீட்டை அடைந்த குமாரும் லீலாவும் அங்கே கண்ட காட்சி சகிக்க முடியாததாயிருந்தது. குழந்தை கண்ணனின் உயிரற்ற சடலத்தைத் தழுவியபடி கதறிக் கொண்டிருந்தாள் கோமளம். "ஐயோ, அக்கா!" என்று அலறிக் கொண்டே தன்மேல் விழுந்த லீலாவை அணைத்துக்கொண்ட கோமளம் அவள் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

நாட்கள் ஒவ்வொன்றாகப் பத்து தினங்கள் கழிந்தன. அன்று காலையில் எழுந்து வந்த லீலா கோமளத்தை எங்கும் காணாததால் தன் அத்திம்பேரின் அறைக்குள் நுழைந்தாள். அங்கு கண்களில் நீர்வடிய ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தான் குமார். உள்ளே நுழைந்த லீலாவைப் பார்த்ததும் அவன் துக்கத்தினால் "கோமளம்" என்று அலறினான். "ஐயோ அக்காவுக்கு என்ன?" என்று பதறியபடியே அவன் கையிலிருக்கும் கடிதத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தாள்.

" அன்புள்ள கணவருக்கு;

வாழ்க்கையில் நாமாக செய்து கொள்ளும் தவறுகளுக்கு விதியின் மேல் பழி போடுகிறோம். அந்தவகைய தவறுகளுக்கு உதாரணம் நாம் இருவரும். உங்களுடைய நவநாகரீக ஆசைகளுக்கும் என் அமைதிக்கும் மலைக்கும் மடுவுக்கும் உண்டான பொருத்தம்தான். இந்த மாபெரும் தவறு நம்மால் உண்டானதல்ல. சாஸ்திரம், சகுனம், ஜாதகம் இவைகளால் ஏற்பட்டது. என் தந்தையின் சோதிட பக்தியால் ஏற்பட்டது.

உங்களுக்கு ஏற்றவள் நான் அல்ல; வானம்பாடி போலக் கவலையற்று உலாவும் லீலாதான். ஆனால் என்னுடைய வாழ்வின் சின்னமான கண்ணனுக்காக உங்களுடைய அலட்சியத்தையும் அதிகாரத்தையும் பொருட்படுத்தாமல் அமைதியாக வாழ்ந்து வந்தேன். அகால முடிவடைந்த என் கண்ணனின் மரணம் என்னைத் துயரத்திலாழ்த்தி விட்டது. அவனைத் தவிர வேறு குழந்தைகளுக்குத் தாயாக என் மனம் விரும்பவில்லை. ஆகவே என் சகோதரி லீலாவை மணந்து கொண்டு சௌக்யமாய், சந்தோஷமாய் வாழும்படிக் கேட்டுக் கொள்கிறேன். லீலாவும் இதை மறுக்க மாட்டாள். உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குக் கண்ணன் என்று பெயர் வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நமஸ்காரம். இது தான் என் கடைசிப் பிரார்த்தனை. கோமளம்."



அதைப் படித்து முடிந்ததும் லீலா தன் துக்கத்தைக் கண்ணீராகக் கொட்டினாள்.

* * *

ஏழு வருஷங்கள் ஓடி மறைந்தன. லீலாவுக்கு இரு குழந்தைகள் இருந்தனர். அக்காவின் வேண்டுகோளின்படி பையனுக்குக் கண்ணன் என்று பெயரிட்டான். பெண்ணின் பெயர் ராதை. குழந்தைகளின் விளையாட்டிலும் செல்வச் செருக்கிலும் நாளடைவில் கோமளத்தை மறந்து விட்டான் குமார். ஒரு கணமேனும் பிரியாமல் ஒன்றாகவே விளையாடும் தன் குழந்தைகளைப் பார்க்கும்தோறும் தன் சகோதரியை நினைத்தும் தன் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணி எண்ணி ஏங்குவாள் லீலா.

'இப்படித்தான் நானும் அக்காள் கோமளமும் சின்ன வயதில் விளையாடிக் கொண்டிருந்தோம். அடாடா! அப்பொழுதெல்லாம் அக்காள் என்மீது எவ்வளவு அன்புடன் இருப்பாள். எனக்காகத் தன்னுடைய எந்தப் பொருளையும் கொடுத்து விடுவாளே! ஆமாம்; இப்பொழுதுதான் என்ன? எனக்காகத் தானே அவள் இந்த வீட்டையே விட்டுப் போய்விட்டாள்' என்று நினைத்தபோது அவள் கண்களில் அவளையும் அறியாமல் நீர் பெருகி வழிந்தது. என்ன இருந்தாலும் சகோதரி வாஞ்சை போகுமா? இரத்தபாசம் அல்லவா?

ஒரு நாள் கோவிலுக்குச் சென்ற லீலா அங்கு கூட்டமாக நின்று பஜனை செய்யும் பெண்களைக் கண்டதும் அப்படியே திகைத்து நின்று விட்டாள். அவர்களுக்குத் தலைமையாக நின்று பாடும் சந்நியாசினி தன் சகோதரி கோமளம்தான் என்று தெரிந்து கொண்டாள். அவ்வளவுதான் அத்தனை பெரிய கூட்டத்தையும் லட்சியம் செய்யாமல் தான் கலெக்டர் மனைவி என்பதையும் மறந்து ஓட்டமாகச் சென்று அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டாள். "அக்கா! என்னை மன்னித்து விடுங்கள். வீட்டிற்கு வந்து உங்கள் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். என் குழந்தை கண்ணனின் விளையாட்டில் நீங்கள் ஆறுதல் அடையலாம். ராதையின் மழலையில் உங்கள் மீதிக் காலத்தையும் அமைதியாகப் போக்கலாம். அக்கா! உங்களை என்னால் மறக்க முடியாது. என்னுடன் வந்து விடுங்கள்" என்று மிகவும் உருக்கமான குரலில் கெஞ்சினாள். கண்களில் நீர் வடிய வாதாடும் லீலாவைப் பார்த்த கோமளம் புன்னகை செய்தாள்.

"லீலா! எனக்கு இந்த உலகில் ஒரு பொறுப்பும் கிடையாது. வீடோ உறவினரோ செல்வமோ எதுவுமே இல்லை. என் கண்ணனும் ராதையும் என் இதயத்திலே விளையாடி இன்மொழிகள் பேசி என்னை ஆறுதலும் அமைதியும் அடையச் செய்கிறார்கள். அதைத் தவிர வேறு பந்தம் எதுவும் எனக்கு வேண்டாம். நீ போய் வா அம்மா. உன் சகோதரி இறந்து விட்டாள் என்று எண்ணி ஆறுதல் அடை" என்று கூறினாள் கோமளம். சாந்தி ஒளி வீசும் அவள் கண்கள் வானவெளியை நோக்கின.

"அம்மா! எனக்குப் பசிக்குது அம்மா! சாதம் போடேன்" என்ற கண்ணனின் குரலைக் கேட்டதும் லீலாவின் சிந்தனை கலைந்தது. அவள் பரபரப்பாகத் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து சென்றாள்.

நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



"நான் எப்பொழுதும் மக்ளீன்ஸ் உபயோகிக்கிறேன். ஏனெனில் அது என் பற்களை வெண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறதென்று என் தாய் சொல்கிறாள்"

அவள் செய்து நாளிக்கிறாள். அவளது பிரகாசமான புன்னகையைப்பாருங்கள்! பளபளப்பும், ஆரோக்கியமுமிளிரும் பற்களை பாருங்கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையால் தினமும் இரண்டுதரம் அவள் சுத்தம் செய்து கொள்ளுகிறாள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும், பற்களை வெண்மையாகவும், ஒரே சமயத்தில் விளங்கும்படி செய்கிறது. அதனால்தான் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான புத்திசாலித்தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு தடவை மக்ளீன் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யும்படி கூறுகின்றனர்.

இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!




HTY-1 TAM

விபரமான விவரங்களுக்கு: ஜே. எல். மார்கன், லின் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.



கடாவ் வாயில்
ஸ்ரீ கடாவ் மகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கம்பனி லிமிடெட்
மில்: பைகுலா, பம்பாய் - ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய். துணிக்கடை: மூல்ஜி ஜேதா மார்க்கெட், கோவிந்த் சௌக், பம்பாய் 2.



எல்லாவித தையல் வேலைகளுக்கும் ஸிங்கர் 206K10

தையல் மிஷின்

மிக நேர்த்தியான அம்சங்களுக்குப் பேர்போன இந்தத் தையல் மிஷின் பின்வரும் தையல் வேலைகளுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளது:— இழைத் தையல், வியன்னு வேலை, கரைத்தையல், அலங்கார வளைவுத் தையல், ஜாலர் வேலைகள், பித்தான் காசா வேலை, பித்தான் தையல், லேஸ் தையல், பல்வேறு பொருத்து வேலைகள், சிச்சலு வேலை, எம்பிராய்டரி, சித்திரத் தையல்கள் முதலியன.

ஆகையினால் அது தையற்காரர்கள், பள்ளிக் கூடங்கள், ஸ்திரீகளுக்கு நாகரீக ஆடைகள் செய்வோர், தொப்பி தைப்பவர்கள் ஆகியோருக்கு இன்றியமையாதது.


ஸிங்கர்*

* ஸிங்கர் மானுபாக்சரிங் கம்பெனியின் ஒரு டிரேட் மார்க்.

LAS. (B)

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


இக் கைகள் அழகை
உருவாக்குகின்றன, ஆனால்...



... உருவாக்கும் கைகளும்கூட
அழுக்கு அடைகின்றன!

அழுக்கடைந்த கைகள்
மறைந்திருக்கும்
அபாயத்தைத்
தாங்குகின்றன !

அழுக்கில் கண்களுக்கு
புலப்படாத கிருமிகள் இருப்பதால்!



லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களை காப்பாற்றுகிறது !

L. 177-50 TM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

